**இனமுரண்பாடு** விஞ்ஞான ரீதியான வரலாற்று ஆய்வுத் தொடர்

# தேசம்

சர்வதேச தமிழ்ச்சஞ்சிகை □ இதழ் 03 □ ஓகஸ்ட் 1998 □ 1.25வுண்



## வேண்டும் சமாதானம்

ஆசிரியர் தலைப்பு

அமெரிக்கா US$ 2.50. கனடா Can $3.00. பிரான்ஸ் Fr 13.00. ஜேர்மனி DM 3.00
அவுஸ்திரேலியா Aus $3.00 ஸ்கன்டிநேவியன் நாடுகள் Kr 13.00. ஏனைய நாடுகள் £2.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BABU AUTO

**Quality Service Cost Less at BABU AUTO.**

Servicing.

Mechanical Repairs.

Clutches.

Brakes.

Engine.

Gear Box.

Exhausts.

Electrical Work.

M.O.T Work.

## பாபு ஓட்டோ

மோட்டார் வாகனங்களில் ஏற்படும் சகல விதமான திருத்த வேலைகளும் குறைந்த செலவில் நிறைவானதாக செய்து கொடுக்கப்படும்.

**Contact-BABU**

**262, Collingwood Road, Sutton, SM1 2NX.**

**Telephone-0181 644 8981 Mobile-0836779678**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை ☐ இதழ் 3 ☐ ஓகஸ்ற் 1998 ☐ விலை £1.25

## இந்தியா

இந்திய அரசியல் களம்..............................04
துடுப்பு இல்லாத ஓட்டி
கட்சிகள் பெற்ற தீர்ப்பு
ஒரு நாடு ஒரு மக்கள் ஒரு கலாச்சாரம்
இன்று முகம் கொடுக்குமா இந்தியா?

## இலங்கைத் தீவு

இலங்கை - இன முரண்பாட்டின் வரலாற்றுக் கரு..........................................12

## சமூகம்

மாறாத சமூகம் மாற்றம் தேடும் பெண்கள்..15
ஈழத்துப் பெண்கள்
போராட்டக் குழுக்களும் பெண்களும்
யுத்தம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள்

## குற்றமும் சட்டமும்

மரண தண்டனை...........................................23
ராஜீவ் கொலை வழக்கு
கேள்வி எழுப்ப முடியாத தவறு
இது ஒரு தீர்வு?

## மூன்றாம் உலக நாடுகள்

21ம் நூற்றாண்டிலும்.................................29

## யுத்த தளபாடங்கள்

பேரழிவிற்கான ஆயுதங்கள்.........................33
உ.இ ஆயுதங்கள் V சர்வதேச சமூகம்
அமெரிக்காவும் வளைகுடாவும்
கண்காணிப்பு
அதிபயங்கரவாதம்

## நூல் ஆய்வு

யாழ் நூல் நிலையம் - ஓர் ஆவணம்..........39

ஆசிரியர் தலைப்பு.........................................02
நாளைய செல்வங்கள்......................................11
கடமை நேரத்தில் நிருபர்கள் கொலை.....14
எமது விடுதலை - கவிதை...........................28

படங்கள் எமது நூல் நிலையத்தில் கையகப்படுத்தும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், மற்றும் வெளியீடுகள், நூல்களில் இருந்து பெறப்பட்டது. அவற்றிற்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.





இச் சஞ்சிகை தேசம் வெளியீட்டாளர்களால்; 22 யூன் 1998ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Editor**
**Thesam**
The International Tamil Magazine

வட அயர்லாந்து இலங்கைத் தீவிற்கு முன் உதாரணமாகாதா?????

# அழியும் கோலங்கள்

இந்த நூற்றாண்டின் மிகவும் நிறுவனமயப்படுத்தப்பட்டதும் நீண்ட போராட்ட வரலாறை கொண்டதுமான வட அயர்லாந்து ஆயுதப் போராட்டம் இன்று சமாதான வழிக்கு திசை திருப்பப்பட்டுள்ளது. இது சமாதான விரும்பிகளுக்கு குறிப்பாக வட அயர்லாந்து மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்திருக்கின்றது. மேயில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், 94% வட அயர்லாந்து மக்கள் வரையப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள்.

ஒப்பந்தங்கள் வெறும் காகிதங்களாக கருதப்படாமல் மக்களின் உண்மையான பிரச்சனைக்கு சரியான தீர்வாக இருந்தால் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட மக்கள் நிச்சயம் அதனை ஏற்றுக் கொள்வார்கள். அப்படியான ஓர் ஒப்பந்தத்தை உருவாக்குவதில் வட அயர்லாந்துப் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் உறுதியாக இருந்த படியால், அங்கு சமாதானம் பிறக்க வழி சமைக்கப்பட்டது.

துரதிஸ்டவசமாக இலங்கைத் தீவில், இனப் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் மக்களுடைய பிரச்சனையாக அதனை பார்க்காமல் தமக்கும் தமது தரப்பிற்கும் இப் பிரச்சனையால் என்ன பலாபலன் என்பதிலேயே குறியாக உள்ளன. இதுவே இன முரண்பாடானது, இன்றுள்ள கொடுமையான உள்நாட்டு யுத்தமாக மாறுவதற்கு காரணமாக அமைந்தது. பாராளுமன்ற சிங்களக் கட்சிகளும் தமிழ் ஆயுத அல்லது அரசியல் குழுக்களும் தமது நலன்களை மக்கள் நலன்களுக்கு மேலாக முன்வைப்பதால், இரு இன மக்களுமே அல்லலுறுகின்றனர். இதனை புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு இரு இனங்களும் இனவாத வலைக்குள் சிக்கியுள்ளன.

கடந்த பதினைந்து வருட உள்நாட்டு யுத்தத்தில் அழிக்கப்பட்ட பொருளாதார, மனித வளங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டிருந்தால், இன்று இலங்கையில் கொரில்லா புலிகளுக்கு பதிலாக இலங்கை புலிப் பொருளாதார (Tiger Economy) நாடாக இருந்திருக்கும். மேலும் பொருளாதார வளர்ச்சியின் பயனாக இரு இனங்களிடையேயும் நல்லுறவு ஏற்பட்டிருக்கும். இன்றும் இதற்கு காலம் கடந்து விடவில்லை. இனப் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் தமது நலன்களை பின் தள்ளி அல்லலுறும் மக்களின் அவலங்களை தீர்க்க முன்வர வேண்டும். அப்படி முன்வராத பட்சத்தில் இலங்கை இனப் பிரச்சனையின் வயது மட்டுமல்ல அதற்கு பலியாகும் உயிர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அது பற்றிய அக்கறை மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறிக் கொள்ளும் எத்தனை பேரிற்கு உண்டு? இந்த உண்மைகள் யாவும் சுதந்திர தகவல் தொடர்பு சாதனங்களின் இயக்கமின்மையால் மறைந்து கிடக்கின்றது. இந்த உண்மைகள் எத்தனை நாட்களுக்கு உறங்கப்போகின்றன?

மேலும் தீவின் இனப் பிரச்சனையானது இன்றும் அந் நாட்டின் உள் விவகாரமாகவே கணிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக தாங்க முடியாத பல கஸ்டங்களை அனுபவித்தும் அவர்கள் சர்வதேச சமூகத்திடம் சரியான முறையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. அப்படி பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய சக்திகள் உருவாகவில்லை அல்லது உருவாக அனுமதிக்கப்படவில்லை. இன்று தமிழ் மக்களின் பிரச்சனைகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் அரசியல் ஏழ்மையால் அம் மக்களின் குரல் அவர்களின் தாயகத்திற்கு உள்ளேயே அடங்கிவிடுகின்றது. இதனால் ஈழத் தமிழ் மக்களின் பிரச்சனைகள் சர்வதேச சமூகத்தை எட்டவில்லை. அதனால் ஈழத் தமிழ் சமூகம் தனித்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக சமதானமும் சம உரிமையும் தூரத்திலேயே உள்ளது.

**Thesam Publication**
**P.O BOX 25710**
**London**
**SW 19 2 ZN**
**United Kingdom**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன முரண்பாடு தமிழ் இளைஞர், யுவதிகளை ஆயுதம் ஏந்த வைத்து கால் நூற்றாண்டு ஆகிறது. 1975ல் மேயர் துரையப்பாவில் இருந்து 1998ல் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் வரை வன்முறைப் போராட்டமானது அளவுப் பரிமாணத்தை அடைந்திருக்கின்றதே ஒழிய பண்புப் பரிமாணம் அடையவில்லை. 1983ல் பெரு வீக்கம் பெற்ற ஆயுதக் குழுக்கள் மக்களின் எஜமானர்களாகியதும் மக்களது தேவைகள் பின்தள்ளப்பட்டது. மக்களுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே முரண்பாடு கூர்ப்படைந்து கொண்டே வந்துள்ளது. இது மக்களையும் போராட்டத்தையும் பிரித்து வைத்துள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் ஆயிரக் கணக்கான மக்கள் தாயகத்தை விட்டு அந்நிய நாட்டிற்கு புலம் பெயர்ந்துள்ளமை.

தீவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் 2,260,000 (2.26மில்லியன்). இனப் பிரச்சனையால் தாயகத்தில் இருந்து நாட்டை விட்டு வெளியேறியோர் 450,00. இது தாயகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களின் சனத் தொகையின் 20%. இதைவிடவும் பல ஆயிரக்கணக்கானோர் தாயகத்தை விட்டு நாட்டிற்கு உள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். பேரினவாதத்தின் சிங்களக் குடியேற்றத்திட்டத்திலும் வேகமாக தமிழின இடப் பெயர்வு நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது.

பதினைந்து ஆண்டுகளில் தமிழ் இனத்தின் மக்கள் தொகையில், தாயகத்தில் 20% ற்கு மேல் வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனப் பிரச்சனையானது மேலும் 15-20 ஆண்டுகளுக்கு தொடர்ந்தால், தாயகத்தில் வாழும் தமிழர்கள் 50% குறைவார்கள். இந் நிலைமட்டுமல்ல, தமிழ் மக்கள் தம்மை அரசியல் ரீதியாக ஒன்றிணைக்காத வரை அவர்களுடைய எந் நிலையிலும் மாற்றம் ஏற்படாது. இங்கு மாற்றம் என்பது அளவை அல்ல பண்பையே சுட்டிக் காட்டுகிறது.

தாயகத்தில் இருந்து வெளியேறிய 13% ஈழத் தமிழர்கள், மேற்கு நாட்டு தலைநகரங்களில் குறிப்பிடத்தக்க அரசியல் பலம் உடையவர்களாக உள்ளனர். இலண்டனில் மேயர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இலங்கையர்கள் உள்ளனர். சுவிஸ் நாட்டில் அந் நாட்டு மக்களுக்கு அடுத்த பெரிய இனமாக ஈழத் தமிழர்கள் உள்ளனர். டென்மார்க்கில் தமிழ் மக்களின் அகதிகள் சம்பந்தப்பட்ட விடயமாக ஆட்சியே மாறியது. இப்படி இருக்கும் போது நாம் ஏன் இவ் அரசியல் பலத்தை ஒன்று திரட்டி சமாதானத்திற்காக குரல் கொடுக்க முடியாது? ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு கட்சி ஊர்வலங்கள் வைப்பது இப் பிரச்சனைக்கு தீர்வை தரமாட்டாது. தலைநகர்களில் எல்லாம் மக்கள் சமாதானத்திற்காக அணிதிரள வேண்டும். தாம் அணிதிரண்ட நாடுகளில் எல்லாம் அந்நாட்டு அரசாங்கங்களை இலங்கை இனப் பிரச்சனையில் தலையிடவும் மத்தியஸ்தம் செய்யவும் நிர்ப்பந்திக்க வேண்டும். இப்படியான ஓர் அரசியல் போராட்டத்திற்கு ஆயுதக் குழுக்கள் ஆதரவளிக்கலாம். ஆனால் தலையீடு செய்வதோ கொடிபிடிப்பதோ உண்மையான நோக்கத்தை மழுங்கடிக்கும். என்று புலம் பெயர்ந்து வந்துள்ள மக்கள், ஈழத் தமிழ் மக்களுக்காக (ஆயுதக் குழுக்கழுக்காக அல்ல) குரல் எழுப்ப ஆரம்பிக்கிறார்களோ அன்று மாற்றங்கள் நிகழ ஆரம்பிக்கும்.

இங்கு இலண்டனில் மேயர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கையர்கள், தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகம் சார்பாக இலங்கையில் சகல இனங்களும் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ தம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். நாமும் ஈழத் தமிழ் மக்கள் படும் சொல்லொணா துயரங்களை மனதில்கொண்டு நமது பகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களை இப் பிரச்சனையில் தலையீடு செய்ய தூண்ட வேண்டும்.

ஆசிரியருக்கு வரும் கடிதங்களில், ஏழுதுவோர் தம் பெயர் முகவரியை தெளிவாக குறிப்பிடவும். நீங்கள் விரும்பினால் உங்கள் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடவும். தொடர்புகளுக்கு இலகுவாகும். மேலும் தங்கள் கடிதங்களில் இடைவெளி தெளிவு இவற்றிற்காக சிறு மாற்றங்கள் செய்யப்படலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்,

உங்கள் சஞ்சிகை 2வது இதழ் கிடைத்தது. அதிலுள்ள விடயங்களை பார்த்த பின் தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்று ஆவல் ஏற்பட்டுள்ளது. மேலும் தேசத்தின் விநியோகம் ஈழத்தில் இன்னும் இல்லை என்றே தெரிகிறது. விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யவும்.

Mr.Shakeeb
Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மக்களின் முடிவான தீர்ப்பு :

# துடிப்பு இல்லாத ஓட்டி

சொ.ரவிராஜ்



ஏறத்தாள £160 மில்லியன் செலவில் இந்தியாவின் 12வது பாராளுமன்ற தேர்தல் மார்ச்சில் ஒரு சில அசம்பாவிதங்களுக்கு மத்தியில் நடந்து முடிந்தது. தேர்தல் முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டது போல் வெளிவந்தது. தமிழ்நாடு மட்டும் கணிப்பு முடிவுகளை பொய்க்க வைத்தது. இந்தியாவின் 100,000 வாக்குச் சாவடிகளில் 600 மில்லியன் மக்கள் புதிய ஆட்சியை அமைக்கும் பொறுப்பை வழங்க தயாராய் இருந்தனர். ஆனால் அவர்கள் தீர்க்கமான முடிவை வேட்பாளருக்கு வழங்க முன்வரவில்லை. மீண்டும் ஓர் தொங்கு பாராளுமன்றத்தையே இந்திய மக்கள் உருவாக்கியுள்ளனர். இத் தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறும் அளவு வெற்றி காணவில்லை. ஆனால் ஐக்கிய முன்னணி பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

**98 தேர்தலின் பின்னணி:**
1996ல் நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய முன்னணி, காங்கிரஸ் உடன் இணைந்து ஆட்சியை அமைத்தது. ஐக்கிய முன்னணியின் தேவகவுடா ஆட்சிக்கு வழங்கிய ஆதரவை காங்கிரஸ் விலத்திக் கொண்டதால் ஆட்சி ஆட்டம் கண்டது. பின்னர் வெளிநாட்டு அமைச்சர் I.K.குஜ்ரால் ஐக்கிய முன்னணியை சார்ந்தவர், ஆட்சி அமைக்க காங்கிரஸ் ஆதரவு வழங்கியது.


நவம்பரில் மீண்டும் ஓர் அரசியல் புயலிற்குள் சிக்கியது ஐக்கிய முன்னணி. இந்த 7 மாத குஜ்ரால் அரசு தன் தந்தையின் படுகொலை சம்பவத்தில் சம்பந்தப்பட்ட தி.மு.கவுடன் (குஜ்ரால் அரசு)கூட்டு வைத்துள்ளது அநீதியானது என கருத்து வெளியிட்டார் பிரியங்கா காந்தி. இது ஜெயினின் குறுக்கு வழியில் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையை தொடர்ந்து எழுந்த புயல் ஆகும். பிரியங்காவின் கருத்தைப் பற்றிக் கொண்ட காங்கிரஸின் அன்றைய தலைவர் சீதாராம் கேசரி பதவி வேட்கையில் தேர்தலுக்கு களம் அமைத்தார். தி.மு.க உறுப்பினர்கள் மூவரையும் பாராளுமன்றத்தின் மந்திரி பதவியில் இருந்து விலக்கும் படி கேசரி கோரினார். ஐ.மு அதற்கு இணங்காததால் காங்கிரஸ் மீண்டும் தன் ஆதரவை விலத்தியது. 2001ம் ஆண்டு வரை இருந்த ஆட்சிக்காலத்தை இரண்டே ஆண்டுகளில் முடிவுக்குக் கொண்டு வந்தது காங்கிரஸ். மிகுதி ஆட்சிக்காலத்தைத் தொடர காங்கிரசும் பாரதிய ஜனதாவும் முயன்றன. ஆனால் ஐக்கிய முன்னணியின் ஆதரவு யாருக்கும் இல்லாததால் ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்க இயலவில்லை. இதனால் மக்கள் விரும்பாத தேர்தல் அவர்கள் வரிப்பணத்தை விரயமாக்கி மார்ச்சில் நடந்து முடிந்தது.

## கட்சிகள் பெற்ற தீர்ப்புகள்:

1998 தேர்தலில் கட்சிகள் வெற்றி கொண்ட ஆசனங்கள்




## ஐக்கியமற்ற ஐக்கிய முன்னணி :

1977, 1989, 1996, 1998 ஆண்டுகளிலேயே காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சிக்கு வந்துள்ளன. அதிலும் இப்போதைய தேர்தலுக்கு முன்னைய தேர்தல்களில் காங்கிரஸில் இருந்து பிரிந்த குழுவினரே மாநிலக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டனர். 77ல் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட மொராஜி தேசாய், இந்திராவின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர். 89ல் பதவி ஏற்ற வி.பி.சிங் ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர். 1996ல் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் பலர் காங்கிரஸில் ஒரு காலகட்டத்தில் முக்கிய கடமைகளை ஆற்றியவர்களே. மேலும் ஐ.மு காங்கிரஸின் ஆதரவுடனேயே ஆட்சி அமைத்தது. முதல் மூன்று தடவைகளும் உருவான கூட்டரசானது எதிர்க்கட்சிகளின் கூட்டினால் ஏற்படுத்தப்பட்டது. இக்கூட்டானது ஆட்சி பீடம் ஏறியதும் குழப்பத்திற்குள் தன்னை உட்படுத்திக் கொண்டது.

மேலும் பாராளுமன்றத்தில் தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான பெரும்பான்மை இக் கூட்டரசாங்கத்திற்கு இல்லாமல் போனதால் உறுதியான முடிவுகளை எடுக்க முடியாமல் போனது. இதனால் உறுதியான நிலையான ஆட்சியை இக் கூட்டுக்களால் வழங்க முடியாமல் போனது. மேலும் கூட்டு அரசிற்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் கட்சி(கள்) தம் கட்சி செல்வாக்கை காட்டவும்; தாம் நலன் பெறவும்: ஆதரவை விலத்திக் கொள்வதாக பயமுறுத்துவதும் அல்லது உண்மையிலேயே ஆதரவை விலத்திக் கொள்வதும் நடை முறையாக இருந்துள்ளது. இவையே இவ் ஆண்டு ஐ.மு தோல்வி அடையவும் காரணமாக அமைந்தது.

## மீண்டும் நேரு - காந்தி :

இந்திய மக்கள் கடந்த 50 ஆண்டுகளில் 77-80, 89-91, 96-98 காலப்பகுதிகளைத் தவிர மிகுதி 43 ஆண்டுகளிலும் காங்கிரஸ் ஆட்சியின் கீழேயே வாழ்ந்தனர். இத்துடன் மேற்கூறிய ஆண்டு இடைவெளியுடன் 91-96 காலப் பகுதியையும் தவிர்த்து நோக்கினால் நேரு தலைமைத்துவமே சுதந்திர இந்தியாவின் 80% காலப்பகுதியை ஆண்டுள்ளது.

115 ஆண்டு பழமை வாய்ந்த காங்கிரஸ், மகாத்மா காந்தியின் இந்திய தேசியத்தால் கவரப்பட்டு ஓர் தலைமையின் கீழ் அணிதிரண்டனர். அன்று காங்கிரஸ் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கியதால் மக்களின் மிகுந்த நம்பிக்கையை பெற்றிருந்தது. அன்றைய காங்கிரஸ் தலைவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்ததால் புறச்சூழல் அவர்களை கடமையில் அழுத்தி வைத்திருந்தது.

ஆனால் 1947ல் அதிகாரம் காங்கிரஸின் கைக்கு மாறியதும்; காங்கிரஸிற்கு இருந்த புறச்சூழல் அழுத்தம் இல்லாமல் போனது. அதனால் காங்கிரஸ் மக்களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்ற உணர்வு அற்றவர்களாயினர். அதிகாரங்கள் துஸ்ப்பிரயோகம் செய்யப்பட்டது. இந்திய சுதந்திரத்தோடு ஊழல் இந்தியா முளைவிட ஆரம்பித்தது. 50 ஆண்டுகளில் நேருவின் தன்னிறைவுப் பொருளாதாரமோ, இந்திரா காந்தியின் பசுமை புரட்சியோ நடந்துவிடவில்லை. மாறாக உலகின் சீர்குலைந்த நிர்வாக இயந்திரங்களில் ஒன்றாக இந்திய அரசு இயந்திரம் மாறியது.

காங்கிரஸ் கட்சியானது மிக நீண்ட வரலாற்றைக் கொண்டதாலும் இந்தியா முழுவதும் சீராக விஸ்தரிக்கப்பட்டிருந்ததாலும் வலுவான ஓர் தேசியக் கட்சியாக உள்ளது. மேலும் காங்கிரஸின் முன்னாள் தலைவர்கள் எல்லோரும் சுதந்திரப் போராட்டத்திற்காக தம்மை அர்ப்பணித்தவர்களாக இருந்தனர். இதனால் மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த கட்சியாக காங்கிரஸ் தோற்றமளித்தது. சுதந்திரத்தில் இருந்து முதல் 25 ஆண்டுகளும் காங்கிரஸ் தெரிவானதற்கு மக்கள் காட்டிய நன்றியுணர்வே காரணமாயிருந்தது. ஆனால் அன்றைய சுதந்திரப் போராட்டகால மக்களின் இரண்டாவது சந்ததியின் தேவைகளை நிறைவேற்ற காங்கிரஸ் தவறியது. அதனை நிறைவேற்ற வேறு கட்சிகளும் இருக்கவில்லை. இதனால் வாக்குகள் சிதறி வலுவான ஓர் இந்திய அரசை உருவாக்க முடியாமல் போனது.


கடந்த 12 பாராளுமன்றத் தேர்தல்களையும் எடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினால், காங்கிரஸ் ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதை அவதானிக்கலாம். இவ் வீழ்ச்சியில் பாரிய முறிவை ஏற்படுத்தியது 77 அவச்ரகாலச் சட்டம், கட்டாய கருத்தடை, அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தியது சம்பந்தப்பட்ட வழக்கு ஆகியவையே. இவற்றைத் தொடர்ந்து காங்கிரஸ் குறைந்த வாக்குகளையே (34.5%) கைப்பற்றியது. சுதந்திர இந்தியாவில் காங்கிரஸிற்கு விழுந்த முதல் அடி இது.

மாறாக 1984ல் இந்திரா காந்தியின் மறைவைத் தொடர்ந்து ஏற்பட்ட அனுதாபத்தால் கூடிய ஆசனங்களை காங்கிரஸ் பெற்றுக் கொண்டது. காங்கிரஸின் ஆரம்பகால தேர்தல்களிலும் பார்க்க மிகக்கூடுதலான வாக்குகளை காங்கிரஸ் பெற்றுக் கொண்டது (48.1%). சுதந்திரத்தை தொடர்ந்து நடந்த தேர்தல்களில் 1957லியே 47.8% வாக்குகளை காங்கிரஸ் பெற்றிருந்தது.

இன்றும் காங்கிரஸ் கட்சியே ஒரேயொரு தேசியக் கட்சியாக இருப்பதால் அதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது. ராஜீவ் மரணத்தைத் தொடர்ந்து நடந்த மூன்று தேர்தல்களிலும், கொலைச் சம்பவத்தை காங்கிரஸ் தனது தேர்தல் பிரச்சாரமாக்கியது. சோனியா காந்தி தனது தேர்தல் பிரச்சாரத்தை தனது கணவரும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ராஜீவ் கொலையுண்ட ஸ்ரீபெரம்புத்தூரில் இருந்து ஆரம்பித்தார். ஆனால் அனுதாப அலைக்கு மாறாக பல பிரதமர்களை தந்ததும்




குறிப்பு : 71, 77, 80 களில் நடந்த தேர்தலில் BJP பெற்ற வாக்கு வீதம் தேசத்திற்கு கிடைக்கவில்லை. மேலும் 1984 முதல் தான் BJP தன் சொந்த சின்னத்தின் கொடியின் கீழ் போட்டியிட்டது. BJP என்ற பெயர் 1980 ஏப்பிரலில் தான் வழங்கப்பட்டது. அது வரை BJS - Bharatiya Jan Sangh என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டது.

காங்கிரஸின் கோட்டையுமான உத்தரப் பிரதேசத்தின் அமேதி தொகுதியில் (காங்கிரஸின் அரண்) காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது. நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸின் தோல்விக்கு தான் பொறுப்பேற்று பதவி விலகினார் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி. இவரே காங்கிரஸ், ஐ.மு முறிவிற்கு முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தேர்தலில் காங்கிரஸின் வீழ்ச்சியைத் தடுப்பதில் முன் நின்றவர் சோனியா காந்தி. இவர் பல ஆண்டுகளாக கடைப்பிடித்த அரசியல் மௌன விரதத்தை கலைத்து காங்கிரஸிற்கு ஆதரவாக பிரச்



ஸ்ரீபெரம்புத்தூரில் சோனியாவை காண திரண்டிருக்கும் தமிழ் நாட்டு மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரத்தில் இறங்கினார். நேரு பரம்பரையின் சொத்தான காங்கிரஸ் சீர்குலைவதையும், Bofors ஊழலில் தன் கணவரின் பெயர் களங்கப்படுத்தப்படுவதையும் தாங்க முடியாமல் தான் இவர் அரசியலில் இறங்கினார். எந்தத் துறையில் தன் கணவர் கால் வைக்கக் கூடாது என்று எண்ணினாரோ அதில் தன் கணவரின் பரம்பரையை காப்பாற்ற தானும் காலடி வைத்துள்ளார். இன்று காங்கிரஸின் தலைமை பதவியையும் ஏற்றுள்ளார். இன்று இவர் சுமந்துள்ள பொறுப்பு மிகவும் கடினமானது. இதில் எப்படி சோனியா தன்னை தக்க வைக்கப் போகிறார்; என்பதைப் பொறுத்துத்தான் காங்கிரஸின் எதிர்காலம் உள்ளது.

51 வயது நிரம்பிய விதவையான சோனியா தன் கடந்த 30 ஆண்டுகளை இந்தியாவிலேயே கழித்திருக்கின்றார். அதனால் உலகின் மிகப்பெரும் அரசியல் பாரம்பரியமுடைய நேருகாந்தி அரசியலை நன்கு உணர்ந்தே உள்ளார். இன்று பிளவுபட்டுள்ள காங்கிரஸை ஒன்றிணைத்து புனரமைக்கும் மனோபலம் இவருக்கு உண்டா? நாடு முழுவதும் சோர்விழுந்து சீர்குலைந்துள்ள கட்சியை எப்படிப் புனரமைக்கப் போகின்றார்? போன்ற கேள்விகள் காலத்தை கேட்ட வண்ணம் உள்ளன.

ஓர் இந்திய அரசியல் வாதிக்கு இருக்க வேண்டிய அடையாளங்கள் சோனியாவில் குறைந்தே காணப்படுகின்றது. பிரச்சார மேடைகளில் கையசைக்கவும் புன்முறுவல் செய்யவும் அவர் மகள் பிரியங்காவே சொல்லிக் கொடுக்கின்றார்.



தன் தாய்க்கு இந்திய அரசியல் தந்திரத்தை சொல்லிக் கொடுக்கும் பிரியங்கா; அரசியலில் நுழைந்தால், வாஜ்பாயை அணுகுண்டு காப்பாற்றுமா? ஏனெனில் முதன் முதல் 1974லேயே பிரியங்காவின் அப்பம்மா தானே அதனை பரிசோதித்தார்.

பெரும்பாலானோர் அரசியல் படித்தும் அரசியலில் நுழைந்தும் அரசியல் அறிவு பெறுவார்கள். ஆனால் பிரியங்காவிற்கு அரசியல் அவரது குருதியில் கலந்துள்ளது. 26 வயது நிரம்பிய உளவியல் துறை பட்டதாரியான பிரியங்காவிற்கு இந்திய மக்களின் மனங்களை அறிய வெகு காலம் எடுக்காது. இந்திய மக்களை தலைமை தாங்க அம் மக்களை கவரும் சக்தி வேண்டும். இந்த சக்தியுடன் காந்தி என்ற பெயரையும் தாங்கியுள்ள ஒரே ஒரு இந்தியர் பிரியங்கா காந்தி. இந்திரா காந்தியின் சாயலையும் தலை அலங்காரத்தையும் உடைய பிரியங்கா இளைய இந்திராவாகவே கணிக்கப்படுகின்றார். நாளைய காங்கிரஸின் எதிர்காலம் இவ்விரு பெண்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.



இந்திரா காந்தி



பிரியங்கா காந்தி

## ஒரு நாடு மக்கள் கலாச்சாரம்

200ற்கு மேற்பட்ட இனங்களையும் மொழிகளையும் பல்வேறுபட்ட கலாச்சாரங்களையும் மதங்களையும் 975.8 மில்லியன் மக்கள் தொகையையும் கொண்ட நாடு இந்தியா. இப்பல்லின நாட்டை, இந்திய தேசியம் என்ற பெயரில் ஒன்றிணைத்தார் மகாத்மா காந்தி. இருந்தாலும் இந்த இந்திய தேசியம் முஸ்லீம் மக்களுக்கு இடம் தரவில்லை என்று எண்ணிய ஜின்னா பாகிஸ்தானை பிரிக்கும் படி கோரினார். உலக வரலாற்றில் நிகழ்ந்திரா மானிட இடப்பெயர்வு இந்திய பாகிஸ்தான் எல்லையில் அன்று நிகழ்ந்தது. பிரிடிஷ் இந்தியா, இந்தியா, பாகிஸ்தான் என பிரிந்த போது ஒரு மில்லியன் மக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உயிர் இழந்தனர். காஷ்மீர், பஞ்சாப், அசாம், திரிபுரா, தெலுங்கானா..................... என இந்திய மாநிலங்களில் பிரிவினை போராட்டங்கள் ஆயுத வடிவம் எடுத்துள்ளது. இவர்கள் இந்திய தேசிய வாதத்தை மறுதலிக்கின்றார்கள்.

இந்நிலையில் பாரதிய ஜனதாக் கட்சி ஒரு நாடு, ஒரு தேசம், ஒரு கலாச்சாரம் என்று கட்சி இலக்கைத் தெரிவிக்கின்றது. இந்தியர்கள் எல்லோரும் சமம் என்பதை எப்போது ஒவ்வொரு இந்தியரும் உணர்கிறார்களோ அப்போது தான் இந்திய தேசியம் நிலைத்து நிற்கும். பல்லினத்தன்மை கொண்ட இந்தியாவில் தாம் இந்தியர் என்பதை ஒரு பொது அடையாளத்தின் மூலம் வெளிக்காட்ட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பொது அடையாளம் பற்றி எந்த கட்சியும் சிந்தித்திருக்கவில்லை. காங்கிரஸ் ஒரு மத சார்பற்ற ஆட்சியை வழங்கியதே ஒழிய ஓர் பொது அடையாளத்தை அறிமுகப்படுத்த தவறியது. காலனித்துவ அடையாளங்களை (அன்னிய பொருட்கள், ஆடைகள்) தீயிலிடக் கேட்ட மகாத்மா காந்தி கூட ஓர் இந்திய அடையாளத்தைக் காட்டுவதற்கு பதிலாக இந்து அடையாளத்தையே கொண்டிருந்தார். மகாத்மா காந்தி ஓர் இந்துவாக இருந்ததால் அவர் விரும்பியோ விரும்பாமலோ இந்து அடையாளங்களைக் கொண்டிருந்தார். இவ் அடையாளங்கள் ஏனைய மதப்பிரிவுகளை சற்று தள்ளியே இருக்க வைத்தன.

ஆனால் பாரதிய ஜனதாக் கட்சி எடுத்துள்ள நிலை இந்திய தேசிய வாதத்திற்கே சவாலாக அமைகின்றது. பல்லினத்தன்மை கொண்ட இந்தியாவில் இந்தியத் தேசியத்தை இந்து தேசியமாக்க இக் கட்சி முயன்றுள்ளது. இந்து மத அடையாளங்களை இந்திய அடையாளமாக்க பாரதிய ஜனதா அதன் சகோதர கட்சியான RSS உடன் இணைந்து செற்படுகின்றது. இதன் தீவிர வெளிப்பாடு தான் அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து ராமர் கோயில் கட்டும் திட்டம். இந்து இந்தியா என்பது தான் ஒரு நாடு ஒரு தேசம் ஒரே கலாச்சாரத்தின் உள் மறைந்துள்ள உண்மை.

இந்து இந்தியாவை தூக்கி வைத்துள்ள பாரதிய ஜனதாவிற்கும் RSS ற்கும் பிரித்தானிய BNP (British National Party) மற்றும் ஜேர்மனியில் ஜேர்மன் ஜேர்மனியருக்கே என்று குரல் எழுப்பும் நியோ நாசிகளுக்கும் ஏனைய இன, மத துவேசிகளுக்கும் பாரிய வேறுபாடு கிடையாது. இன்று மேற்கு ஐரோப்பாவில் வாழகின்ற ஆசிய, ஆபிரிக்க, கிழக்கு ஐரோப்பிய மக்கள் எப்படி நியோ நாசிகளின் பார்வையில் தமது நலன்களை (வேலை வாய்ப்பு, அரச உதவிகள்) சுரண்ட வந்தவர்களாகவும் குற்றவாளிகளாகவும் கணிக்கப்படுகின்றார்களோ; அதே போன்றே இந்தியாவில் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் கணிக்கப்படுவார்கள். இதனால் இவர்கள் தம் சொந்த மண்ணிலேயே இரண்டாம் தரப் பிரஜைகளாக்கப்படுவர். இந்தப் பய உணர்வு இந்து அல்லாத ஒவ்வொரு இந்தியனுக்கும் இருக்கின்றது.

இப்படியான ஒரு மதவாதக் கட்சியை மக்கள் தெரிவு செய்திருக்கின்றார்களே என்று மக்களை ஏனைய கட்சிகள் குறைபட்டுக் கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். இந்திய அரசியலில் சுதந்திரத்தில் இருந்தே ஒரு சிறந்த முழு இந்திய தேசத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய கட்சிக்கான வெற்றிடம் இருந்தே வந்துள்ளது. இவ்வெற்றிடத்தை தேசிய அளவில் எந்தக் கட்சியாலும் இது வரை பூர்த்தி செய்யவியலவில்லை. அதாவது முழு இந்திய தேசத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய, காங்கிரஸிற்கு மாற்றாக எந்தக் கட்சியும் வளரவில்லை. அவ் வெற்றிடத்தை சரியாகக் கணித்தது, இன்று BJP என்று அழைக்கப்படும் அன்றைய BJS. 1951ல் முதலாவது இந்திய பாராளுமன்ற தேர்தலில் 489 ஆசனங்களில் இரண்டே இரண்டு ஆசனங்களை பெற்ற BJS தன் எதிர்காலத்தை திட்டமிட்டு செயற்பட்டது. இக் கட்சியின் இலக்கும் அதற்கான பாதையும் அதை நோக்கிய கடின உழைப்பும் இன்று இந்தியாவில் ஓர் தனிப்பெரும் கட்சியாக அதனை வளர்த்து விட்டுள்ளது. இதற்கு அவர்களது திட்டமிடல் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற தமது செயல் இலக்கில் BJP யின் சேவைக்காலம் முடிந்து செல்லும் தலைவர் L.K அத்வானியின் தலைமை BJP இற்கு உரம் ஊட்டியுள்ளது. 1984ல் 540 ஆசனங்களில் இரண்டே இரண்டு ஆசனங்களையே BJP கைப்பற்றியது. அந் நிலையிலிருந்து 98ல் 180 ஆசனங்களை BJP தனித்து கைப்பற்றுமளவில் L.K அத்வானி கட்சியை மக்களிடையே எடுத்துச் சென்றிருக்கின்றார்.

இதற்கு L.K அத்வானி விடுத்த அயோத்தி யாத்திரைக்கான அறைகூவல் தான் காரணம். 83% மக்கள் இந்துக்களாக உள்ள நாட்டில் பாபர் மசூதியை இடித்து ராமர் கோயில் கட்ட விடுத்த அறைகூவல் பட்டி தொட்டி எங்கும் எதிரொலித்தது. இந்துக்களின் விழாக்கள் கட்சி விழாக்களாக மாற்றின. இதன் மூலம் அவர்களின் நாளாந்த வாழ்க்கையில் ஒரு அங்கமாக BJP தன்னை காட்டிக் கொள்ள முனைந்தது. இராமாயனத்தை கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமாக்கி அதனை மக்களுக்கு எடுத்துச் சென்றனர். விநாயகர் சதுர்த்தி கட்சி ஊர்வலமானது. இதன் மூலம் BJP இந்தியா முழுவதும் அறிமுகமானது. அறிமுகமாக்கினார் அத்வானி.

மேலும் அணு ஆயுத உற்பத்தியும் மிகுந்த வரவேற்பைப் பெற்ற பிரச்சாரம். ஆனால் 1992 ல் தம் கட்சி நலனுக்காக BJP தூண்டிவிட்ட மதவாதம் 1500 இற்கும் மேற்பட்ட மக்களை அயோத்தியில் பலியிட்டது. இதற்கு BJP க்கு குறிப்பாக அதன் தலைவர் அத்வானிக்கு பெரும் பங்கு உண்டு. மேலும் இவர் மீது ஓர் பணமோசடி வழக்கும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று முகம் கொடுக்குமா இந்தியா ?????????

உலகின் சீர்குலைந்த நாடுகள் வரிசையில் இந்தியாவும் குறிப்பிடத்தக்க இடத்திலேயே உள்ளது. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுப்பதிலிருந்து இறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுப்பது வரை எதிலும் இலஞ்சம் அல்லது கையூட்டு. ஒரு அரசாங்க உத்தியோகஸ்தரிற்கு தன் கடமைக்கு மாறாக ஓர் வேலையை செய்து அல்லது தன் வேலையையே இலகுவாக அல்லது துரிதமாக செய்து கொடுத்தால் லஞ்சம் கொடுப்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இப்போது தான் ஊதியம் பெறும் கடமையை செய்வதற்கே இலஞ்சம் கோருகின்றனர். இதற்கு உடந்தையாக இருப்பவர்கள் அரசியல் வாதிகளே.

இன்று குற்றவாளிகள் புகலிடம் பெறும் கூடாரமாக அரசியல் மாறிவிட்டது. ஆட்சியை காப்பாற்ற இடம் பெறும் பேரங்கள்; கொள்கையற்ற கட்சிகளையும் நபர்களையும் முக்கியம் பெற வைத்தது. மத்தியிலிருந்து அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதற்கு பதிலாக இலஞ்சமும் ஊழலும் பரவலாக்கப்பட்டுள்ளது. பிரதமர் கோடிகளில் இலஞ்சம் பெற்றால் அரச ஊழியர்கள் நூற்றுக்கணககில் இலஞ்சம் கோருகின்றார்கள். மத்தியில் அதிகாரங்கள் குவிந்து கிடப்பதும் அத்தியாவசிய நிறுவனங்களை அரசாங்கமே தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாலும் இந் நிறுவனங்கள் ஆட்சிக்கு வரும் கட்சியின் சொத்துக்கள் ஆகிவிடுகின்றன.

1991ல் காந்தி அற்ற ஆட்சியை தந்த நரசிம்மராவ், சுதந்திர இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையை தனது நிதி அமைச்சர் மன்மோகன் சிங்குடன் இணைந்து மாற்றினர். இதன் மூலம் உறங்கு நிலையிலிருந்த இந்திய பொருளாதாரம் தட்டி எழுப்பப்பட்டது. ஆயினும் இன்னும் பல நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இவற்றை தனியார் மயமாக்கி, அவற்றினை சுதந்திர ஒழுங்கமைப்பு குழுக்கள் - Independent Regulatory Body மூலம் அவை தன்னிச்சையாக செயற்படாமல் தடுக்க முடியும். இப்படியான ஓர் மட்டுப்படுத்தப்பட்ட தனியார் மயமாக்கல் தான் இந்தியாவின் வளர்ச்சிக்கு உகந்தது. இன்று இந்தியத் தொலைத் தொடர்புத்துறை தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு விமானத்துறையும் தனியார் மயமாக்கப்பட்டுள்ளது. இவை மக்களின் தேவையை பூர்த்தி செய்வதுடன் போட்டி அதிகரிப்பதால் நுகர்வோரிற்கு சேவைகளையும் அதிகரிக்கின்றன. இன்று மேற்கு நாடுகள் இந்த அளவிற்கு பொருளாதார ரீதியில் வளர்ந்திருப்பதற்கு அந்நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளே காரணம் ஆகும். இந்தியாவும் உலக சந்தைக்கு தன்னை திறந்து விட்டதும் அரசாங்கத்திற்கு நிறுவனங்களின் மீது உள்ள ஏகபோகத்தை குறைப்பதுவும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக உறுதுணையாக இருக்கும். ஆனால் சுதந்திர ஒழுங்கமைப்புக் குழுக்கள் அதிகாரங்களை கொண்டவையாக இருக்க வேண்டும்.

மேலும் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்த இந்திய ஏற்றுமதிப் பொருளாதாரம் இன்று Software ஏற்றுமதிக்கு படி உயர்ந்துள்ளது. இவை இந்தியாவின் எதிர்காலத்தை பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் 1994ல் 7.6%இற்கு வளர்ந்திருந்த இந்த GDP - மொத்த உள்நாட்டு உற்பத்தி, இந்தியாவின் நிலையற்ற ஆட்சியால் அடுத்து வந்த ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்தது. 1998ல் GDP5.4%ற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. தொங்கு பாராளுமன்றத்தை அமைத்த ஐக்கிய முன்னணிக்கு பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்தவோ நடைமுறைப்படுத்தவோ பாராளுமன்றத்தில் அதிகாரம் இருக்கவில்லை.

மேலும் ஓர் நிதி ஆண்டிற்கே ஆட்சி நிலைக்கும் என்ற ஐயம் நிலவும் போது, எப்படி வெளியிலிருந்து மூலதனம் உள்வரும்? ஆயினும் புலிப் பொருளாதாரம் உடைய தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகள் இன்று எதிர்நோக்கும் பொருளாதார வீழ்ச்சி இந்தியாவிற்கு ஏற்படாது. அவ்வளவிற்கு இறுக்கமான பொருளாதாரக் கட்டமைப்பை இந்தியா கொண்டுள்ளது என்று The Economist சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

இன்று பதவிக்கு வந்துள்ள இந்து தேசியக் கட்சி எப்படி தன் பொருளாதாரக் கொள்கையை அமைக்கப் போகின்றது? என்பதை முதலீட்டாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றார்கள். பாரதிய ஜனதாவின் இந்து - இந்திய தேசியவாதம், பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் என்பது பொருளாதார ஆய்வாளர்கள் கருத்து. இந்த அவநம்பிக்கையில் இருந்து கட்சியை வெளியே எடுத்து பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது வாஜ்பேயின் இருத்தலுக்கு இன்றியமையாதது. 1977ல் BJPயின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனதா தாம் Cocacola, IBM போன்ற வெளிநாட்டு நிறுவனங்களை இந்தியாவை விட்டு வெளியே அனுப்பினர். அன்று இவர்களை அனுப்புவதில் முன் நின்றவர் இன்றைய பாதுகாப்பு அமைச்சரும் சமஸ்தா கட்சித் தலைவருமான George Fernanes .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கடந்ததேர்தலிலும் வெற்றி அடைந்த பின் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் Pepsi, Kellogg போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவிலிருந்து வெளியேறக் கோரினார்.இப் பேட்டி அளித்து 12 மணி நேரத்தில் Fernandoes தன் கோரிக்கையில் இருந்து இறங்க வற்புறுத்தப்பட்டார். BJP பேச்சாளர் உடனடியாக"எந்த வெளிநாட்டு நிறுவனமும் இந்தியாவில் இருந்து வெளியேற்றப்படமாட்டாது;"என்று அறிக்கை விடுத்தார். George Fernandoes இற்கு உண்மையில் நிதி அமைச்சர் பதவியே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் வெளிநாட்டு நிறுவனங்கள் மீது கடும் போக்கு கொண்டிருந்ததால் அப் பொறுப்பு அவருக்கு கிட்டவில்லை.

பாரதிய ஜனதாவின் 90 க்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மிக முக்கிய இடத்தை பிடித்த விடயம் அணு ஆயுத உற்பத்தி. இந்தியாவின் தேசியபாதுகாப்பிற்கு அணு ஆயுதம் அவசியம் என்பது பெரும்பாலான இந்து இந்தியர்களது அபிப்பிராயம். ஆனால் இந்துக்கள் அல்லாதோர் பார்வையில் இது ஓர் இஸ்லாமியருக்கு எதிரான இந்துக் குண்டாகவே கருதப்பட்டது.

1974ல் இந்திரா காந்தி ராஜஸ்தானில் சமாதான நோக்கத்திற்கு எனக் கூறி அணுகுண்டுப் பரிசோதனையை மேற்கொண்டார். காலத்திற்கு காலம் அணு ஆயுதங்கள் இந்திய அரசியற் களத்தில் சூடு பிடிப்பது வழமை. 1999ல் Comprehensive Test Ban Treaty உடன்படிக்கை காலாவதி ஆகின்றது. அதற்குள் இந்தியாவை இவ் அணுஆயுத உற்பத்தி தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைப்பதன் மூலம், ஐ.நா பாதுகாப்புச் சபையின் 5 நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதை தடுப்பதே இதன் நோக்கம். இவ் உடன்படிக்கைக் காலம் காலாவதியாகு முன் இந்தியா கைச்சாத்திட்டால் எதிர்காலத்தில் பாதுகாப்புச் சபைநாடுகளுக்கு வெளியே அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதை பாதுகாப்புச் சபை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்.

ஆனால் இதில் இந்தியா கை ஒப்பமிடாதவிடத்து இவ் உடன்படிக்கை செயலற்றுப் போகும். இந்தியாவை பொறுத்தவரை எந்தக் கட்சியும் அதில் கையெழுத்திடும் நிலையில் இல்லை. இந்திய மக்களும் இவ் உடன்படிக்கை இந்தியாவின் நலனுக்கு எதிரானதாகவே கருதுகின்றார்கள். அமெரிக்காவோ பிரித்தானியாவோ இந்தியாவிற்கு அழுத்தங்கள் கொடுக்குமளவிற்கு சத்தி வாய்ந்தமையாக இல்லை. இந்தியாவிற்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தம் மண்ணிலேயே பாரிய எதிர்ப்பை சம்பாதிப்பார்கள். இரு நாடுகளிலேயும் இந்திய சமூகம் பொருளாதார பலம் கொண்ட சமூகம் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் இந்தியா அணு ஆயுதம் கொண்ட துணைக்கண்ட வல்லரசாகும். உலகின் மீசைக்கார இராணுவம் அணுகுண்டுகளை கையாளப் போவது தவிர்க்க முடியாத ஒன்று. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியுடன் இந்திய இராணுவம் நவீனமயப்படுத்தப்படும்.

பாராளுமன்றக் கட்சிகள் எந்த ஒன்றிலும் மக்கள் முழுமையான நம்பிக்கை வைக்கத் தயாரில்லை என்பதை நடந்து முடிந்த தேர்தலில் மக்கள்உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவுபடுத்தி உள்ளனர். வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியினால் இந்திய சமூகத்திடம் அரசியல் விழிப்புணர்வு உருவாகி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசியல் இயந்திரம் எவ்வளவு மோசமாக சீர்குலைந்திருந்த போதும் அந் நாட்டின் ஜனநாயக போக்கு இன்னமும் முற்றாக அழிந்து விடவில்லை. இரண்டு சுதந்திர தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் குற்றச் செயல்களில் தொடர்புபட்டுள்ள வேட்பாளர்களின் பட்டியலை தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன் வெளியிட்டுள்ளது. தேர்தலில் போட்டியிட்டவர்களில் 71 பேரை குற்றவாளிகள் அல்லது குற்றவாளிகளுடன் தொடர்பு உள்ளவர்கள் என சுட்டிக் காட்டியது. இவ்வாறு அடையாளம் காட்டப்பட்டவர்களில் L.K.அத்தானி, பாரதிய ஜனதா கட்சி தலைவரும் அடங்குகிறார். தனது பெயர்குற்றவாளிகள் பட்டியலில் இருப்பதைத் தொடர்ந்து அத்வானி வேட்பு மனுவை மீளப் பெற்றுக் கொண்டார்.

71 வயதான அடல் பிகாரி வாஜ்பாய் இந்து சமுத்திரத்தில் இந்தியாவை ஓட்டி வெற்றி பெறுவாரா? இதற்கு விடையளிக்க அவருக்கு இன்னும் சில காலம் தேவை. வாஜ்பாயும் சரி BJP யும் சரி இதுவே அவர்களுக்கு கிடைத்துள்ள முதல் சந்தர்ப்பம். தன்னுடையதும் கட்சியினுடையதும் இருத்தலை தக்கவைப்பது வாஜ்பாயின் சிந்தனையிலும் ஆளுமையிலுமே உள்ளது. மென் பேச்சாளரான வாஜ்பாய், BJP யின் ஏனைய முன்னணி உறுப்பினர்கள் போன்று இந்து அடிப்படைவாதியல்ல. அதனால் தான் அவரால் ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்த முடிந்தது.

ஆனால் நீண்ட காலத்தில் கட்சியை மத அடிப்படை வாதத்திலிருந்து நவீனமயப்படுத்துவதே வாஜ்பாயின் முக்கிய கடமையாக இருக்கும். அயோத்தி பாபர்மசூதி இடிக்கப்பட்டதை தவறு என்று சுட்டிக் காட்டிய தலைவர் தொடர்ந்தும் நிலைப்பாரா?

மிகப் பெரும் பொருளாதார சந்தையைக் கொண்ட இந்தியாவில் பொருளாதாரத்தை வளர்ப்பதன் மூலம் இந்தியாவை அதிபலம் கொண்ட நாடாக்க முடியும். இப் பொருளாதார வளர்ச்சி இந்திய இராணுவத்தை நவீனமயமாக்கும். இவை ஆசியாவில் இந்தியாவை இராணு பொருளாதர வல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசாக்கும். தகவற் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி இந்திய சிவில் சமூகத்தை பலம் உள்ளதாக்கி, அரசியல் வாதிகளை பொறுப்பு உள்ளவர்கள் ஆக்கும். இம் மாற்றங்கள் படிப்படியாகவே நிகழும். இம் மாற்றத்தை துரிதப்படுத்த மக்கள் தம்மை அரசியலில் ஈடுபடுத்த வேண்டும். ஒவ்வோர் அரசியல்வாதியும் தான் செய்யும் காரியங்களிற்கு நாளை பதில் சொல்ல வேண்டும் என்ற உணர்வுடன் கடமையாற்ற வேண்டும். இந்திய அரசியல்வாதிகளும் கட்சிகளும் மக்கள்நலனை முன் வைக்க வேண்டும். இப்படியான உணர்வு பூர்வமான செயற்பாடுகள் தான் உறுதியான இந்தியாவை உருவாக்கும். இந்திய பிரதமர் வாஜ்பாயும் அவரது கட்சியும் இந்தியாவின் இன்றய அரசியல் சகதியில் மூழ்குவார்களா? இல்லையானால் அரசியல்வாதிகளால் சகதியில் விடப்பட்ட இந்திய மக்களை மீட்டெடுப்பார்களா? துடுப்பு இல்லாத ஓட்டி பிடித்துக் கொண்ட அணு குண்டு அவரை கரை சேர்க்கும் துடுப்பு ஆகுமா? இவை எல்லாம் ஒவ்வோர் இந்தியக் குடிமகனும் விடையறிய காத்திருக்கும் வினாக்கள். அதை காலம் மட்டுமே அறியும். □□□□□□□□□□□



# நாளைய செல்வங்கள்

ஜனவரி 98ல் அமெரிக்காவில் Beverlly Hill ஓவியக் கண்காட்சியில் $19,000 (£11,500) இற்கு Beso ன் ஓவியம் விற்கப்பட்டது. இதற்கு முந்திய ஆண்டு Alexandra Nechita என்னும் 10 வயது நிரம்பிய ருமேனிய பெண் குழந்தை ஓவியக் கலையில் மிக இளம் வயதிலேயே சிறந்த ஆற்றல் கொண்டவராக திகழ்ந்தார். இன்றுவரை Alexandra $10 மில்லியன் களுக்கு தன் ஓவியங்களை விற்றுள்ளார். Beso ன் ஓவியங்கள் அன்றைய ஓவியக் கண்காட்சியில் ஒரு மணி நேரத்தில் $30,000 இற்கு விற்பனையானது.

இங்கு இச்சிறார்கள் ஈட்டிய பணம் முக்கியமல்ல. இச்சிறார்களிடம் உள்ள திறமைகள் வளர்க்கப்பட வேண்டும். அவர்களுக்கு சமூக அந்தஸ்து, பணம் சேர்ப்பது இவற்றிற்கு மேலாக சமூக பொறுப்புணர்வை ஊட்ட வேண்டும். மேற்கூறிய சிறார்களின் ஓவியங்களில் உள்நாட்டு யுத்தங்களின் தாக்கங்கள் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இதே போல் ஒவ்வொரு பெற்றோரும் குழந்தைகளை சமூக அக்கறை உள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

தமிழ் கலாச்சாரத்தில் உள்ள நல்ல அம்சங்களை குழந்தைகள் பெற வேண்டுமானால் அவர்களுக்கு தமிழ் மொழியை ஊட்ட வேண்டும். ஓர் சமூகத்தின் ஆணிவேர் என்பது அதன் மொழி. ஆகவே குழந்தைகளுக்கு நீங்கள் இடம்பெயர்ந்து இருக்கும் நாட்டின் மொழியை ஊட்டுவது போல் தாய் மொழியான தமிழையும் ஊட்டுங்கள். இதன் மூலம் உங்கள் குழந்தைகளின் திறனை மேலும் மெருகூட்டுங்கள். அவர்கள் எத்துறையில் ஆர்வமாக இருக்கின்றார்களோ அதனை இனம் கண்டு அதனை ஊக்குவியுங்கள். கலைத்துறையில் இருந்து நவீன தொழில்நுட்பம் வரை தமிழச் சமூகம் தன்னிறைவு உடைய சமூகமாக இருக்க வேண்டும். அதற்கு ஒவ்வோர் பெற்றோரும் தம் குழந்தைச் செல்வங்களை சமூக அக்கறை உடையவர்களாகவும் சிறந்த படைப்பாளிகளாகவும் உருவாக்க வேண்டும். இதற்கு பெற்றோர் முயற்சித்தால், நாளைய பிக்காசோக்களையும் நியூட்டன்களையும் அரிஸ்டோட்டல்களையும் உருவாக்க முடியும்.

தமிழ் சமூகத்திடம், குழந்தைகளின் கல்வி பற்றிய சிந்தனை முறை இன்றும் அன்று போல் தான் உள்ளது. குழந்தைகளிடம் என்ன திறமைகள் உள்ளது என்பதை கண்டு அதனை வளர்ப்பதில்லை. மாறாக தாம் என்ன விரும்புகிறார்களோ அத் துறையை குழந்தைகள் மீது திணிக்கின்றனர். இவர்கள் திணிக்கும் துறைகள் பெரும்பாலும் மருத்துவம், பொறியியல் துறைகளே. இதற்குக் காரணம் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தையும், நிறைந்த வருமானத்தையும் பெறுவது.

11 வயது நிறைந்த ஜோர்ஜிய மாணவன் Beso-kalaishvili ஜோர்ஜியாவின் உள்நாட்டு யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவன். நீர், உணவு மற்றும் மின்சாரம் எல்லாமே எல்லா ஜோர்ஜிய மக்கள் போல் அவனுக்கும் பிரச்சனையாக இருந்தது. மாணவர்களுக்கு கீறுவதற்கும் எழுதுவதற்கும் கடதாசிகள் தட்டுப்பாடு. அப்படிப்பட்ட சூழலில், Beso வின் தாய் வாங்கும் காலுறை பெட்டிகளின் (Stockings Packet) உட்பக்கத்தில் படங்களை வரைந்தான். அப்பெற்றோர் அவனை ஊக்குவித்தனர். அவன் திறமையை இனம் கண்டு மேலும் வளர்த்தனர். அப்படி முயற்சித்தால் எமது இளம் தலைமுறையினரும் நாளைய படைப்பாளிகளாக உருவாகுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத் தமிழ் மக்களின்**

# வரலாறும் வாழ்வும்

ச.கிருஷ்ணா

## தீவின் ஆரம்பக் குடிகள் :



எந்தவொரு மக்கள் கூட்டத்தின் வரலாறும் அம் மக்கள் கூட்டத்தினர் வாழும் புவியியல், பௌதீக நிலைமைகளினாலேயே கணிசமான அளவு தீர்மானிக்கப்படுகின்றுது. இலங்கைத் தீவில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரின் வாழ்வுமுறையும் வரலாறும் இதற்கு விதிவிலக்கல்ல. தீவின் பூகோள அமைவிடம் அங்கு இனங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மிக முக்கிய காரணியாக அமைந்துள்ளது. இலங்கைத் தீவானது உலகின் மிகப் பழமையான நாகரீகம் தோண்றிய இடங்களில் ஒன்றான இந்திய உபகண்டத்தின் தென் முனையில் அமைந்துள்ளது. அதனால் புராதன காலம் தொட்டே இந்திய, தென் இந்திய செல்வாக்கிற்கு உட்பட்டு வந்துள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலும் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராட்சியின் பயனாய் எமக்கு கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் இந்தியாவில் இருந்தே மக்கள் கூட்டத்தினர் இலங்கைக்கு சென்றர்கள் என்பதை உறுதியாக கூறலாம். எனவே இலங்கையில் தற்பொழுது வாழ்கின்ற சிங்கள மக்கள் கூட்டத்தினர், தமிழ் மக்கள் கூட்டத்தினர், முஸ்லீம் மக்கள் கூட்டத்தினர் இந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்திருக்க வேண்டும். அல்லது இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த மக்கள் கூட்டத்தினரிடம் இருந்தே உருவாகியிருக்கவேண்டும்.

உலகில் தூய இனம் என்று சொல்லும் அளவிற்கு எந்த ஒரு இனமும் இல்லை. உலகில் தற்பொழுது இருக்கும் இனங்கள் யாவும் இன்னோர் இனத்துடன் கலப்படைந்து ஏதாவது ஒரு விதத்தில் தொடர்புடையதாகவே இருக்கின்றன. இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் எவ்வாறு தோன்றுகின்றன; அவை எவ்வாறு இனப்பிரச்சனையாக கூர்மை அடைகின்றன என்பதை ஆய்வு செய்ய வேண்டுமாயின் தேசிய இனம் என்றால் என்ன என்பதை நன்கு விளங்கிக் கொண்டால் தான் சரியாக ஆய்வு செய்ய முடியும். தேசிய இனம் என்றல் என்ன என்று பல்வேறு சமுகவியல், அரசியல், விஞ்ஞானவியல், அறிஞர்கள் வெவ்வேறு விளக்கம் கொடுத்திருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழ்கின்ற மக்கள்; தங்கள் இடையே உள்ள ஏதாவது ஒரு பொதுத்தன்மையின் அடிப்படையில் உணர்வுரீதியாக ஒன்றுபட்டு, தாம் தமக்கென்று ஓர் அரசியல் அலகை அமைக்க எப்போது எண்ணுகின்றார்களோ, அப்போது அவர்கள் தேசிய இனமாக பரிணமிக்கின்றார்கள். இதன் அடிப்படையில் பார்த்தால் இலங்கையில் மூன்று தேசிய இனங்கள் உள்ளன. மொழி என்ற பொதுத்தன்மையின் கீழ் சிங்கள மக்களும் தமிழ் மக்களும்; மதம் என்ற பொதுத் தன்மையின் கீழ் முஸ்லீம் மக்களும் மூன்று தனித்தனி தேசங்களாக உருவாகி உள்ளனர். உடலியல் அடிப்படையில் பார்த்தால் மூன்று தேசிய இனங்களும் பொதுவான உடலியல் தோற்றத்தை கொண்டுள்ளன. மூன்று இனங்களிலும் ஓர் இனத்தில் இருந்து இன்னோர் இனத்தை வேறுபடுத்திகாட்டும் அளவிற்கு அவர்களின் உருவ அமைப்பு தனித்தன்மை வாய்ந்ததாக காணப்படவில்லை. இது அம் மூன்று தேசிய இனங்களும் ஓர் பொதுவான மக்கள் கூட்டத்தின் அடிப்படையில் இருந்து உருவாகினார்கள் என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

யாழ் தீபகற்பத்தில் கந்தரோடைப்பகுதியில் மேற்கொண்ட அகழ்வு ஆராட்சியின்படி தென் இந்திய பெருங்கற் பண்பாட்டிற்கு ஒப்பான குடியிருப்புக்கான சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. காபன் கால கணிப்புகளின்படி இது கி.மு1000 ஆண்டு பழமை வாய்ந்தது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது யாழ் தீபகற்பத்தில் மகாவம்சம் கூறும் விஜயனின் வருகைக்கு முன்பே (விஜயனின் வருகை கி..மு5 ம் நூற்றாண்டு) தென் இந்தியாவை ஒத்த பெருங்கற் பண்பாட்டு மக்கள் கூட்டம் இருந்துள்ளார்கள் என்பதை ஐயம்திரிபுற தெளிவுபடுத்துகிறது. இலங்கையில் காணப்பட்ட பெருங்கற்பண்பாட்டிலிருந்து நகரங்கள் அரசுகள் தோன்றின. இது வடக்கிற்கும் தெற்கிற்கும் பொதுவானதாகும். இலங்கைத் தீவின் வரலாற்றுக்கால அடிப்படை மக்கள் பெருங்கற் பண்பாட்டு மக்களே ஆவர். இதிலிருந்தே தமிழ் சிங்களம் எனும் இரு பண்பாட்டுப் பிரிவுகள் தோன்றி வெவ்வேறு தேசிய இனங்களாக வளர்ந்து முழுமை அடைந்து இருக்கின்றனர்.

இந்தியாவில் குறிப்பாக குஜராத்தில் பாரசீக முஸ்லீம் ஆக்கிரமிப்பு, வர்த்தகம் போன்றவற்றால் உருவான முஸ்லீம் மக்கள் குழுவினர் தென் இந்தியாவுடன் வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்தினார்கள். இவர்களின் தொடர்ச்சியான தொடர்பால் தமிழ்நாட்டு கரையோரப்பக்கங்களில் உள்ள மக்கள் மதமாற்ற மூலமும் கலப்புத் திருமணத்தின் ஊடாகவும் முஸ்லீம்களாக மாற்றம் பெற்றார்கள். இவ்வாறு தான் தமிழ் நாட்டில் முஸ்லீம் சமூகங்கள் கி..பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ம் நூற்றாண்டிற்குப் பிறகு சிறிது சிறிதாக உரு வாகி வளர்ந்தார்கள். தெ.இந்தியாவில் உருவாகிய உள்ளூர்த் தமிழ்-முஸ்லீம் மக்கள் இலங்கையி னுடனான வர்த்தகத்தில் ஈடுபடத்தொடங்கினார்கள். இவர்களின் வருகையால் இலங்கையில் உள்ளூர் முஸ்லீம் தமிழ் மக்கள் உருவாகினார்கள். எனவே அடிப்படையில் பார்த்தால் இலங்கையில் உள்ள மூன்று தேசிய இனங்களான தமிழ், சிங்களம், முஸ் லீம் இனங்கள் யாவும் தென் இந்திய அடியில் இருந்தே உருவாகினார்கள் என்பதில் எவ்வித ஐய மும் இல்லை.

இலங்கை இனப்பிரச்சனையின் கருவாக இருப்பது தம்பதீபக் கோட்பாடு என்று அழைக்கப்படும் சிங் கள-பௌத்த ஐதீகம் ஆகும். இதன் கருத்துப்படி பௌத்த தர்மத்தை பாதுகாக்க புத்தபிரானால் தேர் ந்து எடுக்கப்பட்ட தீவு என்பதாகும்.

இதன் சாரம் வருமாறு :
(1) இலங்கைத் தீவு, பௌத்த தர்மத்தை காக்க புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு.
(2) இலங்கையின் முதல் மனிதன் விஜயன்.
(3) விஜயனும் அவனது வழித்தோன்றல்களும் புத்த மதத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.
(4) இலங்கைக்கு விஜயன் வந்தவுடன் தான் இலங் கைத் தீவில் அரசு உருவானது.

இக் கோட்பாடானது விஜயனைச் சிங்களவன் ஆக் கியதுடன் சிங்களவர்களே இலங்கைத் தீவுக்கு முத ல் வந்தவர்கள் என்றும் மற்றவர்கள் எல்லோரும் வந்தேறு குடிகள் என்றும் ஆக்கியது. இதன்படி இலங்கைத் தீவானது சிங்கள பௌத்த மக்களுக்கே சொந்தமாகியது.

## இலங்கைத் தீவு, பௌத்ததர்மத்தை காக்க புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு.

வட இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தி ஆண்ட காலப்பகுதியில் (கி.மு 3ம் நூற்றான்டு) அவரது பிள் ளைகளான மகிந்தனும் சங்கமித்தையும் இலங்கை க்கு பௌத்த மதத்தை கொண்டு வந்தார்கள். இவா கள் காட்டில் வேட்டையாடித் திரிந்து கொண்டிருந்த இலங்கை மன்னன் தேவநம்பியதீசனை சந்தித்து அவனை பௌத்தமதத்திற்கு மாற்றியதுடன்; பௌ த்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது, என்று மகாவம்சம் கூறுகிறது. எனவே தேவநம்பியதீசன் காலத்திற்கு முற்பட்ட இலங்கையர்கள் பௌத்தம் சார்ந்தவர்களாக இருந்திருக்க முடியாது. ஆகவே விஜயன் பௌத்த மதத்தை சார்ந்தவனாக இருந்தி ருக்கமுடியாது. பௌத்த மதத்தவர்கள் வாழ்ந்திராத இலங்கைத் தீவை புத்தபிரான் பௌத்த தர்மத்தை காக்க தேர்ந்தெடுத்திருக்க முடியாது.

## இலங்கையின் முதல் மனிதன் விஜயன்.

விஜயனின் கதையைக் கூறும் மகாவம்சம்; விஜயன் இலங்கைத் தீவில் ஏற்கனவே இருந்த, இயக்ககுல இளவரசி குவேனியை மணம் முடித்து அவளின் துணை கொண்டு இலங்கை அரசை கைப்பற்றினான் என்றும் கூறுகின்றது. இதில் இருந்து இலங்கையில் முதல் மனிதன் விஜயனாக இருந்திருக்க முடியாது என்பது புலனாகின்றது. மேலும் ஏற்கனவே இயக்கர் குல மக்கள் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே அங்கு வாழ்ந்தார்கள் என்பதும் தெளிவாகி யுள்ளது.

அது மட்டுமல்லாது விஜயனின் வருகைக்கு முன்பே இலங்கைத் தீவில் அரசாட்சி இருந்தது என்பதும் நிருபணம் ஆகின்றது.(4)

## விஜயனும் அவனது வழித் தோண்றல்களு ம் புத்த மதத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட் டார்கள்.

மகாவம்சம் கூறும் விஜயனின் வரலாற்றுக் காலம் கி.மு 5ம் நூற்றாண்டு ஆகும். ஆனால் பௌத்த மதம் என்ற ஒன்று உருவாக காரணமாய் இருந்த இளவரசர் சித்தார்த்தரின் காலம் கி.மு 3ம் நூற்றா ண்டு ஆகும். எனவே விஜயன் பௌத்தனாக இருந் திருக்க முடியாது. பௌத்தனாக இல்லாத ஒருவ னையும் அவனுடைய பரம்பரையையும் குறைந்தது இரண்டு நூற்றாண்டுகளுக்கு பின் தோன்றிய சித்தா ர்த்தன் பௌத்தத்திற்காக தேர்ந்தெடுத்திருக்க முடி யாது.

ஆகவே தம்பதீபக் கோட்பாடு என்பது சரித்திரபூர்வ உண்மையை உள்வாங்கிய தேசியவாத உணர்வின் வெளிப்பாடாக காணப்படவில்லை மாறாக சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனை உள்ளவர்களால் தம் முடைய மேலாதிக்க தன்மையை வலுவாக்க, நிலைநிறுத்த இடைக்காலத்தில் புனையப்பட்ட ஓர் கட்டுக்கதை என்ற முடிவிற்கே வர முடிகின்றது.


## ஆரிய - திராவிட ஐதீகம் :

சிங்கள தமிழ் இன முரண்பாட்டில் கதைக்கப்படும் இன்னெரு விடயம் சிங்களவர்கள் ஆரிய இனத்தை சார்ந்தவர்கள் என்பதும் தமிழர்கள் திராவிட இனத் தை சார்ந்தவர்கள் என்பதும் ஆகும். மேலும் ஒரு படி சென்று திராவிடரைவிட ஆரியர் மேன்மை வாய் ந்தவர்கள் என்பதும் ஆகும். இதன் மூலம் தமிழர் களைவிட சிங்களவர்கள் மேன்மையானவர்கள் அல் லது முன்னேற்றம் அடைந்தவர்கள் என்பதாகும்.

சிங்களவரின் சரித்திர நூலான மகாவம்சத்தின்படி பார்த்தாலும் சிங்களவர்களின் மூதாதையான விஜய னும் அவனது 700 நண்பர்களும் வங்கதேசத்தில் இருந்து வந்தார்கள். வங்கதேசத்தில் இருந்தவர்க ளும், இப்போது இருப்பவர்களும் ஆரிய மொழியான சமஸ்கிருதத்தில் இருந்து உருவாகிய வங்காள மொழி பேசுபவர்கள். அவர்கள் பேசும் மொழி ஆரிய மொழியாக இருக்கின்றதே தவிர அவர்கள் ஆரியர் கள் அல்லர்.

வங்க தேசத்தில் இருந்து வந்த விஜயனையும் அவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்மதீபக் கோட்பாட்டை உயரப் பிடித்த பௌத்த சிங்கள அரசுகள் அதனை அரச இலையாகவும் அதனை காக்க வாளேந்திய சிங்கத்தையும் தேசியக் கொடியில் பொறித்தனர். இவையே இன்றய முரண்பாட்டின் அன்றய மூலம்.

னது தோழர்களையும் ஆரியர் என்று எடுத்துக் கொண்டாலும் இலங்கையில் வாழும் சிங்களவர்கள் தூய ஆரிய வழித் தோண்றல்கள் என்று கொள்ள முடியாது. ஏனெனில் விஜயனும் அவனது தோழர்களும் மணம் முடித்தது பாண்டிய நாட்டு இளவரசியையும் அவளது தோழிகளையும் ஆகும். விஜயனது அடுத்த தலைமுறையும் மணத்தொடர்புகளை வைத்திருந்தது பாண்டிய நாட்டுடன் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மகாவம்சத்தின் படி பார்த்தாலும் சிங்களவர் என்று இன்று அழைக்கப்படும் இனம்; தூய சிங்கள இனக்கூற்றிலும் கூடுதலாக தமிழினக் கூற்றையே கொண்டுள்ளனர் (genetically more tamil than pure singalese). பரம்பரையியல் அடிப்படையில் பார்த்தாலும் மகாவம்சத்தின் அடிப்படையில் பார்த்தாலும் இலங்கைத் தீவில் உள்ளோரில் பெரும்பாலானோர் பரம்பரையியற் தமிழர்கள் ( Genetically Tamils). இதன் மூலம் தம்பதீப ஐதீகம் என்பது இலங்கையில் பௌத்த-சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும் ஏனைய சிறுபான்மையினரை சிறுமைப்படுத்தி இரண்டாம் தரப் பிரஜைகளாக காட்டவும் புனையப்பட்ட கதையே அன்றி சரித்திரமல்ல என்பது தெளிவாகிறது.□□□

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழ்கின்ற மக்கள்; கூட்டத்தினர் தங்கள் இடையே உள்ள ஏதாவது ஒரு பொதுத் தன்மையின் அடிப்படையில் உணர்வுரீதியாக ஒன்றுபட்டு; தாம், தமக்கு என்று ஓர் அரசியல் அலகை அமைக்க எப்போது எண்ணுகின்றார்களோ, அப்போது அவர்கள் தேசிய இனமாக பரிணமிக்கின்றார்கள்.

# கடமை நேரத்தில் நிருபர்கள் கொலை!!!

கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தது 474 செய்தி நிருபர்கள் தமது கடமையின் காரணமாக கொல்லப்பட்டுள்ளனர். கடந்த வருடம் மட்டும் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1997 இறுதியில் குறைந்தது 129 செய்தி நிருபர்கள் 24 நாடுகளில் சிறையிலிடப்பட்டுள்ளனர். செய்தி நிருபர்களை பாதுகாக்கும் சபை இப் புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ளது. முன்னாள் சோவியத் குடியரசுகளிலேயே மிகக் கூடிய அளவு தாக்குதல்கள் நிருபர்களுக்கு எதிராக நடத்தப்பட்டுள்ளது. அங்கு 128 நிருபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அல்ஜீரியா, கொலம்பியா ஆகிய நாடுகள் மிக ஆபத்தானவையாக உள்ளன. முன்னையதில் 60 பேரும் பின்னயதில் 43 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். நைஜீரியாவில் உள்ளூர் நிருபர்கள் கண்மூடித்தனமாக அந் நாட்டு இராணுவ ஆட்சியாளர்களால் சிறை இடப்படுகின்றனர். வட, தென் அமெரிக்க நாடுகளில் 120 நிருபர்களும்; வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் 95 நிருபர்களும்; ஆசியாவில் 78 நிருபர்களும்; ஆபிரிக்காவில் 53 நிருபர்களும் கொல்லப்பட்டுள்ளனர். ரஸ்யா(29), பொஸ்னியா(21), குரொஏசியா(26), தஜகிஸ்தான்(21), துருக்கி(20), பிலிப்பீன்ஸ்(20), அல்ஜீரியா(60), பெரு(18), கொலம்பியா(43), இந்தியா(24) ஆகிய பத்து நாடுகளும் உலகின் மிகப் பயங்கரமான நாடுகளாக உள்ளன. சின்னஞ்சிறிய இலங்கைத் தீவிலும் 5 நிருபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களும் கடமை நேரத்தில் கொல்லப்பட்டவர்களே. உண்மைகள் உறங்கி விடாது தாம் விழிப்பிருந்து காக்கும் இவர்களும் உறங்கிவிட்டால் இவ் உலகில் உண்மை வாழாது. அநியாயங்கள் தான் ஆட்சி நடத்தும். கண் மூடித்தனமான ஆயுதக் கலாச்சாரத்தால் சமூகத்தில் உண்மைகளை வெளிக்கொணர்வது மிகவும் ஆபத்தானதாக உள்ளது. அப்படி உண்மைகளை வெளிக்கொண்டு வருபவர்கள் தமது கடைசி நாட்களை எண்ண வேண்டிய நிலையில் உள்ளார்கள். இது இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்திற்கும் பொருந்தும். அதனால் தான் அங்கு இன்னும் பல உண்மைகள் உறங்கிக் கொண்டேயிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மகளிர் தினம்

# மாறாத சமூகம் மாற்றம் தேடும் பெண்கள்

இ . வானதி

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் பெண் தொழிலாளர்கள் 1857 மார்ச் 8ம் திகதி அன்று ஆண்களுக்கு வழங்கப்படும் அளவான சம கூலி தமக்கும் வழங்கப் பட வேண்டும் என்று கோரி வெளிநடப்புச் செய்து வேலை நிறுத்தப் போராட்டம் செய்தனர். தமது கோரிக்கையில் வெற்றியும் பெற்றனர். இந்த நிகழ்வு ஐரோப்பா முழுவதிலும் பெண்கள் மத்தியில் ஒரு அதிர்வலையைப் பரப்பியது. பெண்கள் அமைப்புக்க ளும் இயக்கங்களும் உலகம் முழுவதும் புத்தூக் கம் பெற்று தோற்றம் பெற்றன.

1910ம் ஆண்டு அமெரிக்காவில் வாக்களிப்பு முறை யை எதிர்த்து பெண் தொழிலாளர்களால் நடத்தப் பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் ஏனைய பெண் கள் அமைப்புக்களதும் ஆதரவைப் பெற்று பெண் கள் உரிமைப் போராட்டமாக பரிணமித்தது. அதே வருடம் டென்மார்க்கில் கொப்பன் காகனில் நடத் தப்பட்ட இரண்டாவது சர்வதேச பெண்கள் மகாநாட் டில் முதலாவது பெண்கள் கிளர்ச்சியை நினைவு கூரும் முகமாக மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினமாக சகல நாட்டுப் பிரதிநிதிகளினதும் அங்கீ காரத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும் 1975 முதல் 1985 வரையான காலப்பகுதியை பெண்கள் புத்தாண்டு ஆகவும் பிரகடனப்படுத்தினர்.

இவ்வாறான பெண்களது உரிமைகள் பற்றிய சர்வ தேசரீதியான ஆதரவுக்கும் பிரகடனங்களுக்கும் மா றாக உலகில் பெண்களுக்கும் சிறார்களுக்கும் எதி ரான பாகுபடுத்தல்களும் வன்முறைகளும் வீட்டிலும் வெளியிலும் அதிகரித்து வருவதையே காண முடிகி ன்றது. இலாபம் உழைக்கும் கம்பனிகளாலும்; தகு ந்த சமூகநல நிறுவனம் மற்றும் சட்ட ரீதியான ஆதரவை வழங்குமளவிற்கு கரிசனையற்ற அரசாங் கங்களாலும்; மரபு முலாம் பூசப்பட்ட குடும்பச் சுவர் களுக்குள்ளும் பெண்கள் சகல வழிகளிலும் சுரண் டப்படுவது தொடர்கின்றது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளைப் பொறுத்த வரை யில் இந் நாடுகளின் சமூக கலாச்சார அம்சங்களில் பெண்களுக்கு முதன்மை கொடுக்கப்படுவது போன் ற தோற்றப்பாடு காணப்பட்டாலும் உண்மை நிலை எதிர்மாறாகவே உள்ளது. உதாரணமாக இந்தியா வில் அகிம்சை வழி நின்ற மகாத்மா காந்தி பிறந்த மாநிலத்திலேயே நூற்றுக்கணக்கான பெண்கள் சீதனப்பிரச்சனை காரணமாக கொல்லப்படும் நிலை காணப்படுகின்றது. பெண் குழந்தைகள் பிறந்தவுடன்



கொல்லப்படுவதும்; நவீன தொழில்நுட்ப உதவியு டன் வயிற்றில் இருக்கும் சிசு பெண் என அடையா ளம் காணப்பட்டு அழிக்கப்படுவதும் பரவலாக நடை பெறுகின்றது. சிறுமிகளும் இளம் பெண்களும் கட த்தப்பட்டு விபச்சார விடுதிகளில் விற்கப்படுகின் றார்கள்.

இவற்றை விட பொருளாதார வளர்ச்சியின்மையும் வறுமையும் கல்வியறிவின்மையும் தென்கிழக்காசிய சமூகங்களில் பெண்களின் நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன. உலக உடல்நல சுகாதார நிறுவனத்தின் தகவலின் படி, உலகின் கருத்தரிப்பு , பிரசவகால இறப்பில் 40% தென்கிழக்கு ஆசியா விலேயே இடம்பெறுகின்றது. கருத்தரிப்பு பிரசவ சிக்கல்கள் மூலம் இப் பிராந்தியத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு பெண் இறக்கின்றாள். மகப்பேற்று வேளையில் ஏற்படும் பிரச்சனைகள், பாதுகாப்பற்ற கருக்கலைப்பு முறைகள் என்பவற்றால் ஏற்படுகின் றது. 80% ஆன இத்தகைய இறப்புக்கள் அதிக செலவீனமற்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்துவ தன் மூலம் தவிர்க்கப்படக் கூடியவை என இந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஈழத்துப் பெண்கள்:

குறிப்பாக இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பெண்கள் நிலை கல்வி யறிவு மருத்துவம் முதலான விடயங்க ளில் விருத்தியுற்றதாக காணப்படுகின் றது. ஈழத்தில் பெண்கள் பற்றி நோக் குவோமாயின் 1931ல் பெண்களுக்கு வாக்குரிமை பற்றி டொனமூர் ஆணைக்குழுவிற்கு கருத்துக் கூறிய ஒரு தூதுக்குழுவில் மங்களம்மாள் என்ற ஒரு தமிழ்ப் பெண்மணியும் இருந்தார். இவர் தமிழ் மகள் என்ற சஞ்சிகையையும் நடத்தி வந்தார். சேர் பொன் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படுவதை ஆத ரிக்காத ஒரு காலகட்டத்தில் மங்களம்மாள் மிகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவாக பெண்களுக்கு வாக்குரிமை தொடர்பான பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இவர் பற்றிக் கூறுகையில், மங்களம்மாளின் பெண் உரிமை நிலைப்பாடு ஆண் ஆதிக்க சிந்தனையாளரின் பழிப்பையும் பகைமையையும் சம்பாதித்ததாக கிழக்கு இலங்கை பல்கழைக் கழக விரிவுரையாளர் சித்திரலேகா மௌனகுரு தெரிவித்துள்ளார். பெண்களுக்கான அரசியல் ஜனநாயக உரிமைகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு முதலான விடயங்களை முன்வைத்து இயங்கிய ஆரம்பகாலப் பெண்கள் இயக்கங்களில் மீனாட்சியம்மாள் நடேசையர், மங்களம்மாள் மாசிலாமணி, நல்லம்மா சத்தியவாகீஸ்வர ஐயர், திருமதி தம்பிமுத்து முதலிய தமிழ்ப் பெண்கள் ஏனைய இன மத பெண்களுடன் இணைந்து பணியாற்றினார்கள்.

இலங்கை பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் சிங்கள தமிழ் இன உறவுகள் மோசமடைந்து சென்று கொண்டிருந்தது. 1970 களில் சிங்களம் அரச மொழியானமை, தரப்படுத்தல் என்பவற்றுடன் இது மேலும் மோசமானது. சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல்; தமிழ் மாணவர் பேரவை, இளைஞர் பேரவை, தமிழரசுக் கட்சி, மகளீர் பேரவை, தமிழர் விடுதலை கூட்டணி என பரிமாணமடைந்தது. இவ் அமைப்புக்களில் ஓரிரு பெண்களின் குரலை தேர்தல் கால மேடைகளில் கேட்க முடிந்தது. சுதந்திரத்தின் இரு தசாப்தங்களின் பிற்பகுதியில் பாராளுமன்ற வழியில் நம்பிக்கை இழந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய போராட்டப் பாதையை தேர்ந்தெடுத்தனர். இத்தகைய ஆரம்ப கால அமைப்புக்களும் ஆண்கள் அமைப்புக்களாகவே இருந்தன.

1975ல் சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐ.நா சபை பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலில் முற்போக்குச் சிந்தனை உள்ள பெண்களும் ஆண்களும் முன்வர ஆரம்பித்தனர். 1975 டிசம்பரில் யாழ் பல்கலைக்கழகத்தில் பெண்கள் தொடர்பான கண்காட்சி ஒன்று இடம் பெற்றது. 1980 களில் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த போது யாழ் பல்கலைக்கழக மாணவர் மட்டத்திலிருந்தும்; பெண் போராளிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடக கலைஞர்கள் தோற்றம் பெற்றனர். பெண்கள் ஆய்வு வட்டம் என்ற அமைப்பு பல்கலைக்கழகத்திற்கு வெளியே பெண்கள் சம்பந்தமான வரலாறு கருத்தியல்கள் என்பன குறித்த அறிவியல் கலந்துரையாடல்களை நடத்தியது.விளம்பரத் துறையில் பெண்கள் எவ்வளவு மோசமாக பயன்படுத்தப்படுகின்றார்கள் எனக் காட்டும் சுவரொட்டிக் கண்காட்சி ஒன்று ஈவ்லின் ரட்ணம் பல்லினப் பண்பாடு நிறுவன கட்டிடத்தில் இடம்பெற்றது. சொல்லாத சேதிகள் என்ற பெண்களது கவிதைத் தொகுப்பு ஒன்று வெளியானது. இக் கவிதைத் தொகுப்பு மூலம் அடையாளம் காணப்பட்ட கவிஞர்களே பின் ஈழத்துப் பெண் கவிஞர்களுக்கான பட்டியலில் இடம்பெற்றனர். இக்கவிதைத் தொகுப்பு தமது சமூகநிலை பற்றியும், அச்சமூகத்தில் தமது இருப்பு நிலை பற்றியும் பெண்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த விழிப்புணர்வை பிரதிபலித்தது. பெண்கள் பற்றிய தான பாரம்பரிய விம்பத்தையும் கருத்தியல்களையும் கேள்விக்குள்ளாக்கினர் இக் கவிஞர்கள்.

இக் காலகட்டத்திலேயே சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமது புதல்வர்களை விடுவிக்கக் கோரிய தாய்மார்களின் தன்னியல்பான எழுச்சிப் போராட்டத்துடன் அன்னையர் முன்னணி என்ற அமைப்பு உருவாகியது. இவ்வமைப்பு பின்னர் கிராமங்களில் கணவனை இழந்தோருக்கான வரு



ஈழ விடுதலை காண புறப்பட்ட பெண்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் அளிக்கத்தக்க வேலைத்திட்டங்களை முன் வைத்து பணியாற்றியது.

## போராட்ட குழுக்களும் பெண்களும்:

எண்பதுக்களின் நடுப்பகுதியில் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலிருந்து பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஈழம் பற்றிய கனவுகளுடன் ஆயுதப் பயிற்சிக்காக இந்தியா சென்றனர். இக் காலகட்டம் ஏற்படுத்திய வெற்றிடம், களத்தில் பெண்கள் மத்தியில் அரசியல் பிரச்சார வேலைத் திட்டங்களை முன்வைக்கக் கூடிய சூழலையும் தேவையையும் ஏற்படுத்தியது. படிப்படியாக இராணுவரீதியான தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்த போது தந்திரோபாயரீதியாகவும் ஆட்பல ரீதியாகவும் தேவை ஏற்பட்ட போது, அந்த தேவையை நிவர்த்தி செய்வதற்கு பெண்கள் உள்வாங்கப்பட்டனர். இங்கு இடதுசாரிக் கொள்கையை முன்வைத்த சில அமைப்புக்கள் ஆண், பெண் வேறுபாடின்றி அரசியல், பொருளாதாரம், இராணுவம், ஆய்வு என சகல துறைகளிலும் பங்காற்றும் தோழர்கள் அனைவரும் அடிப்படையான ஆயுதப் பயிற்சியை பெற்றிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டனர். எனினும் அனைத்து குழுக்களிலும் காணப்பட்ட ஓர் பொதுவான அம்சம் என்னவென்றால் அவை முற்போக்காக தோன்றுகின்ற பல சுலோகங்களை முன்வைத்தனர். ஆனால் நடைமுறையில் அவை ஆண்களால் நிர்ணயிக்கப்பட்ட விதி முறைகளைக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின், சிறுப்பிக்கப்பட்ட மாதிரி வடிவங்களாகவே செயற்பட்டன.

பெண்களுக்கென தனி அரசியல் இராணுவ அமைப்புக்கள் அமைக்கப்பட்டு அவற்றை நிர்வகித்து செற்படும் பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. இது குறித்து அன்னா பிரென்ஞ்லி என்பவர் கருத்து தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் நீண்ட காலமாக தமது சொந்த வீட்டு விவகாரங்களை தீர்மானிப்பதில், உதாரணமாக நிலம் கூட்டுவதையா அல்லது தண்ணீர் அள்ளிக் கொண்டு வருவதையா முதலில் செய்வது என முடிவெடுப்பது; அரிசி பருப்பு வாங்கி கையிருப்பில் வைப்பதா அல்லது புதிய பாத்திரங்கள் வாங்குவதில் அந்தப் பணத்தை செலவிடுவதா என முடிவு செய்வது என்ற வகையான அதிகாரங்களை கொண்டிருக்கின்றார்கள். வீட்டிலும் விடுதலை குழுக்களிலும் சுதந்திரம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. இரு வெவ்வேறு நிறுவனங்களிலும் ஆண்களே அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

புதியதோர் உலகம் என்ற நூல் மக்கள் விடுதலைக் கழகத்தின் உள் நிகழ்வுகளை குறிப்பாக பெண் போராளிகள் மிக மோசமாக கையாளப்பட்ட நிலைமைகளை அம்பலப்படுத்திக் காட்டியது. இத்தகைய நிகழ்வுகள் சகல விடுதலை அமைப்புக்களுக்கு உள்ளும் பல்வேறு தரங்களில் அளவுகளில் நிகழ்ந்திருக்க சாத்தியக் கூறுகள் உண்டு. இதற்கு சம்பவ ரீதியான ஆதாரங்களும் சொந்த அனுபவங்களும் சாட்சியமாக அமையும்.

ஒரு விடுதலை அமைப்பின் ஸ்தாபனக் கட்டமைப்பில் சகல துறைகள் ஊடாகவும் பெண் போராளிகள் பிரதிநிதித்துவம் பெற்று முன்னோக்கி செல்வார்களானால் அது ஆரோக்கியமானது. மாறாக தேவையின் நிர்ப்பந்தத்தினால் ஒரு குறிப்பிட்ட துறையூடாக மட்டும் (உதாரணம் இராணுவம்) வளர்ச்சியுறுவது என்பது உடலின் ஏனைய பாகங்கள் இருக்க கைகள் மட்டும் நீட்சியடைவது போல ஆரோக்கியமற்றது. இது சிலவேளை போராட்ட அமைப்பின் தன்மையின் பிரதிபலிப்பாகவும், மறுபுறம் தமிழ் சமூகம் இராணுவ மயமாக்கப்படுவதன் விளைவாகவும் இருக்கலாம்.

இத்தகைய நிலை குறித்து கலாநிதி ராதிகா குமாரசுவாமி கருத்துத் தெரிவிக்கையில் "வாழ்வை நீட்டிக் காக்கின்ற ஒரு சக்தியாகவே அன்றைய பெண் செயற்பட்டாள். ஆனால் புலிகளின் கருத்தியலில், இது இல்லாத ஒன்று. வாழ்வை விரைவில் முடித்துப் போகின்றவளே சக்தியாக உள்ளாள்;" என்று கூறினார். மேலும் கூறுகையில் ஆண், பெண் ஒருமை நிலைத் தன்மையை குறிப்பிடலாம். அதாவது ஆணையும் பெண்ணையும் ஒரே விதமாக செயலாற்ற தூண்டுதல். இரக்க சுபாவம், சகிப்புத் தன்மை, சமூகஉறவு பேணுதல், சாந்தம் இது போன்ற குணங்களை எல்லாம் மனிதர்களுடன் இணைந்து செயற்படுகையில் பெண்கள் பாவித்திருக்கின்றார்கள். இந்தப் பண்புகள், குணங்கள் எல்லாம் நீண்ட நெடுங் காலமாக பெண்ணின் பண்புகளாக இருந்து வந்துள்ளது. இவை எல்லா நிலமைகளிலும் மானுட ஆளுமைகளாக திகழ வேண்டிய முக்கியபண்புகள். இப் பெண்மைக் குணாம்சங்களை இல்லாதாக்குகின்ற நிலை பெண்ணின் வெற்றியாக இருக்காது. மாறாக ஆதிக்கம் அதிகாரம் உயர்நிலை எண்ணம் கொண்ட ஆண் உலகத்தின் வெற்றியாகத்தான் இருக்கும் என்று கூறியுள்ளார்.

மறுபக்கத்தில் ஈழத்தின் போராட்ட சூழ்நிலையானது பெண்கள் வீட்டிற்குள் கட்டுப்பட்டிருந்த ஒரு நிலையை உடைத்துள்ளது என்பது உண்மையே. தமது இருப்புக்காக உயிர் வாழ்தலுக்காக பெண்கள் அன்றாட வாழ்க்கையில் போராடி நிற்கின்ற ஒரு நிலையை இச்சூழல் தோற்றுவித்துள்ளது. இந்த நிலை நிரந்தரமானதா? எமது சமூகத்தில் பெண்களின் நிலையில் இது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதா? என்பது கேள்விக்குறியே.

ஏனெனில் போராட்ட அமைப்புக்களில் செயலாற்றி பின் சில காரணங்களால் ஒதுங்கி மணம் செய்து தனிப்பட்ட வாழ்வில் ஈடுபடும் பெண்களை நோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் அவர்களின் வாழ்வு நிலையில் அதிக மாறுதல்களை காண முடிவதில்லை. சிலர் தாலி கட்டுதல் சீதனம் வழங்குதல் என்பவற்றை தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

போர்ச் சூழலின் நேரடித் தாக்கத்தில் இருந்து விடுபட்டு வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களிடையே பூப்புனித நீராட்டு விழா முதல் சகல சடங்குகளும் இன்று மிக ஆடம்பரமாக உயிர்ப்பிக்கப்பட்டு இருப்பதைக் காணலாம். அத்துடன் சீதனம் என்பது மாப்பிள்ளையின் பொருளாதார அந்தஸ்துக்கு ஏற்ப மாறுபடுவது போல அவர்கள் வசிக்கும் நாடுகளின் பொருளாதார அந்தஸ்த்திற்கு ஏற்ப வெளிநாடுகளில் மாறுபடுவதுடன்; சீதனத் தொகையும் வெளிநாட்டுக் கரன்சிகளில் அதிகரித்துள்ளது. போராட்ட சூழல் ஏற்படுத்திய மாற்றங்களை எமது சமூகம் எந்த அளவுக்கு உள்வாங்கியுள்ளது என்பதற்கு இவை மிகச்சிறந்த உதாரணங்கள் ஆகும்.

## யுத்தம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள்:

வடக்கு கிழக்கில் கடந்த 15 வருடகாலமாக நடைபெறும் யுத்தத்தில் 8000 பெண்கள் விதவைகள் ஆகியுள்ளனர். ஒரு நாளில் சராசரியாக 45 இற்கும் அதிகமான அப்பாவி மக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றார்கள். வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் 60% இற்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர். இந் நிலையில் யுத்த நிலை தோற்றுவிக்கும் அழிவுகள், இழப்புக்கள், அத்துடன் தமது சமூகத்திலேயே தமக்கெதிரான வன்முறைகள், இராணுவ வாதம் என்பவற்றால் பெண்கள் பாதிப்புறுகின்றார்கள். இவற்றுக்கு மேலாக ஆண் துணையை இழப்பதால் குடும்பத்தின் பொருளாதார சுமையை தாங்குவதுடன் விதவை என்ற வகையில் ஓரங்கட்டப்படுவதையும் முகம் கொள்ள நேரிடுகின்றது.

உதாரணமாக அம்பாறை மாவட்டத்தை எடுத்தால் அங்கு பாதிக்கப்பட்ட 8724 தமிழர்களுள் 1652 பேர் கணவனை இழந்த பெண்கள்."ஆரம்பத்தில் சமூகம் எங்களை இரண்டாம் தரமாகவே கணித்தது. கடன் கேட்டால் கூட தரமாட்டார்கள். மங்கள நிகழ்ச்சிகளுக்கு முன்னுக்கு நிற்க விடமாட்டார்கள். பொட்டு வைத்தாலும் ஏளனக் கதை, பரிகாசம். ஆனால் எமக்கென்று ஒரு சங்கத்தை ஆரம்பித்த பின்பு எமது சமூக அந்தஸ்து உயர்ந்ததை எம்மாலேயே நம்ப முடியாமல் உள்ளது," என்பது பாண்டிருப்பு கணவனை இழந்தோர் சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கத் தலைவி திருமதி நிர்மலா தில்லைநாதனின் அனுபவத்தின் வெளிப்பாடு. இப்பகுதியில் இன்று மேற்குறிப்பிட்ட அமைப்புடன் பாதிப்புற்றோர் பெண்கள் அரங்கம், விதவைகள் நலன்புரி ஒன்றியம், பாதிக்கப்பட்டோர் மகளீர் அமைப்பு முதலான பல அமைப்புக்கள் உள்ளன.



தேயிலையின் பச்சை நிறம் செந்தமிழ் பெண்களின் இரத்தமன்றோ?

மலையகத்தை பொறுத்தவரை அங்குள்ள பெண் தொழிலாளர்களின் நிலை தனியாக எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவர்களது வாழ்க்கை நிலையும் தொழில் புரியும் நிலையும் மிகவும் மோசமானது. அப்பெண் தொழிலாளர்களின் சம சம்பளக் கோரிக்கை வென்றெடுக்கப்பட்டமைக்கு ஏனைய பெண்கள் அமைப்புக்களின் ஆதரவு பெரிதும் உதவியது என்பது குறிப்பிடத்தக்கது.

போராட்ட அமைப்புக்களிலிருந்தும், தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்களில் இருந்தும் விழிப்புணர்வு பெற்ற பெண்கள் மத்தியிலிருந்து முன்னோக்கிய பார்வையுள்ள பெண்கள் இயக்கம் ஒன்று பரிணமித்தல் அவசியம். அவ்வியக்கம் வரலாற்றுரீதியாக எமது சமுதாயத்தில் பெண்கள் வகித்த பாத்திரம், இன்றுள்ள நிலை இவை பற்றிய புரிதலுடன் பெண்கள் மத்தியில் சரியான வேலைத் திட்டங்களை முன்வைத்து செயற்படல் வேண்டும். அப்போது தான் போர்ச் சூழல் மாறினாலும் மாற்றமுறாத நிலைத்து நிற்கக்கூடிய பண்புரீதியான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் உருவாக முடியும். இத்தகைய ஒரு நிலை ஈழத்தில் பரிணமிக்க முடியுமா? □□□□□□□□□□□□□□□

'சொல்லாத சேதிகளில்' சிவரமணி சொல்லியவை:

எங்கள் தோழிகள் பலரும்
உலகில் இன்று
கண் மையையும் இதழ் பூச்சையும்
மறந்து போயினர்.
ஆனால்
தம் மணிக்கரத்தைப்
பிணைத்த விலங்கை
அறுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் ஸ்ரோர்ஸ்

தரமான இலங்கை உணவுப்பொருட்களையும் மளிகைச் சாமான்களையும் மரக்கறி வகைகளையும் குறைந்த விலையில்பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் வீடியோ கசற்றுகள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

**MURUGAN STORES**
**168, HOE STREET,**
**LONDON, E17 4QH.**

**Tel -0181-923 7770**

## அன்ரனி தமிழ்க் கடை

**WORLD STAR**

கிழக்கு இலண்டனில் ஒலி ஒளி வெளியீடுகளின் முன்னணி விநியோகஸ்தர்.

வீட்டுக்குத் தேவையான அனைத்து இலங்கை பொருட்களையும், பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

**368,Hoe street,**
**Walthamstow,**
**London,E17 9AA.**
**Tel-0181-520 3502,Fax- 0181-520 8468.**

**YOUR SATISFACTION IS OUR HAPPINESS.**

# Best wishes from,

# NATHAN & CHELVA

## Solicitors

169,Tooting High Street, London, SW17 0SY.

**Tel -0181-672 1800**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உணவில்லை, நீரில்லை, வேலையும் இல்லை
ஆனாலும் கவலையில்லை


# உண்டு அணு குண்டு




இந்திய, பாகிஸ்தான் மக்களின் வாழ்க்கை நிலை.



1974 போக்றன் அணுகுண்டுப் பரி சோதனை தளத்தில் இ.காந்தி.




பாபா அணு ஆய்வு நிலையம்



அமெரிக்க செய்மதி எவ்வளவு நேர இடைவெளியில் பரிசோதனை நிலையத்தினூடாக செல்கிறது என்பதை கணித்து அதற்கேற்ப செயற்பட்டனர். செய்மதி பரிசோதனை நிலையத்தை தாண்டும் போது, அதற்கு எந்த ஐயமும் வராதபடி போக்குக் காட்டினர். மேலும் பரிசோதனைக்கு காலநிலையும் சாதகமாக இருந்ததால் அ.செய்மதி இரகசியத்தை அறிய தவறிவிட்டது.







அணு குண்டுப் பரிசோதனையும் அது ஏற்படுத்தக் கூடிய தாக்கமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| 15 - 25 அணு குண்டு தாங்கும் தளபாடங்கள் உண்டு. | இந்தியா 65 அணுகுண்டு தாங்கும் தளபடங்களை கொண்டுள்ளது. |
| இராணுவம் - 587,000 | இராணுவம் - 1,145,000 |
| சனத்தொகை 122.5 மில்லியன் | சனத்தொகை 903 மில்லியன் |
| முஸ்லீம்கள் 117.5 மில்லியன் | முஸ்லீம்கள் 100 மில்லியன் |
| கல்வி அறிவு 35% | கல்வி அறிவு 48% |






பாகிஸ்தானின் கௌகாரி ஏவுகணை




இந்தியாவின் பிருத்வி ஏவுகணை



அணுகுண்டுகளை தாங்கிச் செல்லக் கூடிய இந்தியா வின் அக்னி ஏவுகணைகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 ஆம் பக்கத் தொடர்ச்சி

என்று நம்ப இடமுண்டு. கட்டுரைத் தொடர் 1968 உடன் அறியப்படாத காரணங்களால் நிறுத்தப்பட்டது எமது துரதிஷ்டமே. தற்போது ஆசிரியரின் மறைவுக்குப் பின் அவரது சேர்க்கைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. யாழ்ப்பாண நூல்நிலைய வரலாற்று ஆவணங்களின் தொடர்ச்சியை, 1968ம் ஆண்டுக்குப் பிற்பட்ட வரலாறாக நூலுருவாக்கித்தரும் முயற்சியை மேற்கொள்ள, யாழ் மாநகரசபையுடனும் யாழ்ப்பாண பொதுசன நூலகத்துடனும் தொடர்புள்ளவர்கள் முன்வர வேண்டும். □□□□□□□□□□□□□□

JR PRINT

Quality, Speed & Lowest Cost

Translation, Type Setting & Printing Services


Specialists in Wedding Cards

57 Boundary Rd
Walthamstow
London E17 8NQ

Tel 0181 503 6643

Fax 0181 923 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரண தண்டனை :

# பழிவாங்கும் சட்டம்

பொ.சிவகுமார்

## தீர்ப்பு - ராஜீவ் கொலை வழக்கு

1998 ஜனவரி 28ம் திகதி, 1991 மே 21ல் இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ்காந்தியினதும் அவரை சூழ்ந்திருந்தவர்களதும் (16பேர்) படுகொலை வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. ராஜீவ் கொலை வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், உளவுத் துறை பொறுப்பாளர் பொட்டம்மான், பெண்கள் உளவுப் பிரிவுப் பொறுப்பாளர் அகிலா உட்பட 41 பேர் மீது குற்றநகல் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய புலனாய்வுப்பிரிவின் (CBI-Central Bureau Of Investigation) விசேட புலனாய்வுக்குழு (SIT-Special Investigation Team) குற்ற நகலை தாக்கல் செய்தது. குற்றம் சுமத்தப்பட்ட 41 பேரில் மேற்குறிப்பிட்ட மூவரும் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்படவில்லை. அதனால் அவர்கள் மீது இந்திய சட்டப்படி வழக்குத் தொடர முடியவில்லை. மேலும் 12 பேர் தற் கொலை செய்து கொண்டனர். அதனால் அவர்களது வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஏனைய 26 பேரின் மீது தொடரப்பட்ட வழக்கு ஜனவரி 28ம் திகதி முற்றுப்பெற்றது.

ஜனவரி 94ல் பூந்தமல்லியில் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்ட வழக்கில் ஏ.நவநீதம் நீதிபதியாக கடமையாற்றினார். 98ஜனவரி 28 காலை 10.45.ற்கு தனது தீர்ப்பறிக்கையை வாசிக்க ஆரம்பித்தார். நீதிபதி 5.45இற்கு 26 குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். அதனை தொடர்ந்து தனது பேனா முனையை நீதிமன்ற வழக்கப்படி முறித்தார். இத் தூக்குத் தண்டனையானது Indian Penal Code இன் 120-B (சதி) பிரிவு, 302(கொலை) பிரிவுடன் Terrorist and Disruptive Activities (Prevention) Act - TADAவின் கீழ் வழங்கப்பட்டது. 26 குற்றவாளிகளும் கொலைத் தாக்குதலில் வெவ்வேறு வேலைகளைச் செய்திருந்த போதும் அவர்கள் அனைவரிற்கும் தூக்கு தண்டனையே வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிகள் அனைவரும் ராஜீவ்காந்தியை கொல்லும் ஒரே நோக்கத்திற்காகவே வேலை செய்துள்ளனர் என்பதே காரணமாக அமைந்துள்ளது.1993ல் நடந்த அஜய் அஜர்வால் - இந்திய ஒருமைப்பாட்டு வழக்கிலும், பம்பாய் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்ட அனைவரிற்கும் ஒரே தண்டனையே வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 15 பேர் இலங்கைத் தமிழர்கள். ஏனைய 11 பேரும் இந்தியத் தமிழர்கள். இவர்கள் பயங்கரவாத தடைச்சட்டம் TADA - Terrorist And Disruptive Activities (Prenvention) Act இன் கீழேயே கைதுசெய்யப்பட்டன். இவர்கள் மீதான வழக்கும் இச்சட்டத்திற்கு அமையவே தொடரப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 1991 யூலையிலேயே கைது செய்யப்பட்டவர்கள். ஆயினும் ஓராண்டு வரைக்கும் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. குற்றம் சுமத்தப்பட்டோர் 7 ஆண்டு காலம் சிறை வைக்கப்பட்ட பின்பே அவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனை அளிக்கப்பட்ட 26 பேரும் மறுநாள் காலை தாம் 7 ஆண்டுகால இல்லமாக இருந்த பூந்தமல்லியில் இருந்து வேலூர், சேலம், சென்னை ம.சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.) மேலும் வழக்கில் உள்ள சட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு (Supreme Court) வழக்கினை. கொண்டு செல்ல முன்பு உயர் நீதிமன்றத்திற்கு (High Court) எடுத்துச் செல்லமுடியும். ஆனால் TADAவில் நேரடியாக உச்சநீதி மன்றத்திற்கு வழக்கு எடுத்துச் செல்லப்படுவதால் குற்றவாளி உயர் நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமையை இழக்கின்றார். இத னால் தன் மீது சுமத்தப்பட்ட குற் றத்தை மறுதலிக்கும் உரிமை மறுக்கப்படுகின்றார். அத்துடன் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஆதிரை, அவர் யூலை 1991ல் கைது செய்யப்பட்ட போது 17 வயதே அடைந்திருந்தார். சர்வ தேசரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட International Covenant on Civil And Political Right - ICCPR உடன்பாட்டின் படியும் Convention on the Rights of the Child state படியும் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட குற்றவாளிகளுக்கு மரணதண்டனை அளிக்க முடியாது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட இவ் 26 கைதிகள் போல் நூற்று க்கு மேற்பட்ட நாடுகளில் வாழ் வதற்கான உரிமை மறுக்கப்பட்டு ஆயிரக்கணக்கான கைதிகள் கொல்லப்படுகின்றார்கள். குற்றவா ளிகளுக்கு வாழ்வதற்கான உரி மை இல்லையா? குற்றவாளிக ளை மனிதர்களாக கணிப்பிட முடியாதா?

**Universal Declaration of Human Rights**

*Article 3:*
Every one has the right to life, liberty, and security of person.

*Article 5:*
No one shall be subjected to torture or to cruel, in human or degrading treatment or punishment.

*Article10:*
Every one is entitled in full equality to a fair and puplic hearing by an independent and impatial tribunal, in the determination of his rights and oblications and of any criminal charge against him.



ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட ஆதிரை(இடது), சாந்தி (வலது) ஆகியோரை தமிழ் நாட்டுப் பொலிஸ் கைது செய்து கொண்டு செல்கின்றனர்.

# தவறு

நடுத்தர வயது, சோர்ந்த உடல், முழங்கால் வரை மடித்துக் கட்டிய சறம், அவன் துன்புறுத்தப்பட்டதை காட்டும் உடற் காயங்கள், பொட்டு இட்டது போல் அவன் நெற்றியை துளைத்த சன்னம்,அதிலிருந்து வடி ந்து காய்ந்த குருதி, பிடரியால் வெ ளிப்பட்ட குருதி அவன் பிடரி மயிர் களை கரும் சிவப்பாக்கியது. அது மயிர்களை மட்டுமல்ல அவன் கட் டப்பட்டிருந்த மின் கம்பப் பகுதியை யும் சிவப்பாக்கியது. இந்தக் காட்சி யை இங்கு புலம் பெயர்ந்து வந்து ள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் தம் வீட்டிற்கு அண்மையில் உள்ள பெரிய சந்திகளில் நிச்சயம் பார்த் திருப்பார்கள். இவர்கள் உண்மை யில் இத்தண்டனைக்கு உரியவர்க ளா? என்பது தண்டனை பெற்றவ ருக்கும் தெரியாது, தண்டனை கொ டுத்தவருக்கும் தெரியாது. சட்டத் தை ஆக்குவதும், அதனை பாதுகா ப்பதும், தண்டனையை வழங்குவ தும் ஒரே குழுவே செய்யும் போது நீதியை எதிர்பார்க்க முடியாது.

சவுதி அரேபியா, ஈரான் போன்ற முஸ்லீம் நாடுகளும்,இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளும், சீனா போன்ற சோசலிச நாடுக ளும், அமெரிக்கா போன்ற மேற் குலக நாடுகளும் அங்குள்ள ஆயுதக் குழுக்களும் கொடிய தண்டனைகளையும், இறுதியில் மரண தண்டனையையும் நிறை வேற்றுகின்றன. தாம் மரண தண் டனையை நிறைவேற்றுவதற்கு அவர்கள் கூறும் காரணம், இத னைக் காணும் அறியும் ஏனை யோர் இத்தவறை திருப்பிச் செய் யமாட்டார்கள் என்பது. ஆனால் நடைமுறையில் அப்படி நிகழவி ல்லை. ஈரானில் கடந்த ஆண்டு 110 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. ஆனால் இத் தொகை அதற்கு முன்னைய ஆண்டிலும் இரட்டிப்பானது. அமெ ரிக்காவில் இப்போது மரண தண்டனை விதிக்கும் எண்ணிக் கை அதிகரிக்கின்றது. சீனாவில் ஆயுள்தண்டனை கைதிகள் மர ண தண்டனைக்கு உள்ளாகின் றார்கள். இந்திய உயர் நீதிமன் றம் மிகச்சில சந்தர்ப்பங்களி லேயே மரணதண்டனை வழங்க வேண்டும் என்று கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆண்டுக்கு சில 10 பேர் வரை தூக்கில் இடப்படுகின்றார் கள். உலகெங்கும் பரந்துள்ள ஆயுதக்குழுக்களும் மரண தண் டனையை கடுமையாக நிறை வேற்றுகின்றன.

மரணதண்டனை விதிக்கப்படுவோ ரில் பெரும்பாலானவர்கள் அரசி யல் கைதிகளாகவே இருக்கின்ற னர். இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் படிக்காதவர்க ளும் ஏழைகளும் பெரும்பாலும் இத் தண்டனைக்கு உள்ளாகின்ற னர். இலங்கை உட்பட பல நாடு களில் தமது கருத்துச் சுதந்தி ரம், ஓர் இடத்தில் கூடும் உரிமை இவற்றிற்காக பலர் கைது செய் யப்பட்டு வழக்கு விசாரணை இன் றி சிறையிடப்படுகின்றனர். இன் னும் சிலர் கொல்லப்படுகின்றனர். இப்படி தண்டனை பெற்றவர்க ளில் தென் இலங்கையில் மனித உரிமைவாதி ரிச்சட்.டி.சொய்ஸா குறிப்பிடத்தக்கவர். கட்சி ஆதர வாளர்களும், சிறுபான்மை இனங் களுக்காக குரல் எழுப்பும் அமை ப்பினரும், தொழிற்சங்க உறுப் பினர்களும் மேற்குறிப்பிட்ட தண் டனைக்கு உள்ளாக்கப்படுகின்ற னர். மனித உரிமை வாதிகளும், அரசுகளை, குழுக்களை விமர் சிப்பவர்களும் இத்தண்டனைக்கு உள்ளாகின்றனர். குறிப்பிட்ட இன, மத மூலம் மற்றும் பிரதேச, சாதிய சமூகத்தை சேர்ந்தவர்கள், குறிப்பிட்ட நம்பிக்கை உடைய வர்கள் (குழுக்கள், கட்சிகள்), குறிப்பான மொழி பேசுகின்றவர் கள், நிறம் உடையவர்கள், தாம் அந்த குறிப்பான சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால் இத் தண்டனைக்கு உள்ளாகின்றனர்.

மனித நாகரிக வளர்ச்சியுடன் சட்டமும் ஒழுங்கும் நிறுவனமய ப்படுத்தப்பட்டது. ஆரம்ப காலத் தில் மத நிறுவனங்களும் அதன் பின் முடி அரசுகளும் அவர்க ளைத் தொடர்ந்து காலனித்துவ வாதிகளும் இன்று அரசாங்கங் களும் ஆயுதக்குழுக்களும் மர ணதண்டனையை வழங்குகின்ற ன.அன்று கலிலியோவையும் அரி ஸ்டோட்டலையும் மதநிறுவனங்கள் குற்றவாளிகளாக இனம் கண்டு நஞ் சூட்டிக் கொன்றனர். இத் தொகுப்பை நீங்கள் இப்போது வாசித்துக் கொண்டிருக்கும் போதே உலகின் ஒரு மூலையில் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுக் கொ ண்டிருக்கலாம்.

அமெரிக்காவில் தண்டனைக்கு உள் ளானவரை மின்சாரக் கதிரையில் இருத்தி, அவர் மீது மின்சாரத்தை பாய்ச்சி அவரை கொல்வார்கள். Old Sparky எனப்படும் மின்சாரக் கதிரையில் இருத்தப்பட்டு மின்சாரம்



1923ல் கைதிகளால் புளோறிடா மாநில சிறைக்கூடத்தில் வடிவமைக்கப்பட்ட மின்சாரக் கதிரை - **OLD SPARKY**. இதுவரை 226 ஆண் கைதிகளை இப் பூமியை விட்டு அனுப்பியுள்ளது.

பாய்ச்சப்பட்ட Pedro Medina மின் சார அலையால் உடனடியாக உயி ர் பறிக்கப்படவில்லை. மிருகங்கள் கொல்லப்படும் போது கூட அவற் றிற்கு துன்புறுத்தல் இருக்கக் கூடா து என்கிறது சர்வதேச சமூகம். அப்படியிருக்க Pedro Medinaகொல் லப்படும் போது பாய்ச்சப்பட்ட மின் சாரத்தின் அளவு உடன டியாக உயிர் இழக்கச் செய்யக் கூடிய அளவுக்கு இருக்கவில் லை. தண்டணைக்கு உள்ளான Pedro Medina வின் தலையிலி ருந்து எழும்பிய புகை அவ் அறையை நிரப்பியது. மின்சாரப் பாய்ச்சல் நிறுத்தப்பட்ட போதும் Medina வின் உடலில் அசைவு காணப்பட்டது. மருத்துவர்கள் அதனை மூளையின் செயற்பாடு என காரணம் குறிப்பிட்டனர்.

அமெரிக்காவில் மரணதண்டனை யை நிறைவேற்ற பயன்பாட்டில் உள்ள இன்னுமோர் முறை "உயிர்கொல்லி ஊசி". இவ்வூசி மூலம் உயிர் இழக்கச் செய்யும் அளவு pancuronium bromide, potassium chloride and sodium thiopental தண்டனைக்கு உள் ளானவர் மீது செலுத்தப்படும். இது செலுத்தப்பட்டு சில விநா டிகளில் இதயம் அதிர்ச்சிக்கு உள்ளாகும். ஏனைய அங்கங்கள் வீங்கி பெருக்கும். ஆனால் இந்த நஞ்சு அவ் அங்கங்களை பயன் படுத்துமளவிற்கு பாதுகாக்கும்.

இந்தியாவில் மரணதண்டனை என்பது தூக்குத் தண்டனையா கவே உள்ளது. தண்டனைக்கு உள்ளானவர் உயிர் இழக்கும் வரை தூக்கில் இடப்படுவார். கறுப்புத் துணியால் முகத்தைப் போர்த்தி கழுத்தில் சுருக்கிட்ட பின்னர் சுருக்குக் கயிற்றை தன் துப்பாக்கியால் சுட்டு யாராவது காப்பாற்றிவிடுவார்கள் திரைப்ப டத்தில். ஆனால் உண்மையில் இவர்கள் சுவாசிக்க முடியாது திணறி கால்களை உதறி பரிதா பமாக இறப்பதை எத்தனை பேர் கண்டிருக்கின்றோம்.

இன்னும் மத்திய கிழக்கில், முஸ்லீம் நாடுகளில் சவுக்கால் அடித்தல்,அங்கங்களை துண்டித் தல், மரணதண்டனைக்கு உள் ளானவர்களுக்கு தலையைத் துண்டித்தல், சுட்டுக்கொல்லுதல் என்பன பொதுவான தண்டனை முறையாக உள்ளது. மரணதண் டனைக்கு உள்ளானவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உயிர் பறிக்கப்படும் முன்னர் கொடுமைப்படுத்தப்படுவர். அதாவது தண்டனைக்கு உள்ளானவர் சித்திரவரைக்கு உட்படுத்தப்படுவர். இத்தண்டனை பொதுமக்கள் முன்னிலையிலேயே நடத்தப்படுகின்றது.

மேற்கூறிய தண்டனை முறைகள் அந்நாட்டு அரசுகளினால் அவர்களின் சட்டத்திற்கு அமையவே செய்யப்படுகின்றது. இவற்றை விட அரசாங்க பாதுகாப்புப் படைகள் சட்ட விரோதமான தண்டனைகளை (extrajudical execution) வழங்குகின்றன. மேலும் பல்வேறு நாடுகளில் இயங்கும் ஆயுதக்குழுக்களும் இப்படியான சட்டவிரோதமான கொலைகளை புரிகின்றன. இதற்கு இலங்கைத் தீவில் உள்ள தமிழீழ விடுதலை ஆயுதக் குழுக்களும் விதிவிலக்கல்ல.இலங்கை அரச படைகள் தமிழ் மக்களுக்கு எதிரான மோசமான காடைத்தனங்களை கட்டவிழ்த்துவிட்டது. இனக் கலவரங்கள் என்று குறிப்பிடும் 1956,1977, 1983ஆம் ஆண்டுகளைக் காட்டிலும் அரச படைகள் நிறைவேற்றிய திட்டமிட்ட அல்லது எழுந்தமானமான தொகையான கொலைகள் இன்றும் தமிழ் சமூகத்தால் மறக்கப்படவில்லை. குமுதினி படகு, கொக்கட்டிச்சோலை, நவாலி தேவாலயம் எனத் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இன்று எந்த ஒரு தமிழனும் இலங்கை அரசால் பாதிக்கப்படாமல் இல்லை.ஆனால் இந்த உண்மை இன்னும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை எட்டவில்லை.

ஆயுதம் ஏந்திய தமிழீழ விடுதலைக் குழுக்கள் இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல. அந்நிலையை மீறியே விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆயினும் அவர்கள் மனிதாபிமான சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டியவர்களே. மேலும் சர்வதேச சட்டங்களுக்கும் கட்டுப்படவேண்டியவர்கள். ஆனால் எந்த ஒரு ஆயுதம் ஏந்திய குழுவும் அப்படி நடந்து கொள்ளவில்லை. 1975ல் அல்பேட் துரையப்பாவிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை சில ஆயிரம் பேர் வெவ்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் வெவ்வேறு அமைப்புகளால் தமிழீழம், இலங்கை, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் கொல்லப்பட்டுள்ளனர். இத் தண்டனைக்கு உள்ளானோரில் யார் என்ன குற்றம் செய்தார்கள் என்பது பற்றிய எந்த விபரமும் எந்தக் குழுக்களிடமும் இருப்பதாக தெரியவில்லை. இவர்கள் பற்றிய ஆவணங்களில் அக்கறை காட்டப்படுவதில்லை. ஆனால் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைப்படி கொல்லப்பட்டோர் எதிர் குழுக்களின் அங்கத்தவர், ஆதரவாளர், அல்லது உறவினராக இருந்துள்ளனர். இன்னும் சிலர் விசாரணையின் போது வழங்கப்பட்ட சித்திரவதை தாங்கமுடியாது இறந்துள்ளனர். மேலும் தொகைக் கொலைகள் இன மத அடிப்படையிலேயே நிகழ்ந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிக்கின்றது.



அரசபடைகளாலும் ஆயுதக்குழுக்களாலும் கைது செய்யப்படுவோர் மனித்தன்மைக்கு மாறாக சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர்.

இக் கொடிய தண்டனைகள் மனித நாகரிகத்தினால் நினைத்துப் பார்க்க முடியாத மிருகத்தனம் நிறைந்தவை. உழன்றி, கழுவேற்றல் எனும் பழந்தமிழ்ச் சொற்களை தேடி எடுத்து கொடிய தண்டனைகளை நிறைவேற்றியது ஒரு ஆயுதக்குழு. இப்படியாக இக் குழுக்களின் தண்டனைகள் சுட்டுக் கொல்லுதல், தலை கீழாக கட்டி அடித்தல், அடித்துக் கொல்லுதல், நகங்களை பிடுங்குதல், கூராயுதங்களால் தாக்குவது, மலவாயிலால் சோடாப் போத்தல் மற்றும் அலவாங்கு செலுத்துவது. உடற்காயங்களிற்கு மிளகாய்த் தூள் இடுவது, குற்றுயிராய் எரிப்பது என மிருகத்தனமான செயல்கள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

**What is Amnesty International's stand on abuses of Human Rights by governments and opposition groups?**

Amnesty International, condemns, as a matter of principle, the torture and execution of prisoners by anyone, including opposition groups. It make this position known through its publications and the news media. It holds that governments and opposition groups (which have acquired characteristics that in practice make them similar to governments) have the responsibility for dealing with such abuses, acting in conformity with international standards for the protection of human rights.

Amnesty International expects everyone to respect international human rights standards and appeals to them to do so. An appeal from Amnesty International to opposition groups does not imply any legal or international status or recognition. It is aimed strictly at securing the protection of the human rights that Amnesty Internationl seeks to defend everywhere.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒரு தீர்வு ?

மரண தண்டனைகளும் அதனுடன் இணைந்தசித்திர வதைகளும் மனிதன் குழுக்களாக வாழ ஆரம்பிக்கும் போதிலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. போர்சியன் (நவீன ஈரான்), கர்தகீனியன்ஸ் (நவீன லெபனான்), ரோம் உட்பட பல்வேறு இடங்களிலும் மரண தண்டனைகளும் சித்திரவதைகளும் காணப்பட்டது. ஐரோப்பியர் முன்பு எப்படி தலைகளைத் துண்டித்தும் நெருப்பில் இட்டும் சித்திர வதை செய்தனர் என்பதை "Madam Tussa" இல் காணலாம். மனித நாகரீகம் இன்று பல்லாயிரம் ஆண்டுகளைத் தாண்டி வளர்ந்தும் இத் தண்டனை முறை இன்னும் மாறவில்லை. இது மனிதன் இன்னும் பண்பட இடமுண்டு என்பதையே காட்டுகின்றது.

சட்டங்கள் சமூகத்தை ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கவே அச்சமூகத்தால் உருவாக்கப்படுகின்றது. ஆனால் இச்சட்டங்கள் காலம், இடம், உருவாக்குபவர்கள் ஆகிய காரணிகளைப் பொறுத்து மாறும். இதற்கமைய தண்டனைகளும் மாறும். பிரித்தானியாவில் நரி வேட்டையாடுவது இவ்வாண்டு வரை குற்றமாக கருதப்படவில்லை. ஆனால் இவ் ஆண்டு நரி வேட்டையாடுவது குற்றம் என்கிறது சட்டம். மேற்கு நாடுகளில் கணவனாக இருந்தாலும் மனைவியுடைய அனுமதியின்றி உடலுறவில் ஈடுபட்டால் அது "பாலியல் வல்லுறவு" என சட்டம் கூறுகின்றது. ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் இது பற்றிய அக்கறை இன்னும் இல்லை. கடந்த ஆட்சிக்காலங்களில் எல்லாம் விடுதலைப்புலிகள் அமைப்பு தடை செய்யப்படவில்லை. ஆனால் இவ் ஆண்டு சந்திரிக்கா அரசு விடுதலைப் புலிகளை தடை செய்துள்ளது. ஆனால் அடுத்த தேர்தலில் வரும் அரசு அத்தடையை நீக்கலாம். உருவாக்குபவர்கள் தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப சட்டங்களை கையாளுவது சில நாடுகளில் வழக்கமாக உள்ளது.

மேலும் இந்நிலை இல்லாத சட்டங்கள் கூட தடயங்களின் அடிப்படையிலேயே குற்றவாளிகளை இனம் காண்கின்றது. மனிதன் தவறுகளுக்கு உட்பட்டவன். தடயங்களை ஆய்வு செய்யும் முறையிலுள்ள தவறுகளோ, சந்தர்ப்ப சூழ்நிலைகளோ, தன்னை குற்றமற்றவர் என நிரூபிக்க சிறந்த வழக்கறிஞர் கிடைக்காததாலோ, அல்லது பணக்கஸ்டம் அறிவின்மை ஆகியவற்றால் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்படும் வாய்ப்புகள் உண்டு. ஆயிரம் குற்றவாளிகள் தண்டிக்கபடலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கபடக் கூடாது. ஆனால் இந்தியாவில் ஏழைகளும் படிப்பறிவு அற்றோருமே மரண தண்டனைக்கு உள்ளாகின்றனர். செல்வந்தர் எவரும் அங்கு குற்றம் செய்வதில்லையா?

பிரித்தானியாவில் 1952ல் தூக்கிலிடப்பட்ட Mr. Mattan குற்றமற்றவர் என்று 46 வருடங்களிற்குப் பின் 1998ல் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்காக Mrs. Mattan 46 வருடங்கள் போராடியுள்ளார். இன்று அவருக்கு அவரது கணவரை சட்டத்தால் மீளக் கொடுக்க முடியுமா? இன்று அமேரிக்காவில் மரண தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் Leo Jones தன் மீது சுமத்தப்பட்ட கொலைகளை தான் செய்யவில்லை என்பதற்கான ஆதாரங்களை பெற்றுள்ளார். அமெரிக்க நீதிமன்றம் அதனை பரிசீலிக்கத் தயாரா? பிரித்தானிய தடயவியல் ஆய்வு நிலையம் உடற்தடயங்களை (இரத்தக்கறை) பாதுகாக்கின்றது. அங்கு பயன்படுத்தப்பட்ட மூடியில் நுண்ணுயிர்த்தொற்று நீக்கம் செய்யப்படாததால் ஆய்வுகளில் தவறு ஏற்பட்டது. இத்தவறு சில நிரபராதிகளை குற்றவாளிகள் ஆக்கியது. இச்சம்பவங்கள் பல நாடுகளில் உள்ளது. எத்தனை நாடுகள் இதனை மீள் பரிசீலனை செய்ய தயாராகி உள்ளன?

இவற்றை எல்லாம் ஆய்வு செய்கையில் இன்று கொலைக்குற்றம் சுமத்தப்பட்டவர் நாளை நிரபராதி என நிரூபிக்கப்படலாம். இன்று இந்தியாவில் விடுதலைப்புலிகள் என கைது செய்யப்பட்டோர் அடுத்த ஆட்சிக்காலத்தில் விடுவிக்கப்படலாம். இலங்கையில் குற்றம் சுமத்தப்பட்டோர் ஐரோப்பாவில் தஞ்சம் பெற்றுள்ளனர். ஆகவே தண்டனைகள் விலத்திக் கொள்ளத்தக்கவையாக இருக்க வேண்டும். ஆனால் மரண தண்டனையைப் பெற்ற ஒருவரது தண்டனையை விலத்திக்கொள்ள முடியுமா?

சட்டங்கள் ஒழுங்கு கட்டுப்பாட்டை நிலைப்படுத்தவே அன்றி தண்டிப்பதற்காக அல்ல. ஆனால் இன்று அரசாங்கங்களும் சரி ஆயுதக்குழுக்களும் சரி சட்டங்களை வகுத்துக் கொண்டு பழிவாங்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றன. இன்னும் கூறப்போனால் பழிவாங்குவதற்காக சட்டங்களைப் பயன்படுத்துகின்றனர். நீதித்துறை என்பது குற்றவாளிகளை இனம்கண்டு அவருக்கு புணர்வாழ்வு அளிக்க வேண்டும். இரட்டைக் கொலைகளுக்காக அமெரிக்காவில் பெப்ரவரியில் Karla Faye Tucker விஷ ஊசி செலுத்திக் கொல்லப்பட்டார். ஆனால் கடந்த 14 ஆண்டு சிறை வாழ்வில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. பெப்ரவரியில் மரணதண்டனைக்கு உள்ளான போது அன்று கைதான Karla Tucker உடற் கூற்றுப்படி அப்படியே இருந்தாலும் இன்று அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு புனரமைக்கப்பட்டிருந்ததை சிறைக்கூட அறிக்கைகள் காட்டுகின்றது. தாயால் 10 வயதில் வீட்டால் விரட்டப்பட்ட போதைப்பொருள் விற்கும் விபச்சாரியான Karla Tucker 14 வருட சிறைவாழ்வின் முடிவில் தன்னை சேவைக்கு அர்ப்பணிக்கும் ஓர் கிறிஸ்தவ பெண்ணாக மாறினாள். இவளாள் பலியானவரின் குடும்பத்தின் அங்கத்தவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் குரல் எழுப்பியும் அவளை சட்டம் பழிவாங்கியது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை சானத்தின் மூன்றாம் அங்கம் ஒவ்வொருவரும் வாழவதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும், தன்னை பாதுகாப்பதற்கும் உரிமை உடையவர் என்றும், ஐந்தாம் அங்கம் ஒருவரும் சித்திரவதைகளுக்கோ அல்லது கொடுமைகளுக்கோ அல்லது மனித தன்மையற்ற செயலுக்கோ அல்லது தண்டனைக்கோ உட்படுத்தப்படக் கூடாது என்றும் பிரகடனப்படுத்தியுள்ளது. இன்று பெரும்பாலும் எல்லா நாடுகளும் ஐ.நாவில் அங்கம் வகிக்கின்றன. இவர்கள் மேற்குறிப்பிட்ட சானத்திலும் கையொப்பம் இட்டுள்ளனர். விடுதலை அமைப்புக்கள் என குறிக்கொள்ளும் ஆயுத அமைப்புக்கள் ஐ.நாவின் அங்கீகாரத்தைப் பெற ஆவலாயுள்ளன. இப்படி இருந்தும் இவர்கள் யாரும் ஐ.நா மனித உரிமை சானத்தின் விதிகளுக்கு பூரணமாக கட்டுப்படவில்லை.

மரண தண்டனையானது ஒருவருடைய வாழ்வதற்கான உரிமையையும் ஒருவர் சித்திரவதைகளுக்கு உட்படாது இருக்கும் உரிமையையும் மறுக்கின்றது. இத்தண்டனைக்கு உட்படுபவர்கள் பெரும்பாலும் அரசியல் கைதிகளே. சர்வதேச மன்னிப்புச்சபை, ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல்வேறு அமைப்புக்கள் மரணதண்டனையை முற்றாக ஒழிக்கும் படி கேட்டு போராடுகின்றன. கடந்த ஆண்டு ஏப்ரலில் ஐ.நாவின் தீர்மானம் மரணதண்டனை யாவற்றையும் நிறுத்தி தண்டனையை பிற்போடும் படி கேட்டுள்ளது. மரணதண்டனைகளை ஆயுள் தண்டனைகள் ஆக்குவதே இதன் நோக்கம். மரணதண்டனை மிகவும் கொடியது. ஒருவருடைய உயிரை பறிக்கும் உரிமை சட்டத்திற்கு கிடையாது. சட்டம் பழிவாங்குவதற்கு பயன்படுத்தப்படக் கூடாது. மாறாக புணர்வாழ்வு அளிக்க பயன்பட வேண்டும். ஆகவே சகல மரணதண்டனைகளும் நிறுத்தப்பட வேண்டும். மரண தண்டனை ஒரு தீர்வு அல்ல.□□□□□□□□□□□□□

---

யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவியான செல்வி சிவரமணி ஈழத்து அரசியல் களம் பழிவாங்கிய பலரில் ஒருவர். சிறந்த பெண்நிலை வாதியும் சமாதானத்தை நேசித்தவருமான இவ் இளம் பெண் 1989இன் பின் தான் எழுதிய எல்லாக் கவிதைகளையும் தீயிலிட்டுக் கொழுத்தி தானும் அத் தீக்கே இரையானார். இன்னும் எத்தனை மாணவர்களை ஈழத்து அரசியல் பழிவாங்குமோ ?

## எமது விடுதலை

*என் இனிய தோழிகளே*
*இன்னுமா தலைவார*
*கண்ணாடி தேடுகிறீர்?*
*சேலைகளைச் சரிப்படுத்தியே*
*வேளைகள் வீணாகின்றன.*
*வேண்டாம் தோழிகளே*
*வேண்டாம்.*

*காதலும் கானமும்*
*எங்கள்*
*தங்கையர் பெறுவதற்காய்*
*எங்கள் கண்மையையும்*
*இதழ் பூச்சையும்*
*சிறிதுகாலம் தள்ளி வைப்போம்.*
*எங்கள் இளம் தோழில்*
*கடமையின் சுமையினை*
*ஏற்றிக் கொள்வோம்.*

*ஆடையின் மடிப்புகள்*
*அழகாக இல்லை என்பதற்காக*
*கண்ணீர் விட்ட நாட்களை*
*மறப்போம்.*
*வெட்கம்கெட்ட*
*அந்த நாட்களை*
*மறந்தே விடுவோம்.*

*தேசங்கள் பலதிலும் மனிதர்கள்*
*இன்னும்*
*பிச்சை பாத்திரங்களை*
*வேலைக்கு அமர்த்தியுள்ளனர்.*
*நாமும் பெறுவோமா*
*தோழர்களே*
*பிச்சைப்பாத்திரத்தோடு*
*நாளை ஒரு விடுதலை?*

*நாம் எல்லாம்*
*இழந்தோம் எனினும்*
*வேண்டவே வேண்டாம்*
*எங்களில் சிலரது விடுதலை மட்டும்;*
*விலங்கோடு கூடிய*
*விடுதலை மட்டும்*
*வேண்டவே வேண்டாம்!*

*தோழர்களே*
*விலங்குகளுக்கெல்லாம்*
*விலங்கொன்றைச் செய்த பின்*
*நாங்கள் பெறுவோம்*
*விடுதலை ஒன்றை.*

சொல்லாத சேதிகள் கவிதைத் தொகுதியில் சிவரமணி எழுதிய கவிதை.
இவரது தோழி செல்வி ஈழத்து அரசியல் களத்தில் காணாமலேயே போய் விட்டார். இவர் சர்வதேச PEN விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ம் நூற்றாண்டிலும் ............

வாசிம் அக்பர்

மனிதனின் அறியாமை பலவழிகளில் அகன்றுள்ளது. தன்னிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி உலகமே ஒரு குடும்பமாக 21ம் நூற்றாண்டை எதிர்நோக்குகின்றது. என்றாலுமின்று உலக மக்கள் பல கோணங்களில் பிரச்சனைகளை எதிர்நோக்கி உள்ளார்கள். தேவைகளின் அதிகரிப்புடன் அரசியல் பொருளாதார இராணுவரீதியாக பல சிக்கல்களை எதிர் நோக்கும் நிலையில் 21ம் நூற்றாண்டு பற்றிய சிந்தனைகள் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஒருபுறம் விஞ்ஞான அறிவியல் ஆக்கசக்தி தேடல்களாக மனித செயற்பாடுகள் மலர மறுபுறம் இப் புமியையே அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் நடவடிக்கைகளிலும் மனிதன் ஈடுபடுகின்றான்.

21ம் நூற்றாண்டு ஜனனிக்க இருக்கும் இத்தருணம் அச்சுறுத்தல்கள் நிறைந்ததாக உள்ளது. மனித நாகரீகம் எதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை கணிப்பிடுவது இடியப் பச்சிக்கலாக உள்ளது.

உலக சனத்தொகை 10.05 பில்லியன் இருக்கும் போது 1.0 பில்லியன் மக்கள் உணவு இன்றி வருந்தப் போகின்றார்கள். இராணுவ தொழில்மய நடவடிக்கையால் சூழல் பாதுகாப்பு, மனித அழிவுகளை எல்லாம் நினைக்கும் போது புதிய நூற்றாண்டின் இறுதி வரை மனித இனம் நீடிக்குமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது என்று தனது நியாயமான ஐயப்பாட்டை ரஸ்ய பேராசிரியர் விளதிமீஸமினேவ் கூறுகின்றார்.

ஆபிரிக்காக் கண்டத்தில் வறட்சியும் வறுமையும் கொடிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இங்கு சராசரி நபர் விகித கலோரி நுகர்வு 2200 அலகுகிலும் குறைவாக உள்ளது. விவசாய பண்ணை உற்பத்திகள் தொடர்ந்து வீழ்ச்சியுற்று வருகின்றன. இதே வேளை சனத்தொகை வருடத்திற்கு 3.2% வீதமாக அதிகரிக்கின்றது. 2000ம் ஆண்டில் ஆபிரிக்காவின் சனத்தொகை 700 மில்லியனை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் பல இலட்சம் மனித உயிர்கள் பட்டினியால் இறக்கும் அபாயம் எதிர் நோக்கப்படுகின்றது.



ஆசிய, இலத்தின் அமெரிக்காவில் உள்ள மிக வறிய 15 நாடுகளின் தனிநபர் விகித வருடாந்த வருவாய் 1.6% வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது. இத்தகைய வறிய நாடகளின் எண்ணிக்கை தொடர்து அதிகரித்து வருவதாக ஐ.நா சபையின் யுனிசெப் நிறுவனம் அறிவித்துள்ளது. இந் நாடுகளின் பொருளாதார நிலையும் மிகக் கீழ் மட்டத்திலேயேயுள்ளது. அரசியல் இராணுவ சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள் இந் நாடுகளைப் பீடித்துள்ள கொடிய நோய்களாகத் தொடர்கின்றன.

பொதுவாகப் பெருமளவு சனத்தொகையை கொண்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி மட்டம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஒரு காலத்தில் ஏகாதிபத்திய, குடியேற்றவாத ஆட்சிளின் கீழிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளில் இன்றும் அன்றைய ஏகாதிபத்தியவாதத்தின் தாக்கங்கள் நிலவுகின்றன. அன்றைய காலனித்துவ நாடுகள்; குடியேறிய நாடடின் வளங்களை கவர்ந்து சென்றனர். மேலும் அந் நாடுகளின் தன்னிறைவுப் பொருளாதாரத்தை சிதைத்து வர்த்தக பொருட்களை பயிரிட்டனர். இன்று இவற்றின் ஒட்டு மொத்த விளைவாக தமது மூலப் பொருட்களை முடிவுப் பொருட்களாக்கும் தொழில் நுட்ப அறிவோ சாதனங்களோ இல்லாததால்; மூலப் பொருட்களை மூலப் பொருட்களாகவே குறைந்த விலையில் ஏற்றுமதி செய்கின்றனர். பின்னர் ஏற்றுமதி செய்த நாடுகளிலிருந்தே தமக்கு வேண்டிய முடிவுப் பொருட்களை கூடிய விலையில் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

இப்படியாக இ.அமெரிக்க, ம.கிழக்கு, ஆசிய, ஆபிரிக்க நாடுகளில், அந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின்மையினாலும், அந் நாடுகளின் ஆயுதபலத்தை பெருக்கவும் வெளி நாடுகளில் வட்டிக்கு கடன் பெற்றன. இக் கடன்கள் பொருளாதாரத்தை ஊக்கப் படுத்துவதற்கு பதிலாக சேவைகளை வழங்குவதற்கும், இன்னும் சிறிது பணம் அதிகாரம் படைத்தவர்களிடமும் போய் சேர்கிறது. இதனால் கடனை செலுத்த மீண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


டும் கடன் பெற வேண்டிய நிலையில் இந்நாடுகள் உள்ளன. இம் மூன்றாம் உலக நாடுகள் மீண்டும் கடனை பெறுவதற்கு முன்னைய கடனை செலுத்த வேண்டும். அப்படி செலுத்தும் பட்சத்தில் தமது நாட்டு மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை செய்ய முடியாது போகின்றது.

இந் நிலையிலிருந்து மீள கடன் கொடுத்த கைத்தொழில் நாடுகள்(US,Canada, Jappan,Russia, and the Europian Union)1988ல் கூடுதலாக பாதிக்கப்பட்ட நாடுகளின் கடன்பழுவை 33%ஆல் குறைத்தது. 1991ல் இக்கடன் பழுவை 50%ஆக குறைத்தது.1994ல் இதனை 67%ஆக்கியது.கடன் வழங்கும் நாடுகளின் பாரிஸ் கூட்டமைப்பு கடந்த இரு தசாப்தங்களில் (US) $300 பில்லியன் கடனை குறைத்து கொண்டது அல்லது அதனை அடைப்பதற்கு இலகுவான சில ஏற்பாடுகளை செய்திருக்கிறது. இதை விடவும் உலக வங்கியும் (World Bank), சர்வதேச நாணய நிதியமும் (International Monetary Front) புதிய திட்டமொன்றை 1996 இல் அறிமுகப்படுத்தியது. அதன் படி HIPC - Highly Indebted Poor Countries என்ற வரையறைக்குள் வருகின்ற நாடுகளின் கடனை; அந் நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தில் 20% முதல் 25% வரை கொடுப்பதன் மூலம் தமது கடனை அடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் HIPC க்குள் அடங்கும் 41 நாடுகளில் 14 நாடுகள் தமது கடன்பழுவை இல்லாமல் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படியிருந்தும் வளர்முக நாடுகளால் இப் பிரச்சனையிலிருந்து மீள முடியாமல் உள்ளது. இதற்கு தொடர்ந்தும் முன்னாள் கால னியாதிக்கத்தை மட்டும் குறை கூறிக் கொள்வது எந்த பலனையும் ஏற்படுத்தாது. உலகசந்தைக்கு இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தொடர்ந்து

வெளிநாட்டுக் கடன் வெளி நிதி நிறுவனங்கள் உட்பட-IMF (பில்லியன் ரூபாயில்)

| | |
|---|---|
| 1987 | 147.1 |
| 1988 | 162.6 |
| 1989 | 203.7 |
| 1990 | 233.7 |
| 1991 | 276.0 |
| 1992 | 314.3 |
| 1993 | 376.8 |
| 1994 | 436.3 |
| 1995 | 501.9 |




அடிப்படை இலாபத்தைப் பெறத் தவறிவிடும் பொருட்களையே ஏற்றுமதி செய்கின்றனர்.அத்துடன் தமது நுகர்வுப் பாவனைக்கு பெற்றோலியம் கைத்தொழில் மற்றும் உணவுப் பொருட்களைப் பெருமளவில் இறக்குமதி செய்கின்றனர். இதனால் இவ் வளர்முக நாடுகள் வளர்ச்சியடைய முடியாமல் பின்தங்கி உள்ளன. அதற்கு பின்வரும் விடயங்கள் காரணமாக இருக்கின்றன.

(1) தொழில்நுட்பப் பயிற்சியின்மை
இருக்கும் வளங்களை சிறப்பாக பயன்படுத்தாமையும் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை விலங்கு வேளாண்மைகளில் விருத்தி காணப்படாமை.

புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தாததால் கூடிய செலவில் குறைந்த உற்பத்தியையே மேற்கொள்கின்றனர். உதாரணமாக பரம்பரையியல் பொறியியல்(Genetic engineering) தொழில்நுட்ப வளர்ச்சி மரபுமுறை பயிர்ச்செய்கைக்கு மாற்றீடாக, செயற்கை பயிர்ச்செய்கை(Artificial farming Geneticaly engineered food) மேற்கு நாடுகளில் வளர்ந்துள்ளது. இதன் மூலம் குறைந்த வளங்களைக் கொண்டு கூடிய பலன் பெறமுடியும். அதாவது இலங்கை இந்தியாவில் சில பசுக்களில் இருந்து பெறும் பாலை நியுசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஓரே பசுவிலிருந்து பெறமுடியும். இப்படியான தொழில்நுட்ப வளர்ச்சியால் தான், அவுஸ்திரேலியாவும் நியுசிலாந்தும் பாலுணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ய இன்றும் இலங்கை போன்ற நாடுகள் இறக்குமதி செய்த வண்ணமுள்ளன.

(2) கைத்தொழில்த் துறையில் முன்னேற்றமின்மை
மரபு முறை குடிசைக் கைத்தொழில்களில் மட்டுமே கூடிய கவனம் செலுத்தப்படுவதால் சந்தையின் புதிய தேவைகளை ஈடு செய்வதில் நாட்டம் காட்டப்படவில்லை. இன்றும் கயிறும் துடைப்பமும் தான் கைத்தொழிலாக உள்ளது. இலத்திரனியல் பொருட்கள், கணணியியல் நுட்பங்கள் இன்னமும் வளர்முக நாடுகளின் கைத்தொழில் துறையால் உள்வாங்கப்படவில்லை.

(3) சனத்தொகை துரித வேகத்தில் பெருகுவது
சீனப் புரட்சியை தலைமை தாங்கிய மாஓ சேதுங் "ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போது ஒரு வாயுடன் மட்டும் பிறக்கவில்லை இரு கைகளுடனும் பிறக்கிறது," என்று கூறியிருந்தார். ஆனால் இன்று சீனா நாம் இருவர் நமக்கு ஒருவர் என பிரச்சாரப்படுத்தும் அளவிற்கு சனத்தொகை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டது. எழுபதுக்களின் நடுப்பகுதியில் இந்திரா காந்தி தலைமையிலான அரசாங்கம் கருத்தடையை பலவந்தமாக அமுல்படுத்த முயன்றது. இன்று நாம் இருவர் நமக்கு இருவர் என்று பிரச்சாரப்படுத்துகிறது. மேலும் கருத்தடை செய்து கொள்வோரிற்கு ஊக்குவிப்புத் தொகையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கிறது. இவை எல்லாம் சனத்தொகை அதிகரிப்பின் விளைவுகளுக்கு ஏற்பட்ட மறுதாக்கமாகும். ஒரு நாட்டின் சனத்தொகை அதிகரிக்கும் போது அந் நாட்டு மக்களாளிற்கு இடையே பகிரப்படும் வளங்களும் நலன்களும் குறைக்கப்படும். மாறாக தேவைகள் அதிகரிக்கும்.

தற்போது அதிக சனத்தொகை கொண்ட 3ம் உலக நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு எதுவித வைத்திய பராமரிப்பும் எட்டாதுள்ளது. இந் நிலையில் இவ்வடிப்படை தேவைகளை வழங்க,வளங்களையும் உதவகளையும் பயன்படுத்துவதால் பொருளாதாரம் வளர்ச்சி பெற முடியாதுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு பல காரணிகள் தடையாக இருந்தாலும் சனத்தொகை பெருக்கம் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார ஸ்தாபனம் (World Health Organization) குடும்ப கட்டுப்பாட்டிற்கு பெருமளவு பணத்தை செலவிடுகிறது.

(4) அதிகார துஷ்பிரயோகங்களும் அரசாங்க பணம் ஒருசிலர் கைகளைசென்றடைவதும்

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு இது மிகவும் குறிப்பிடத்தக்க காரணமாயுள்ளது. வறிய நாடுகள் வளர்ந்து வரும் நாடுகள் பெரும்பாலானவற்றில் மிகக் குறைந்த வீதமான பிரிவினர் மிக செல்வ செழிப்புடனேயே இருக்கின்றனர்.

இன்று பொருளாதார வீழ்ச்சி கண்டுள்ள இந்தோனேசியா ஆட்சித் தலைவர் சுகற்ரோவின் குடும்பச் சொத்து US $ 40 பில்லியனிற்கு மேல் என கணிப்பிடப்பட்டுள்ளது. இது அந் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் (Gross National Product) அரைப் பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு : தமிழ் நாட்டு மக்களின் அதிஸ்டம் ஜெயலலிதாவிற்கு சுகாற்ரோ போல் பெரிய குடும்பம் இல்லை.



பிலிபின்ஸின் இமெல்டா மார்க்கோஸை விஞ்சிய ஜெயலலிதா, $14 பில்லியன் சொத்துக்களை கொண்டிருந்தார். இவரது இல்லத்தில் 10000 பட்டுச் சேலைகளும் $2 பில்லியன் பெறுமதியான நகைகளும் கண்டெடுக்கப்பட்டது. இவருக்கு எதிராக எட்டு வழக்குகள் உள்ளன. இன்றய அரசு இவரது வழக்கை புலன் விசாரணை செய்த அதிகாரிகளை இடமாற்றம் செய்துள்ளது.

இவ் அதிகார துஸ் பிரயோகங்கள் இந்தோனேசியாவில் மட்டுமல்ல இந்தியா, பாகிஸ்தான்(உலகின் மிகவும் சீர்குலைந்த நாடுகளில் ஒன்று.) போன்ற ஆசிய நாடுகளிலும் பெரும்பாலான ஆபிரிக்க, இ.அமெரிக்க, ம.கிழக்கு நாடுகளிலும் நடைபெறுகின்றது.

(5) பாதுகாப்பிற்கு என்ற போர்வையில் ஆயுதப் போட்டியில் ஈடுபடுவது

அணு சக்தி வளம் என்பது உலக பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயமாகவே உள்ளது. அணுவாயுத ஒழிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா மறுத்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் 1974ல் அணுகுண்டுப் பரிசோதனையை நடத்தியதன் பின் கடந்த மே 11இல் ஏறத்தாள கால் நூற்றாண்டிற்கு பின் மூன்று அணு குண்டு பரிசோதனையை நடத்தியுள்ளது. இதே தினத்தில் CHANEL 4 ற்கு பேட்டி அளித்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனார்ஸி பூட்டோ;பாகிஸ்தான், இந்தியாவின் இந் நடவடிக்கைக்கு விரைவில் பதில் அளிக்கும் என எச்சரித்திருக்கிறார். பாகிஸ்தானதும் இந்தியாவினதும் பூனையும் எலியும் விளையாட்டு உபகண்டத்தில் அணுஆயுத பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளிற்குமிடையிலான ஆயுதப் போட்டி இந்து சமுத்திர பிராந்தியத்தில் சமாதானத்திற்கு மிகுந்த அச்சுறுத்தலாக அமையும் என்பது இராணுவ விமர்சகர்களின் கருத்தாக உள்ளது. இதைவிட இஸ்ரேலிற்கும் அரபு நாடுகளுக்கும் (ஈரான், ஈராக், லிபியா, சவுதி அரேபியா) இடையிலான போட்டி மத்திய கிழக்கை உலகின் ஸ்திரனமற்ற வலயமாக கணிக்க வைத்துள்ளது. மேலும் முன்னாள் ரஸ்யாவில் இருந்து குடியரசுகளாகியுள்ள நாடுகளும் இன்று ஆயுதப் போட்டியில் இறங்கியுள்ளன. இந் நாடுகளின் இப் போட்டி; அந் நாடுகளில் பதட்டத்தையும் பொருளாதார வளர்ச்சியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

(6) சீரற்ற அரசியல் நிலைமைகள்

இது நாடுகளை வளர்ச்சியடையவிடாது தடுக்கின்றது. இவற்றிற்கு, பெறப்படும் உதவிகள் பொருளாதார வளர்சிச்சிக்கு பயன்படுத்தப்படாமையே முக்கிய காரணமாய் இருந்துள்ளது. அந்நாடுகளின் வளங்கள் அங்கு நடைபெறும் அரசியல் குழப்பத்தாலும் உள்நாட்டு யுத்தத்தாலும் விரயமாக்கப்படுகின்றது. இலங்கை போன்ற உள்நாட்டு யுத்தம் நடைபெறும் நாடுகளில் இராணுவச் செலவீனங்கள் நாட்டின் செலவீனத்தில் பெருமளவு பகுதியை சுவீகரித்துக்கொள்கிறது. இது இந் நாடுகளை மேலும் மேலும் பின்னடையச் செய்கிறது.

## மீள ஏதும் வழியுண்டா ?

மேற் குறிப்பிட்ட காரணிகள் பொருளாதார வளர்ச்சியை பின்னடையச் செய்யும் அதேவேளை இதன் மறுதலையும் நிகழ்கிறது. அதாவது பொருளாதார வளர்ச்சியின்மை மேற்குறிப்பிட்ட காரணிகளை தோற்றுவிக்கிறது.

தொழில்நுட்ப அறிவின்மையால் (மரபுரீதியான பயிர்ச் செய்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை கையாள்வதால் உச்ச பயன் பெற முடியாமல் போகும்.) குறைந்த செலவில் கூடிய உற்பத்தியை பெற முடியாமல் போவதால் ஏற்றுமதியை அதிகரிக்கவோ (அல்லது இறக்குமதியை குறைக்கவோ), சந்தையில் ஏனைய போட்டியாளர்களுடன் போட்டியிடவோ (விலை, தரம் போன்றவற்றில்) முடியாது போகின்றது. இதனால் பொருளாதார வளர்ச்சி குன்றுகிறது.

இதன் மறுதலையை நோக்கினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பின் தங்கியிருந்தால் நாட்டுமக்களிற்கு அடிப்படை தேவைகளான சுகாதாரம் கல்வி ஆகியவற்றை அரசாங்கத்தால் வழங்க முடியாது. அதாவது பொருளாதார வளர்ச்சி குன்றியிருந்தால் கல்வியை அளிக்க முடியாது. கல்வியறிவு குன்றிய மக்களிடம் தொழில்நுட்ப சாதனங்களையோ ,குடும்பநலத் திட்டங்களையோ கொண்டு செல்ல முடியாது. மேலும் இம் மக்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வழிகள் (தகவல் தொடர்பு சாதனங்கள்) வளர்ச்சியடையாமலேயே இருக்கும். இதனால் தட்டி கேட்பதற்கு யாரும் அற்ற நிலையில் அதிகார துஸ்பிரயோகங்கள் தலையெடுக்கும். அத்துடன் தொடர்ந்து அதிகாரத்தை தக்க வைக்கவும் அதிகாரத்தை கைப்பற்றவும் இன, மத, பிரதேச, சாதிய உணர்வுகளை தூண்டி உள்நாட்டு யுத்தங்களிற்கு வழி சமைக்கிறது.

இங்கு பொருளாதார வளர்ச்சியும் அதனை பாதிக்கின்ற காரணிகளும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்புடையன. ஆகவே தனியொரு காரணியை பிரித்தெடுத்து தீர்வு காணமுடியாது. மேலும் பாதிக்கப்பட்ட நாடுகள் ஓர் பரிமாண வளர்ச்சிக்கு ஊடாகவே இந் நிலையிலிருந்து மீள முடியும்.இன்று உலகமயமாதலினால் ஒரே சமூகமாக தன்னை காணும் மனித இனம்; ஒரு பகுதி மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. ஒரே சமூகத்தில் ஒரு பகுதி நாகரீக வளர்ச்சியின் உச்ச கட்டத்தில் இருக்க மறுபகுதி கூர்ப்பின் ஆரம்பபடியில் உணவு தேடுவதிலேயே உள்ளனர். எனவே மேற்கூறிய பிரச்சனைகளில் இருந்து வறிய நாடுகளும் வளரும் நாடுகள் மீட்சி அடைய வேண்டும்.

இதற்கு வளர்ந்த நாடுகளினதும் சர்வதேச நிறுவனங்களினதும் உதவிகள் மிக அவசியம். 21ம் நூற்றாண்டில் இந்நாடுகள் தமது கால்களை உறுதிபடப்பதிக்க, தமது நாட்டு வளங்களிற்கு ஏற்ப திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட வேண்டும். இதுவே உண்மையான மனித சமூகத்தையும் உலகமயமாதலையும் எடுத்துக் காட்டும். சர்வதேச சமூகமும் அதன் தலைவர்களும் 21ம் நூற்றாண்டில் உண்மையான உலகமயமாதலை ஏற்படுத்த வேண்டும்.

இன்று வளர்ந்த நாடுகளும் பல விதமான பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. இவற்றை எல்லாம் தீர்க்க உலக நாடுகள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய உலகளாவிய பொது அமைப்புக்களும், மேலும் உறுதியாக வளர்க்கப்படல் வேண்டும். மனிதனுடைய அறிவியல் விஞ்ஞான தேடல்கள் யாவும் ஆக்கப்பணிக்காகவே அர்பணிக்கப்படல் வேண்டும்.□□□□□□□□□□□

**மனிதன் ஓர் சமூக விலங்கு. இன்று அதிஸ்ட வசமாக நாம் மேற்குலகிற்கு புலம் பெயர்ந்து வந்துள்ளோம். ஆனால் எமது நாட்டில் ஆயிரக்கனக்கான மக்கள் அல்லலுறுகிறார்கள். அவர்களை ஆதரிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. நீங்கள் அம்மக்களுக்கு ஏதாவது செய்ய விரும்பினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை, ஒக்ஸ்பார்ம் போன்ற அமைப்புகளினூடாக செய்ய முடியும். மனம் இருந்தால் இடமுண்டு.**

**உண்மைக் குறிப்புகள்**

வளர்முக நாடுகளில் நாளொன்றுக்கு 10000 மக்களில் 5 பேர் பட்டினியால் ஏற்படும் நோய்களால் இறக்கிறார்கள். உலகில் 800 மில்லியன், ஏறக்குறைய இந்தியாவின் சனத்தொகையின் 90% மக்கள் போசாக்கின்மையாலும் பட்டினியாலும் வாடுகிறார்கள்.

1997ல் வளர்முக நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகளிற்கு $ 2.17 ரில்லியனை கொடுக்க வேண்டியிருந்தது. இவ் வளர்முக நாடுகள் நாளொன்றிற்கு $ 717 மில்லியனை செல்வந்த நாடுகளிற்கு கடன் தொகையாக மீளச் செலுத்துகின்றது. வளர்முக நாடுகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் $ 482 கடனுடனேயே பிறக்கிறது. இக் கடன்களை செல்வந்த நாடுகள் தள்ளுபடி செய்தால், கிட்டத்தட்ட 21 மில்லியன் குழந்தைகளை 2000ஆம் ஆண்டில் காப்பாற்ற முடியும்.

G8 - உலகின் தொழில் நுட்பவளர்ச்சி அடைந்த அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், ஜப்பான், கனடா, ரஷ்யா ஆகிய நாடுகள் பேர்மிங்காமில் மே நடுப்பகுதியில் கூடின. கூட்டம் நடைபெற்ற இடத்தை மனிதச் சங்கிலியாக வளைத்த ஐரோப்பிய, அமெரிக்க, ஸ்கன்டிநேவிய மக்கள் வறிய நாடுகளின் கடனை தள்ளுபடி செய்யக் கோரினர். ஆனால் ஜேர்மனியும் ஜப்பானும் முழுமையாக தள்ளுபடி செய்ய பின்வாங்கின. கடனை தள்ளுபடி செய்வதால் மட்டும் இந் நாடுகளின் பிரச்சனையை தீர்க்க இயலாது என இவ் இரு நாடுகளும் உறுதியாக முழுக் கடனையும் தள்ளுபடி செய்ய மறுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிரியல் இரசாயன ஆயுதங்கள்

# பேரழிவிற்கான ஆயுதங்கள்

ஜெ.ஸ்ரீபாலன்

இவ் ஆயுதங்களை விவசாயத்தில் களை கொல்லிகளாகவும் கிருமி நாசினிகளாகவும் பயன்படுத்தினான் மனிதன். ஆனால் தன் சக மனிதனையே பீடையாகவும் களையாகவும் அவன் எண்ண முற்பட்டபோது, சக மனிதர்களுக்கு எதிராகவும் அவ் உயிர்க் கொல்லிகளை திருப்பினான். வைரஸ் போர்த்திய போர்வையைக் கொண்டு ஆங்கிலேய, ஸ்பானிய காலனித்துவவாதிகள், செவ்விந்தியர்களைத் தாக்கியதுடன் சக மனிதனுக்கு எதிரான உயிரியல் இரசாயன தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது. இவ் உயிரியல் இரசாயனக் கொல்லிகள் இன்று நடுத்தர தூர ஏவுகணைகளில் இணைக்கப்பட்டு ஏவப்படலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நாளை இவ் உயிர்க் கொல்லிகள் நெடுந்தூர ஏவுகணைகளிலும் இணைக்கப்படலாம்.



அணு குண்டுகளைப் போன்று இவையும் பெரும் உயிர் அழிவுகளை ஏற்படுத்தக் கூடியன. ஆனால் அணுகுண்டுகளை விடவும் பன்மடங்கு குறைந்த செலவில் இவ் உயிரியல் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யமுடியும். இவ் உயிர்க் கொல்லிகளை உற்பத்தி செய்ய பாரிய பிரதேசமோ தொழில்நுட்பமோ அவசியமில்லை. உதாரணமாக சாதாரண பாற்பொருள் உற்பத்திக் கூடங்களிலேயே மிகப்பயங்கர உயிர்க்கொல்லி ஆயுதங்களை உற்பத்தி செய்ய முடியும். அதி பலம் வாய்ந்த அமெரிக்க நாட்டிற்கு எதிராக ஈராக் போன்ற மூன்றாம் உலக நாடு சண்டையிடும் போது இவ் இரசாயன உயிரியல் ஆயுதங்களையே பழிவாங்க பயன்படுத்த முற்படும். காரணம் அந்நாட்டின் தொழில்நுட்பமும் பொருளாதாரமும். அத்துடன் பயங்கரவாதக் குழுக்கள் கூட இவ் வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளன. இவ் உயிரியல் இரசாயனப் பொருட்களை இடத்திற்கு இடம் நகர்த்துவது இலகு. இவை ராடர் சாதனங்களின் கதிர்களுக்கு சிக்காது தப்பிவிடும். வழமையான ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் சாதனங்களால் அவற்றைக் கண்டுபிடிக்க இயலாது. இவ் ஆயுத தாக்குதல்களில் இருந்து அமெரிக்க நகரங்களைக் கூட பாதுகாப்பது மிகக் கடினமானது என பென்டகன் தெரிவிக்கின்றது.

மனித சமூகத்திற்கு எதிரான உயிர்க் கொல்லிகளின் பாவனை:

உயிரியல் இரசாயன ஆயுதங்கள் ஏற்படுத்தும் பாதிப்பு நாம் நினைப்பதை விட மிகவும் பயங்கரமானது. இரண்டு உலக யுத்தங்களின் போதும் இப்பாரிய உயிர்க் கொல்லிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் உலக யுத்தத்தில் Chlorine, Phosqene, mustard gas ஆகியவை பயன்படுத்தப்பட்டிருந்தது. ஹிட்லருடைய நாசி இராணுவம் யூதர்களை காற்று இறுக்கமான அறைகளில் அடைத்து கடுகு வாயுவை பரப்பி கோரமாக கொலை செய்தனர். ஜப்பானிய இராணுவத்தினர் தாம் கைதிகளாகப் பிடித்த சோவியத் சீன துருப்புக்கள் மீது உயிரியற் கொல்லிகளை பரிசோதித்தமை இப்போது தெரிய வந்துள்ளது. இக் கைதிகள் பிளேக், தைபொயிட், கொலரா, அந்தொறக்ஸ் நோய்க்கிருமிகள் செலுத்தப்பட்டு, அந்நோய்களுக்கு உட்படுத்தப்பட்டனர். ஜேர்மனிய படையெடுப்பிற்கு எதிராக அந்தெறக்ஸ் விதைகளை தன் குண்டுகளிலும் கனன் செல்களிலும் (Cannon Shell) பொருத்தி பிரித்தானியா பரிசோதனை நடத்தியது. பரிசோதனை நடத்தப்பட்ட Gruinard தீவு (Scotland ற்கு அப்பால் உள்ளது) நூறு வருடங்களிற்கு உயிர் வாழ்க்கைக்கு ஏற்றதல்ல என கைவிடப்பட்டுள்ளது. 1971ல் CIA ( Central Ineligience Agency ) கியூபாவுடைய பொருளாதாரத்தை முடக்குவதற்காக African Swine Ferer ஐ கியூபாவிற்குள் பரப்பியது. இதனால் 0.5 மில்லியன் (5,00,000) பன்றிகள் அழிக்கப்பட்டன. 1988ல் வடக்கு ஈராக்கின் குர்திஸ் மக்கள் மீது ஈராக் இராணுவம் இரசாயன வாயுக்கள் கொண்டு தாக்குதல் நடத்தியதில் 500 குர்தியர்கள் இறந்தனர். 3000 பேர் காயமுற்றனர். 1991ல் Gulf War Syndrome க்கும் இவ் உயிர் கொல்லிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அமைந்துள்ளது.1992ல் Kurdish Workers Party, துருக்கிய ஸ்டன்புல் விமானப் படைதள நீர்த்தாங்கியில் பொட்டாசியம் சயனைட்டைக் கலந்தது.

இதே போன்ற சம்பவம் 80களின் நடுப்பகுதியில் இலங்கையிலும் இடம் பெற்றது. யாழ் நிலாவறை கிணற்றில் கிருமிநாசினிகள் கலக்கப்பட்டது. இங்கிருந்து தான் காரைநகர் கடற்படையினர் நீர் கொண்டு செல்வது வழக்கம். 90களின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு, வாழைச்சேனை இராணுவ முகாம் மீது குளோரின் வாயுத் தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும் இலங்கையில் இருந்து பிரித்தானியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையில் நச்சுப் பொருள் கலந்திருப்பதாக அறிவித்தது, முன்னாள் ஈழ விடுதலை அமைப்பு (TEA - Tamil Eelam Army).

1995ல் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவை நடுங்க வைத்தது ஓர் மதக்குழு (Cult). Sarin



மொசாட் கொலை முயற்சியில் இருந்து தப்பிய,கமாஸ் தலைவர்.

வாயுவை நிலக்கீழ் புகையிரத நிலையங்களில் பரப்பியதன் மூலம் டோக்கியோவில் 12 பேர் இறந்தனர். 5500 பேர் வரை காயமுற்றனர். பரப்பிய வாயுவின் அளவு கூடுதலாக இருந்திருந்தால் பாதிப்பு இன்னமும் அதிகரித்து இருக்கும். இஸ்ரேலின் உளவு ஸ்தாபனமான மொசாடைச் சேர்ந்த இருவர் கடந்த ஆண்டு ஒக்டோபரில் கமாஸ் தலைவர் Khaled Meshalஐ இரசாயன பதார்த்தம் கொண்டு ஜோர்டானில் வைத்து தாக்கினர். அதிஸ்டவசமாக கமாஸ் தலைவர் உயிர் தப்பினார்.

இவ்வாறாக இரசாயன ஆயுதங்கள் மனித சமூகத்தால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு உள்ளது. என்று மனிதனுக்கு எதிராகவே இவ் ஆயுதங்கள் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டதோ அன்றே அவற்றை ஒழிப்பதற்கான குரலும் எங்கும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது.



உயிரியல் இரசாயன ஆயுதங்களிற்கு எதிராக யுத்தத்திற்கு தயாராகும் பிரித்தானிய படை வீரர்.

# உயிரியல் இரசாயன ஆயுதங்கள் எதிர் சர்வதேச சமூகம்



முதலாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து, 1925ம் ஆண்டு உயிரியல் இரசாயன ஆயுதங்கள் சர்வதேச சட்டத்திற்கு முரணானது என்று ஜெனிவா பிரகடனம் தெரிவிக்கின்றது. அதன்படி உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் தாம் உயிரியல் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யவோ, அபிவிருத்தி செய்யவோ மாட்டார்கள் என்று உறுதி தெரிவித்தன. பெரும்பாலான வல்லரசு நாடுகள் இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னதாக அவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

இதன்பின் 1972ல் உயிரியல் ஆயுத உடன்படிக்கை The US, The USSR, The UK ஆல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இவ் உடன்படிக்கை பாரிய வெற்றியைப் பெறவில்லை. இவ் உடன்படிக்கை பக்ரீரியா, வைரஸ் மற்றும் நச்சுப் பதார்த்தங்களை அடிப்படையாக வைத்து உருவாக்கும் ஆயுதங்களுக்குத் தடை விதித்தது. ஆனால் 1993ல் அமெரிக்க காங்கிரஸ், ஈரான், ஈராக், லிபியா, வடகொரியா, இஸ்ரேல், சிரியா, தாய்வான் ஆகிய நாடுகள் உயிரியல் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வதாக அறிவித்தது. மேலும் DNA (Deoxyribo Nuclic Acid) தொழில்நுட்ப வளர்ச்சியைத் தொடர்ந்து, நுண் அங்கிகளை அவற்றின் மிக கூடுதல் அழிவிற்கான ஆயுதமாக பயன்படுத்தும் முயற்சி சில நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக ஈராக் அமெரிக்காவின் மேரிலண்டில் இருந்து தன் கல்வி அமைச்சினால் 70 தொகுதி நுண் அங்கிகளையும், நச்சுப் பதார்த்தங்களையும் கொள்வனவு செய்தது. நுண்ணங்கிகளை வளர்க்கும் வளர்ப்பு ஊடகங்களை ஐரோப்பா ஏற்றுமதி செய்தது. முதலாம் வளைகுடா யுத்தத்தின் 3 ஆண்டுகளின் பின் கூட (94ல்) மருத்துவ தேவைக்காக Anthrax வளர்ப்பு ஊடகம் ஈராக்கிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய நிறுவனத்தினால் விற்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிடம் 80களின் நடுப்பகுதியில் பெற்ற Antharax பக்ரீரியாவை, 1989ல் மூளை, மார்பு பகுதிகளில் இரத்த இழப்பை ஏற்படுத்தக் கூடிய அங்கியாக தன் DNA தொழில்நுட்பத்தால் ஈராக் உருவாக்கியது. 1986ல் உயிரியல் ஆயுத உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் அவ்வுடன்பாட்டை உறுதியாக அமுலாக்க சில அளவு கோல்களை சேர்த்துக் கொண்டன. அதன்படி நாடுகள் யுத்த நோக்கற்ற உயிரியல் ஆய்வுகள், எதிர்பாராத நோய்ப் பரவல்கள்,உயிரியல் ஆய்வு கூடங்கள் எத்தகைய நுண்ணங்கிகளைக் கையாளத்தக்க வசதி படைத்தன என்ற தகவல்களை வெளியிடும்படி கேட்கப்பட்டன. மேலும் சுதந்திர கண்காணிப்பு அமைப்பின் மூலம் சந்தேகப்படும் படி உயிரியல் ஆயுதங்களை நாடுகள் உற்பத்தி செய்தால், அவற்றைக் கண்காணிக்க நடவடிக்கை எடுத்தனர். ஆனால் அந் நாடுகளின் அரசியல் நடைமுறைகளும் நம்பிக்கையீனங்களும் உடன்படிக்கையை மிகவும் பல வீனப்படுத்தின.



குர்திஷ் மக்கள் மீது இரசாயன வாயுக்களை பரப்பி 500 பேரை கொன்றதுடன் 3000 பேரிற்கு காயங்களை ஏற்படுத்தியது ஈராக் இராணுவம். இவ் இரசாயனத் தாக்குதலால் ஆயிரக்கணக்கான குர்திஷ் இன மக்கள் அயல் நாடான துருக்கிக்கு இடம் பெயர்ந்தனர். குர்திஷ் மக்கள் ஈராக்கிடம் இருந்து பிரிவினை கோரி போராடுகின்றனர்.

இரசாயன ஆயுத உடன்படிக்கையும் அமெரிக்க, ரஸ்ய நாடுகளுக்கு இடையிலான நம்பிக்கை யீனங்களால் நீண்ட காலம் இழுபறி நிலையிலேயே இருந்தது. (இப்போது நெருக்கடி நிலையிலும் பெயர் குறிப்பிடாத Unscom ஐ சேர்ந்த அமெரிக்கப் பரிசோதகர், ரஸ்யா ஈராக்கிற்கு இரசாயன ஆயுத தொழில்நுட்பங்களை விற்றுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார்.)கடந்த ஆண்டு ஏப்ரலில் இரசாயன ஆயுதங்களை அழிக்க அமெரிக்காவும் ரஸ்யாவும் உடன்பட்டன. இது மிகவும் மந்த கதியிலேயே நிகழ்கின்றது. மேலும் அவற்றை பாதுகாப்பாக அழிக்க வேண்டியிருப்பதால் செலவும் ஏற்படுகின்றது.

ஏப்ரல் 1991ல் வளைகுடா யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து சர்வதேச கண்காணிப்புக் குழு ஈராக்கின பேரழிவுக்கான ஆயுதங்களையும் 150Km இற்கு அப்பால் செல்லக் கூடிய ஏவுகணைகளையும் (Bullistic / Scud Missiles) செயழிழக்கச் செய்ய /அழிக்க உருவாக்கப்படடது. இதுவே United Nations Special Commission.. Unscom $120 மில்லியனை தனது வேலைக்கு செலவிட்டுள்ளது. 1000 பரிசோதகர்களை தன் பரிசோதனைக்கு பயன்படுத்தியுள்ளது. இவ் அமைப்பு ஐ.நா பாதுகாப்புச் சபையின் 687 வது தீர்மானத்தின் படி அணு ஆயுதங்கள் சம்பந்தப்படாத பகு தியை அமுல்படுத்தும்.

## நடைமுறையில் உள்ள உயிரியல் இரசாயன ஆயுதங்கள்

**Anthrax (அந்தெறக்ஸ்)**

மண்ணுள் வாழும் பக்ரீரியா *Bacillus Anthracis.* 8500லீற்றர் பக்ரீரியாவின் வித்துக்களை ஈராக் தயாரித்துள்ளது. இதனை 50 குண்டுகளிலும் 5 ஏவுகணைகளிலும் நிரப்பியுள்ளதாக ஐநா தெரிவித்துள்ளது. இவ் வித்துக்கள் பல தசாப்தங்களுக்கு வாழ்தகவுடையன. பிரித்தானியாவில் 2 ஆண்டுகளிற்கு முன் இவை திடீரென வெளிப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பக்ரீரியாவை கொண்ட குண்டுகள் வீசப்பட்டால் இவ்வித்துக்களை சுவாசிப்பவர்கள் 36 மணி நேரத்தில் உயிரிழக்க நேரிடும். மேலும் இப் பக்ரீரிய வித்துக்கள் மண்ணுள் வாழும் தகவுடையதால் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான பகுதி பல தசாப்தங்களுக்கு, மனித வாழ்க்கைக்கு உகந்ததாக இருக்காது.

இதனால் பாதிக்கப்படுவோர் காய்ச்சல், பக்ரீரிய தாக்க அதிர்ச்சி ஆகியவற்றிற்கு உட்படுவர். மேலும் மூளையையும் முள்ளந்தண்டையும் இது பாதிக்கும். அத்துடன் சுவாசத் தொகுதியை செயலிழக்கச் செய்யும். இதனால் பாதிக்கப்படுவோருக்கு இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை பென்சிலின் வழங்கப்பட வேண்டும். ஆனால் குணம்குறி தோன்றி 36 மணி நேரத்தில் வழமையாக மரணம் சம்பவிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவும் வளைகுடாவும்



இன்றும் இரசாயன ஆயுதங்கள் உற்பத்தியில் வளைகுடா நாடுகளே முன்னணியில் நிற்கின்றன. மேலும் உலகில் ஸ்தீரமின்மையற்ற இடமாகவும் வளைகுடாவுள்ளது. வளைகுடா நாடுகள் இவ்வுயிரியல் இரசாயன ஆயுதங்களையும் அத் தொழில்நுட்பத்தையும் மத அடிப்படைவாதக் குழுக்களுக்கு வழங்குகின்றன. இக் குழுக்கள் பெரும்பாலும் அமெரிக்க எதிர்ப்பு கொண்டவை. அத்துடன் அமெரிக்காவும் பெரும்பாலான வளைகுடா இயக்கங்களை பயங்கரவாதக் குழுக்களாக தடைசெய்துள்ளது.

இப் பின்னணியை வைத்துக் கணிக்கும் போது இரசாயன உயிரியல் ஆயுதங்கள் எதிர்கால யுத்த தளபாடமாக மாறும் அபாயம் உண்டு. "இன்னும் 5 ஆண்டுகளில் பயங்கரவாதக் குழுக்களின் பெரும் பலமாக இரசாயன உயிரியல் ஆயுதங்கள் உருவாகும்" என பென்டகன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதை மேற்கு நாடுகள் எப்படி சந்திக் கப்போகின்றன என்பதில் தான் 21ம் நூற்றாண்டின் பாதுகாப்பு தங்கி உள்ளது.

யுத்த வரைமுறைகளுக்கு மாறாக உருவாக்கப்பட்டுள்ள, இவ் இரசாயன உயிரியல் ஆயுதங்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். எதிரியை மட்டுமல்ல பொதுமக்களையும் கோரத்தனமாக பெருமளவில் அழிக்கக் கூடியவை இவ் ஆயுதங்கள். தம் உயிர் வாழ்க்கையைத் தக்க

## இரசாயன உயிரியல் ஆயுதங்கள் 21ம் நூற்றாண்டின் பாதுகாப்பை அச்சுறுத்தும்.

வைப்பதில் இருந்து ஓர் சமூக விலங்காக கூர்ப்படைந்துள்ள மனித சமூகம், எதிரியைத் தாக்கும் போது கூட மனிதாபிமானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அதுவே உயர்ந்த பண்பு. மேலும் இரசாயன உயிரியல் ஆயுதங்கள் ஆயுதம் ஏந்தாத பொது மக்களையும், எந்த பாரபட்சமும் இன்றி அழித்துவிடும். இவ் ஆயுத ஒழிப்பு ஐ.நா சபையின் பூரண கட்டுப்பாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ் ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு எதிராக ஐ.நா சபை கடுமையான நடவடிக்கைகள் பற்றி ஆராய வேண்டும். மேலும் யாரும் இவ் ஆயுதங்களை உற்பத்தி செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்த தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் ஐ.நாவின் மீது எந்த நாடும், அமைப்பும் அழுத்தங்களை பிரயோகிக்ககூடாது. ஐ.நா பூரண சுதந்திரத்துடன் இயங்க சகல நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

1925, 1972ம் ஆண்டு இரசாயன உயிரியல் ஆயுத ஒழிப்பு பிரகடனங்களை எல்லா நாடுகளும் அமைப்புக்களும் எந்தவித நிபந்தனையும் இன்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாதவிடத்து இரசாயன உயிரியல் ஆயுதங்கள் 21ம் நூற்றாண்டின் பாதுகாப்பை அச்சுறுத்தும்.

**Botulinum** (பொட்ருலினம்)

இது தொழில்நுட்பப்படி நச்சுப்பதார்த்தம். ஆனால் இதன் செயற்பாட்டு நிலையில் இது ஓர் இரசாயன ஆயுதம். *Clostridium Botulinum* என்னும் பக்றீரியாவால் உற்பத்தியாக்கப்படுவது தான் Botulinum / Botox. இதில் 1900 லீற்றரை ஈராக் தனது 100 குண்டுகளிலும் 16 ஏவுகணைகளிலும் நிரப்பியுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. இது தொற்றுதலை ஏற்படுத்தாது. ஆனால் இப்பதார்த்தம் வாய் மூலமோ சுவாசம் மூலமோ அல்லது வெளிப்புற காயங்களாலோ உடற் தொகுதியைச் சென்றடைந்தால் நரம்புத்தொகுதியில் நிகழும் செய்திக் கடத்தல்களை குழப்பும். இதன் காரணமாக வாதம் ஏற்பட்டு, சுவாசத் தொகுதி செயல் இழக்கும்.

இன்றைய நவீன விஞ்ஞானத்தில் மிகக்கூடிய நச்சுத்தன்மை வாய்ந்த பதார்த்தத்தில் இதுவும் ஒன்று. பொட்ருலினம் உள் எடுக்கப்பட்ட அளவிற்கு ஏற்ப அதன் தாக்கமும் அமையும். பாதிப்பிற்கு உள்ளானவருக்கு சிறந்த காற்றோட்ட வசதி செய்து கொடுக்க வேண்டும். இதிலிருந்து மீள பல மாதங்கள் எடுக்கும்.

**VX**

நரம்புத்தொகுதியைத் தாக்கும் ஓர் நச்சுப்பதார்த்தம். திரவநிலையில் மேற்பரப்பின் ஊடாக உட்செல்லும். வாந்தியை ஏற்படுத்தும். பாதிக்கப்பட்டவருக்கு விரைவில் மரணம் சம்பவிக்கும். இதுவும் சதாமின் ஆயுத தளபாடங்களில் இணைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது. ஆனால் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்காணிப்பு



வழமையான ஆயுதங்களைப் போன்று இரசாயன உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் கடினமானது. இரசாயன உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் நுண்ணங்கிகள் நாளாந்த பாவனைப் பொருள் உற்பத்தி செய்யும் இடங்களிலேயே உற்பத்தி செய்யலாம். குறிப்பாக பாலுணவு உற்பத்தி இடங்கள்.

மேலும் இப்பேரழிவிற்கான ஆயுதங்களை உற்பத்தி செய்ய உபயோகப்படுத்தும் நுண் அங்கிகள், மருத்துவ பரிசோதனைக்கு பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. அதனால் இந் நுண் அங்கிகளை அவர்கள் வைத்திருந்தாலும் மருத்துவ ஆய்வுகளுக்கு என்று கூறி தப்பித்துக் கொள்கிறார்கள். அத்துடன் ஒரு தொழிற்பாட்டு முறையூடாக நுண் அங்கிகளை அபத்தான அங்கிகளாக மாற்றினால், எதிர்த் தொழிற்பாட்டினூடாக அவற்றை சாதாரணமானவையாக மாற்ற முடியும். Vacine உற்பத்தியாகும் ஆய்வு கூடம், உயிர்க் கொல்லி உற்பத்தியாகும் ஆய்வு கூடமாக மாற்ற சில நாட்களே போதும். மேலும் நுண் அங்கிகள் தகுந்த ஊடகத்தில் சில மணி நேரத்திலேயே பல்கிப் பெருகும். இதனால் உற்பத்தி இலகுவானது.

## ஈராக்கில் Unscom உறுப்பினர்

இப்படியான தடைகளை கடந்து உயிர்க் கொல்லிகளைத் தான் உற்பத்தி செய்கிறார்கள் என்று நிருபிப்பது கடினமான செயல். இதனை நிருபிக்க கொள்வனவு செய்யப்பட்ட, உற்பத்தி செய்யப்பட்ட நுண் அங்கிகளின் அளவு, வளர்ப்பு ஊடகங்கள், அவற்றின் அளவு, (குறிப்பிட்ட ஓர் நுண் அங்கி குறிப்பான ஓர் ஊடகத்திலேயே வளரும்.) ஆய்வு கூடங்களின் பாதுகாப்புத் அளவீடு, (கையாளும் நுண் அங்கிகளின் அபாயத்தை பொறுத்து அவற்றை உற்பத்தி செய்யும் இடங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும்.), அவ் ஆய்வு கூடங்களில் பணிபுரிவோரின் மீதான மருத்துவ பரிசோதனைகள், (அவர்கள் கையாளும் நுண் அங்கிகளின் தாக்கம் அவர்களது உடலில் காணப்படலாம்.), ஆய்வு கூட குறிப்புகள், செய்மதிப் படங்கள் என்பவை ஆய்வுகள் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது, எப்படியான நுண்அங்கிகள், எதற்காக பயன்படுத்தப்பட்டன போன்ற தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். இதன் அடிப்படையில் நாடுகளோ, அமைப்புகளோ உயிர்க் கொல்லிகளை உற்பத்தி செய்கின்றனவா? என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள முடியும்.

ஒருவன் குற்றம் புரியும் போது அவனை அறியாமல் சில தடயங்களை விட்டுச் செல்கிறான். இத் தடயங்களே அவனை காட்டிக் கொடுக்கின்றது. ஒரு தனி மனிதனின் செயலே கண்டுபிடிக்கப்படும் போது, பாரிய அளவில் ஒரு அரசோ குழுவோ இவ் உயிர்க் கொல்லிகளை உற்பத்தி செய்தால் நிச்சயம் அதற்கான தடயங்கள் கிட்டும்.

**Ricin** (ரெசின்)
ஒரு வகை அவரைக்குடும்ப பயிரில் இருந்து ரெசின் பிரித்தெடுக்கப்படுகின்றது. ஈராக்கில் பாரிய அளவில் இது செய்கை பண்ணப்படுகின்றது. ஈராக் 10 லீற்றர் வரை உற்பத்தி செய்து தனது 15mm ஆட்லறி ஷெல்களில் நிரப்பியுள்ளதாக ஐநா தெரிவிக்கின்றது. பல்கேரிய உளவுத்துறையைச் சேர்ந்த Georgi Markov ஐ ரஸ்ய உளவுப்பிரிவு ரெசின் கொண்டு தாக்கி லண்டனில் கொலை செய்தனர். ரெசினுக்கு எதிரான அதாவது அதனை செயலிழக்கச் செய்யும் எந்த பதார்த்தமும் இன்னமும் கண்டு பிடிக்கப் படவில்லை.

**Aflatoxin** (அவ்ளோரொக்சின்)
*Aspergillus Flavus* என்னும் உணவுப் பொருட்களில் வளரும் பங்கஸில் இருந்து அவ்ளோரொக்சின் உருவாகின்றது. ஒரு வகை கடலையில் இப் பங்கஸ் விரும்பி வளரும். இதனை ஈராக் பெருமளவில் உற்பத்தி செய்கின்றது. 2200 லீற்றர் அவ்ளோரொக்சினை ஈராக் பிரித்தெடுத்துள்ளது. 7 குண்டுகளும் 4 ஏவுகணைகளும் அவ்ளோரொக்சினைக் கொண்டுள்ளதாக ஐநா தெரிவித்துள்ளது. இக்குண்டுகளால் ஈராக் தாக்கினால் தாக்குதலுக்கு இலக்கானோரின் நிர்ப்பீடணத்தொகுதி பாதிக்கப்படும். மேலும் ஈரல் புற்று நோயையும் ஏற்படுத்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி பயங்கரவாதம்



பயங்கரவாதக் குழுக்கள் தமக்கிடையே வலைப் பின்னல் போன்று தொடர்புகளை வளர்த்துள்ளன.இவர்கள் உயிரியல் இரசாயன ஆயுதங்களை எப்படி பொது மக்கள் மத்தியில் பரப்புவது என்பதிலும் பயிற்சி பெற்றுள்ளனர்.மேற்குநாட்டுப் புலனாய்வு, அமைப்புகளின் கணிப்பின்படி, 2000 ஆண்டில் இப்பயங்கரவாதக் குழுக்கள் உயிரியல் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த முற்படும் என அஞ்சப்படுகிறது.

மேலும் தீவிரவாதிகளும் பயங்கரவாதிகளும் விமானக்கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளன. இன்னும் சில நாடுகளில் விமானங்களை கொள்வனவு செய்யவும் முடியும். தற்கொலை கொலையாளிகள், விமானத்தில் / வாகனத்தில் வெடிகுண்டுகளுடன் சென்று, அணு நிலையங்களை தாக்கினால், அதனால் ஏற்படும் கதிர்வீச்சு பாரதூரமாக அமையும். இத் தாக்குதல்களை வெற்றி கொள்ளக் கூடிய நிலையிலா அவற்றின் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன? பிரித்தானியாவில் அதிஉச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள Centre for Applied and Reaserh (CAMR) தாக்குதலுக்கு இலக்கானால், உலகின் மிகக் கொடிய வைரஸ், பக்ரீரியா என்பன வளிமண்டலத்துடன் கலந்து பரவும். இவ் ஆய்வு கூடத்தில் AIDS, Ebola போன்ற கொடிய வைரஸ்கள் ஆய்வுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

நாடுகள் பயங்கரவாதத்தில் இறங்குமேயானால், உயிர்க் கொல்லிகளை தேர்வு உயிர்க் கொல்லிகளாக மாற்றி ஓர் குறிப்பிட்ட இனத்தை அழிக்கச் செய்ய முடியும். இன்றுள்ள DNA தொழில்நுட்பத்தின் மூலம் அழிக்கப்பட வேண்டிய இனத்தின் DNA அடையாளத்தை பிரித்தெடுத்து, அதனை நுண் அங்கியின் DNA யில் செலுத்துவதன் மூலம், நுண் அங்கியை குறிப்பிட் அடையாளம் உள்ள இனத்தை மட்டும் தாக்கச் செய்ய முடியும். இப்படியான முயற்சிகள் எதிர் காலத்தில் நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் நிச்சயம் உண்டு. குறிப்பான இனம் குறிப்பான நோய்க்கு நீர்ப்பீடனம் இல்லாதவர்களாய் இருந்தால் அந் நோய்க்கான கிருமியை அவ் இன மக்கள் மீது பரப்பினால், அம்மக்கள் அந்நோயை எதிர்க்கும் ஆற்றல் அற்று இறந்து விடுவார்கள். இதனையே அன்றய காலனித்துவ வாதிகள் செவ்இந்தியரை அழிக்க இதனையே கருவியாக்கினர்.

இரசாயன உயிரியல் ஆயுதங்களை அழிப்பது இலகுவான காரியம் அல்ல. அவற்றை உற்பத்தி செய்யாது இருப்பதே மனிதசமூகத்திற்கு பெரும் ஆறுதல் தரும். ஆனால் இதனை செய்ய முன்வராத பயங்கரவாத அரசுகளும்குழுக்களும் சர்வதேச சமூகத்தால் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும். அப்படியான சர்வதேச அமைப்பிற்கு எந்த நிர்ப்பந்தமும் நிபந்தனையும் இருக்க்கூடாது. ஆனால் நடைமுறை அப்படி இல்லை. ஆயினும் அழிவிற்கான பாதை தடுக்கப்பட வேண்டும்.

Unscom ஈராக்கில் கடந்த 7 வருட பரிசோதனையில் குறிப்பிடக் கூடிய அளவு உயிரியல் இராசாயன ஆயுதங்களையும் அதனை காவாக் கூடிய ஏவுகணைகளையும் அழித்துள்ளது. ஆனால் அது ஈராக்கின் முழு உயிரியல் இரசாயன ஆயுதங்களின் என்ன விகிதம் என்பது கணிப்பிட முடியாத மர்மமாகவே இருக்கின்றது. ஈராக்கின் இவ் ஆயுதங்கள் நிலத்தின் கீழேயே உருவாக்கப்பட்டு சேமிக்கப்படுவதால் அவற்றை தாக்கி அவ் ஆயுதங்களை செயழிழக்கச் செய்யும் ஏவுகணைகளை அமேரிக்கா இப்போது உருவாகியுள்ளது. அமேரிக்கா கடந்த 7 ஆண்டுகளில் நவீன யுத்த தளபாடங்களை உருவாக்கியுள்ளது. வளைகுடா யுத்தம் 11 ஆரம்பமானால் இவற்றை எல்லாம் ஈராக்கில் பரிசோதிக்க அமேரிக்கா தயார் நிலையில் உள்ளது.


ஆனால் 21ம் நூற்றாண்டில் தமது தலைநகரங்களை தாக்க முற்படும் அதி பயங்கரவாதிகளை சர்வதேச சமூகமும் அதன் அரசுகளும் கையாளப் போகின்றன என்பதை பொறுத்தே 21ம் நூற்றாண்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். □□□□□□□□

**Colostridium Perffingens** (கொலஸ்ரிடியம் பேர்வின்ஜின்ஸ்)
உணவை நஞ்சூட்டும் ஒரு வகை பக்ரீரியாவாகும். இவ் வித்துக்கள் மண்ணுள் வாழ்தகவுடையவை. ஈராக் 340 லீற்றர் கொள்ளளவு உடைய இவ்வகை பக்ரீரியாவை வைத்திருக்கின்றது. இதனை தனது ஆயுதங்களிலும் நிரப்பியுள்ளதாகவும்; அதன் எண்ணிக்கை தெரியவில்லை; என்றும் ஐ.நா தெரிவிக்கின்றது. இப் பக்ரீரியா தாக்கினால் Gas Gangrene என்னும் நோய் ஏற்படும். வெளிக்காயங்களின் ஊடாக இந் நுண்ணங்கி ஊடுருவினால் காயம் பெரிதாகும். வலி ஏற்படும். மேலும் ஜோன்டிஸ், அதிர்ச்சி இவற்றைத் தொடர்ந்து இறப்பு ஏற்படலாம்.

**Sarin** (சரின்)
நவீன பீடைகொல்லிகளுக்கு ஒப்பானது. இவ்வாயுவே டோக்கியோவில் Aum Shinrkgo Cult குழுவால் பயன்படுத்தப்பட்டது. மார்புத்தசைகளைச் செயலிழக்கச் செய்யும். 15 நிமிடங்களில் மரணம் சம்பவிக்கும்.

Mustard Gas (கடுகு வாயு), Agents 5 ஏனைய நோய்க்கிருமிகள் (சின்னமுத்து - வைரஸ்) இவற்றையும் ஆயுதங்களாக பயன்படுத்துகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண நூல் நிலையம் : ஓர் ஆவணம்.

என்.செல்வராஜா

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல் நிலையத்தின் வரலாற்றை விளக்கும் அரிய ஆவணமொன்று நூலுருவில் வெளிவந்திருக்கின்றது. மூதறிஞர் க.சி. குலரத்தினம் அவர்கள் 1982ம் ஆண்டுக்காலப் பகுதியில் தமது அரிய ஆவணச் சேர்க்கையில் இருந்த பல மூல ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுத்த, பல்வேறு வரலாற்றுத் தகவல்களைத் தொகுத்து சுவையாக யாழ்ப்பாணத்து ஈழநாடு பத்திரிகையில் 20/7/1982 தொடக்கம் 18/8/1982 வரை தொடராக வெளியிட்டிருந்தார்.

1981ம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி யாழ் நூலகம் எரியுண்ட வேளை, தமிழ் மக்களிடையே பரவலாக கிளர்ந்தெழுந்த நூலக உணர்வுக்குத் தீனியாக, இக்கட்டுரைத் தொடர் அமைந்தது. 27வது தொடருடன் (தொடரும்) என்ற குறிப்புடன் இறுதிப் பகுதி வெளிவந்தது. 1933ம் ஆண்டு யாழ்ப்பாணத்து முதல் நூல் நிலையம் சிறு கொட்டிலில் தவழத் தொடங்கியது முதல் 1968ம் ஆண்டு அன்றைய நூலகர் வே.இ.பாக்கியநாதன் அவர்கள் நூலகர் பதவியைத் துறந்து விரிவுரையாளரானது வரையிலான 35 வருடகால யாழ் நூலக வரலாற்றை க.சி.குலரத்தினம் அவர்கள் விரிவாகவும் ஆதாரபூர்வமாகவும் காலவாரியாக எழுதியிருந்தார்.

**ஆவணங்களைப் பேணுவதில் காணப்படும் அக்கறையை விட மூடச்சடங்குகளுக்காக அவற்றை இழக்கத் தயாராயிருக்கும் எம் இனத்தின் மன நிலை மிகவும் கவலைக்குரியது.**

தற்போது மித்ர வெளியீடாக வெளிவந்துள்ள இந் நூலில் ஆசிரியரின் கட்டுரைத் தொடருக்கு மேலும் அணி செய்யும் வகையில், புதுக்கோட்டை மேலைச் சிவபுரி கணேசா செந்தமிழ் கல்லூரி நூலகர் ந.முருகேச பாண்டியன் அவர்களின், கோபுரவாயில் முன்னுரையும், கலாநிதி வே.இ.பாக்கியநாதன் அவர்களின் நுழைவாயிலும், திரு.எஸ்.பொ அவர்களின், திருக்கடைக்காப்பும் அமைகின்றன.

ஆவணங்களுக்கும் தமிழருக்கும் இடையே காணப்பட்ட நெருக்கமற்ற தொடர்பும் வரலாற்றுரீதியாக முருகேசபாண்டியனால் ஆராயப்பட்டுள்ளது. பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஏடுகளை பொங்கி வரும் ஆற்றுடன் கலந்துவிடும் ஆடிப் பதினெட்டாம் நாள் சடங்கு மூலம் எத்தனையோ ஏடுகள் தமிழகத்தில் அழிக்கப்பட்டமை, ஆவணங்களைப் பேணுவதில் காணப்படும் அக்கறையை விட, மூடச்சடங்குகளுக்காக அவற்றை இழக்கத் தயாராயிருக்கும் எம் மினத்தின் மன நிலையை வெளிக்காட்டுகின்றது. இது கவலைக்குரியதே.

யாழ்ப்பாண பொதுசன நூலகமும் எரிந்து 16 ஆண்டுகள் ஆகின்றன. அன்றைய அழிவை மிகப்பெரும் பேரழிவாக, இனத்தின் கலாச்சாரப் படுகொலைக் களமாக, இன்னும் எவ்வாறெல்லாமோ வர்ணித்து வருத்தம் தெரிவித்துக் கொண்டோம். இப்போதும் வருந்தி வருகின்றோம். ஆயினும் க.சி.குலரத்தினம் அவர்களின் ஆவணத்தை விட, யாழ்ப்பாண நூலகம் தொடர்பாக வேறோரு ஆவணமும் நூலாக்கம் பெற்றதாக அறிய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மட்டத்தில் எமது நூலகத்துக்கு நேர்ந்த அழிவு பிரபல்யப்படுத்தப்பட வேண்டுமானால் யாழ்ப பாண நூலக அழிவு பற்றிய வரலாற்று ஆவணங்கள் மேலும் நூலுருப் பெற வேண்டும். உணர்ச்சிகரமான பிரசுரங்களுடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஆதாரபூர் வமான வரலாற்று ஆவணங்கள் தொகுக்கப்பட வேண்டும்.

யாழ் நூலகம் எரிக்கப்பட்ட போது ஏட்டுச் சுவடிக ம் அரிய வரலாற்று நூல்களும் எரியுண்டன. எரியு ண்ட நூல்கள், ஏடுகளின் விபரங்கள் எங்கோ ஒரு கோவையில் இடம்பெற்றிருக்க வேண்டும். எரிந்த கட்டிடத்தின் புகைப்படங்கள் நூலக அழிவு பற்றிய பாராளுமன்ற விவாதங்கள், பன்னாட்டு அறிஞர்க ளின் கருத்துக்கள், நூலகத்தை எரித்தவர்கள் பின் நாளில் அதைப் பிரகடனப்படுத்தியவேளை இடம் பெற்ற சூடான வாதங்கள், பத்திரி கை அறிக்கைகள் இவை எல்லாம் தொகுத்து மொழி பெயர்க்கப்பெ ற்று, நூலுருவாக்கப்பட வேண்டும். சர்வதேசரீதியில், எமக்கு இழைக் கப்பட்ட அநீதியை எடுத்துச் சொ ல்ல இவை தேவை.

**சர்வதேச மட்டத்தில் எமது நூலகத்துக்கு நேர்ந்த அழிவு பிரபல்யப்படுத்தப்பட வேண்டுமானால் நூலக அழிவு பற்றிய உணர்ச்சிகரமான பிரசுரங்களுடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஆதாரபூர்வமான வரலாற்று ஆவணங்கள் தொகுக்கப்பட்டு நூலுருப் பெற வேண்டும்.**

கலாநிதி வே.இ.பாக்கியநாதனின் நுழைவாயில் உலகில் நூலகம் பிறந்த கதையை இரத்தினச் சுரு க்கமாக விளக்குகின்றது. அசீரியா, எகிப்து, பேர்கமம், ரோம், கிரேக் கம் ஆகிய நாடுகளில் நூலகம் தோன்றிய வரலாறும், இந்தியா வில் சமணம், பௌத்தம், சைவம் ஆகிய மதங்கள் பரவிய காலகட்டத்தில் நூலகங்க ளின் நிலையும் வளர்ச்சியும் சற்று விரிவாகத் தரப் பட்டுள்ளது. இறுதியாக இலங்கையில் நூலக வர லாறும் அதைத் தொடர்ந்து வட இலங்கையில் நூல கம் வளர்ச்சியுற்ற விதமும் ஆராயப்பட்டுள்ளது. இந்த நுழைவாயிலின் ஊடாக மூதறிஞர் க.சி.குல ரத்தினத்தின் வரலாற்றுப் பதிவுகளை வாசித்தறியும் போது பரந்துபட்ட நூலக வரலாற்றுப் பின்னணியில், யாழ்ப்பாண நூலக வரலாற்றின், முதல் 35 வருடங் களை அசைபோட முடிகின்றது. யாழ்ப்பாண நூலக வரலாற்றின் பின்னணியில், யாழ்ப்பாண மண்ணின் வரலாறும் அதன் மக்களின் விடாமுயற்சியும் நூலக உணர்வும் அதன் விளைவாக முகிழ்ந்த நூலகமும் எம் மனக்கண் முன் விரிகின்றது.

யாழ்ப்பாண நூல்நிலையத்தின் வரலாற்றினை வெ ளிக் கொண்டுவரும் வேளை நூலகம் உருவான கால கட்டத்தில் அதற்காக உழைத்த அனைவரை யும் ஏற்றத் தாழ்வின்றி ஆவணப்படுத்தியிருப்பது ஆசிரியரின் ஆவணவாக்க நேர்மையை எடுத்துக் காட்டுகின்றது. மத்திய இலவச தமிழ் வாசிகசா லைச் சங்கம் நிறுவிய காலகட்டத்தில் அமரர் க. மு.செல்லப்பா அவர்களின் வேண்டுகோளை ஏற்று நூல் அன்பளித்தோர் பட்டியலில் (பக்கம் 56) யாழ்ப்பாணம் வெஸ்லியன் சங்கத்தாரின் பெயர் தவறவிடப்பட்டுள்ளது. ஆசிரியரின் மூலப்பிரதியில் இப்பெயர் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண நூலகத்தின் வரலாற்றில் இடம்பெற்ற நூலகர் வரிசையில் சி.எஸ்.இராசரத்தினம் (1934-1947), க.நாகரத்தினம் (1947-1964), வெ.இ.பாக்கிய நாதன் (1964-1968) ஆகியோரின் காலப்பகுதி வரை மாத்திரமே பதியப் பெற்றிருப்பதும் சுட்டிக்காட்டப் படல் வேண்டும். 1968ம் ஆண்டுக்குப் பின் பல நூலகர்கள் சேவையாற்றியுள்ளனர். நூலகம் எரி யுண்ட வேளை நூலகராயிருந்த திருமதி ரூபாவதி நடராஜா, பின்னர் பதில் நூலகராயிருந்த சு.இரகுநா தன், தற்போது நூலகராயிருக்கும் திரு.வி.தனபால சிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர். இவர்களது சேவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும், இக் கட்டான காலகட்டங்களிலேயே வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக் கது.

யாழ்ப்பாண நூல்நிலையம் ஒரு சாட்சியம் என்ற தலைப்பில்இலங் கையின் மூத்த நூலக அறிஞர் எஸ்.எம்.கமால்தீன் அவர்கள் எழு திய எரியுண்ட நூலகம் பற்றிய நேரடி அறிக்கை அழிவின் பெறும தியை மதிப்பீடு செய்யும் வகை யில் அமைந்துள்ளது.

இறுதிப் பகுதியான திருக்கடைக் காப்பில் திரு எஸ்.பொ அவர்கள் யாழ்ப்பாண நூல கத்தின் பின்னைய நிலையை கட்டுரையாக வடித் துள்ளார். இந்தப் பகுதியே தனியொரு ஆவணத் தொகுப்பாக இந்நூலின் இரண்டாம் பாகமாக வெளி யிடப்படும் தகுதியுள்ளது. இப்பகுதியில் கோடிட்டுக் காட்டியுள்ள சம்பவங்கள், தகவல்கள், சான்றுகள், ஆதாரங்களுடன் எழுதப்படும் போது அது முழு நூலாக விரியும்.

அமரர் க.சி.குலரத்தினம் அவர்கள் ஈழநாடு பத்திரிகையில் இத்தொடரை எழுதத் தொடங்கிய வேளை ஈழநாடு ஆசிரியர் தமது குறிப்பில் பின் வருமாறு எழுதியுள்ளார். "யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை ஆரம்பித்த அச்சுவேலியூர் க.மு.செல் லப்பா அவர்களுக்கு அணுக்கத் தொண்டராய், ஆரம்பகாலத்து முன்னோடிகளுள் ஒருவராய், உதவி ஒத்தாசை புரிந்த க.சி.குலரத்தினம் அவர் கள், 50 ஆண்டு அனுபவத்தை இத் தொடர் கட்டு ரைகளில் விபரிக்கின்றார்".

இதிலிருந்து ஆசிரியர் 1983ம் ஆண்டுக் காலப்பகுதி வரையிலான வரலாற்றை எழுதத் தேவையான மூல ஆதாரங்களை ஆவணப்படுத்தி வைத்திருக்கலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMPORTERS & EXPORTERS OF INDIAN AND SRILANKAN COMMODITIES

GROCERY, OFF LICENCE & NEWS AGENTS

KRS

# K.R.S.ENTERPRISES

KRS

## Whole Salers & Retailers of Indian & Continental Food

537 High Road, Wembley, Middx, HA0 2DJ

**Tel : 0181 903 9252**

**Fax : 0181 902 0199**

**QUALITY & COMPETITIVE PRICES!**

**PLEASE COME & VIEW!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MCH FOR ALL YOUR HCM

CAR & VAN HIRE NEEDS, CALL

# MASTER CAR HIRE



**Delivery & Pickup Service**

**Competitive Low Rates**

**Airport Service**

**Executive Cars With Drivers**

**Goods Delivery Service**

**Credit Cards Accepted**

*For all requirements and further information please call us any time*

Tel 0181 542 6577 Fax 0181 542 7517

MASTER CAR HIRE
10/12 High Street, Collierswood,
London, SW 19 2AL.

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org